CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவ பூஜா விதியும் விளக்கங்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை
சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக

சிவ பூஜா விதியும் விளக்கங்களும்

ஆசிரியர் :
" சைவ சித்தாந்த சரபம் "
வயிநாகரம் — பாலகவி
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்
தேவகோட்டை

வெளியீடு :
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச்
சைவ நெறிக் கழகம்

5—1—1986

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முதற்பதிப்பு — 1986.
நூல் வெளியீட்டுத் தேதி : 5—1—1986 / 1000 பிரதிகள்
(பதிப்புரிமை ஆசிரியருக்குரியது.)

ஆசிரியர் :
'சைவசித்தாந்த சரபம்'
வயிநாகரம் — பாலகவி
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள்,
பாலருவாயர் நிலையம்,
சம்பந்தர் தெரு,
தேவகோட்டை - 623 302,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
தமிழ்நாடு மாநிலம்.

வெளியிட்டோர் ;
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச்
சைவநெறிக் கழகம்,
செயலகம் : 50. வீரமாநகரம்,
தாராநல்லூர்.
திருச்சி—620 008

அச்சிட்டோர் :
திருமுருகன் அச்சகம்,
9-A, பாபு ரோடு.
திருச்சிராப்பள்ளி - 620 002.

பாலருவாயர் நிலையம்,
5, சம்பந்தர் தெரு,
தேவகோட்டை - 623 302.

குறிப்பு : ஆசிரியர், பதிப்பாளர்களது எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, இந் நூலையோ, அல்லது எந்தப் பகுதியையுமோ, யாரும் பிரசுரிக்கக் கூடாது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

உ

சிவமயம்

பதிப்புரை

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு இம்மைப்பேறு, மறுமையின்பம் ஆகியவற்றைப் பெறும் பொருட்டுக் குரு, லிங்க, சங்கமமாகிய மூன்று திருவுருவங்களில் நின்று, பூசை வழிபாடுகளை ஏற்று, அருள் புரிவாரென்று ஞான நூல்கள் கூறுகின்றன. வழிபாடுகளை விதிப்படி செய்தாலன்றி, அதற்குரிய பயனைப் பெற முடியாது வழிபாட்டு முறை, சிவபெருமானால் அருளிச் செய்யப் பெற்ற சைவ நூலாகிய சிவாகமத்திலும், அதன் வழிவந்த சைவாசாரியர்கள் அருளிச் செய்த ஞானநூல்களிலும், விதிக்கப் பெற்றுள்ளன.

குரு — லிங்க — சங்கமமாகிய மூவகை வழிபாடுகளுள், குரு வழிபாட்டில் லிங்க சங்கம வழிபாடுகளும், சங்கம வழிபாட்டில் குரு லிங்க வழிபாடுகளும் உள்ளடங்கி இருக்கும். லிங்க வழிபாட்டில் மட்டும், குரு சங்கம வழிபாடுகள் வெளிப்பட்டு நிகழுவது உணரத் தக்கதாகும். லிங்க வழிபாடாகிய சிவபூசையில், குருமூர்த்திகளும் சிவனடியார்களும் இடம் பெறுவது கொண்டு, இதனை அறியலாம்.

வழிபாடுகளுள், முழுநிறைவுடன் நிகழுவதாகிய லிங்க வழிபாடு என்னும் சிவபூசை, பூசிப்பவர்களுக்கு மட்டும் புத்தி, முத்திகளை வழங்குவதாகிய " ஆன்மார்த்த பூசை " என்றும், அகிலாண்டங்களிலும் வாழுகின்ற அனைத்துயிர்களுக்கும் பேறுகளை வழங்குவதாகிய " பரார்த்த பூசை " என்றும் இருவகைப்படும். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும், ஆன்மார்த்த பூசையை, விதிப்படி செய்யும் கடப்பாடுடையவர்கள் என்றாலும், மானிட யாக்கை பெற்று வாழும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பேறு பெற்றவர்களில், சிலருக்கு மட்டும் தான், முறைப்படி தீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்யும் வாய்ப்பு அமைகின்றது சிவபூசை செய்பவர்கள், நூல் விதி வழுவாது செய்வது. இன்றியமையாததாயினும், செய்யும் செயல்களின் உள்ளீடுகளைத் தெளிவாக அவர்கள் அறிய வேண்டுவதும், பெரிதும் வேண்டற்பாலதாகும்.

சிவாகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிற கிரியைகளனைத்தும் ஞானத்தை வழங்கும் அடிப்படையில் அமைந்தவை. கிரியையாளர்கள், இவ்வுண்மையை உணர்ந்து, செயற்படுவார்களானால், அவ்வுண்மையுணர்வாகிய பாவனை, எளிதாகவும், விரைவாகவும், பயன் பெறும்படி செய்யும். ஆன்மார்த்த சிவபூசை முறையை, விதிப்படி அறிவிக்கும் நூல்கள் வடமொழியில் பலவாகவும், தென் மொழியில் சிலவாகவும் உள்ளன. அவற்றுட் சில, படி எடுத்தோர் — பதிப்பாளரின் கருத்துக்களைத் தழுவித் திரிபும் பெற்று விட்டன

ஆன்மார்த்த சிவபூசை செய்யும் விதிமுறையைத் தெளிவு செய்தும், பூசையில் மேற்கொள்ளப் பெறும் கிரியைகளின் உள்ளீடுகளை விளக்கியும், முத்திரைகள் - மூர்த்திகளின் வடிவங்களைப் புலப்படுத்தியும், எழுதப் பெற்ற ஒரு நூல், இன்றைய சிவநெறி பேணுபவர்களுக்கு இன்றியமையாதது என்று கருதி இக்கருத்தை நிறைவேற்றித் தர, எல்லாத் தகுதிகளும் பெற்றுள்ள எங்கள் குரு நாதர் 'சைவ சித்தாந்த சரபம்' **சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்** அவர்களின் பொன்னார் திருவடிகளைத் திரிகரண சுத்தியோடு வணங்கி எங்கள் சைவ நெறிக் கழகத்தின் முதற் பெருந் தலைவர் வயிநாகரம் சோம. கருப்பன் செட்டியார் அவர்களின் தலைமையில் விண்ணப்பித்துக் கொண்டோம்.

முறையான தென் மொழி, வட மொழிப் புலமையும், சிவாகம சித்தாந்த ஞானமும். திருவருளுணர்வும், ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களும் சிவஞானப் பேராசான், முத்தமிழ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

கவிஞர், சிவத்தொண்டின்சிகரம், சித்தாந்தப்புலவர்மாமணி 'பாலகவி' என அறிஞர் பெருமக்களாலும், விரிவுரையரசு சித்தாந்த சைவ வித்தகர், பெரும்புலவர், எனச் சைவ ஆதீன கர்த்தர்களாலும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றவர்களும், இத்தனைக்கும் மேலாக மூவாயிரம் அன்பர்களுக்குச் சிவதீட்சை செய்தருளி அவர்கள் வாழ்விலும், அவர்கள் குடும்பத்தினர் வாழ்விலும் சிவநெறியை இணைத்துள்ளவர்களும் ஆகிய எங்கள் ஞானத் தந்தை, குருநாதர் சைவவுலகத்துக்குப் பெருங்கொடையாக இந்நூலை எழுதி உதவியிருக்கிறார்கள். இவர்களின் அருட் செயலுக்கு எங்கள் கழக உறுப்பினர்கள் அனைவரின் நன்றியும், வணக்கமும் என்றென்றைக்கும் உரியதாயிருக்கின்றது.

இதனை அச்சிட்டு வெளியிடுவதற்குப் பெருந்தொகை வேண்டும் என்பதை எண்ணிக் கழக அன்பர்கள் சிறிது சிந்தித்தபோது நம் ஸ்தாபகத் தலைவர் கருப்பன்செட்டியார் அவர்கள் "தொகையைப் பற்றிய கவலை யாருக்கும் வேண்டுவதில்லை, ஐயா அவர்கள் புத்தகம் எழுதித்தந்த மறுநாளே அச்சிடும் பணியைத் தொடங்கிவிடலாம்" என்று உறுதி அளித்தார்கள். அத்தகைய நல்லுள்ளம் படைத்த பெருமகனுர் இப்போது இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் சூக்கும தேகத்துடன் வந்து நமக்கு மகிழ்ச்சியுடன் ஆசி வழங்குவார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

நூல் எழுதி முடிந்து, அச்சுக்குக் கொடுக்க ஆயத்தமாக இருக்கும் செய்தியை அறிவித்த உடனேயே யாரும் எதிர்பாராத நிலையில் நம் கழகச் செயற்குழு உறுப்பினரும், சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்ற முன்னாள் தலைவரும், சிவபூசைச் செல்வருமாகிய திரு கி. இல. பழநிச்சாமி பிள்ளையவர்கள் ரூ. 1000/ நன்கொடையாகத் தந்துதவினார்கள். இதனையடுத்து சென்னை கவுணியன் அச்சக உரிமையாளர் திரு. சிவராமன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

செட்டியாரவர்கள் ரூ 101/-ம், வளவனூர் மடம் சுந்தர சாமிகள் அவர்கள் ரூ. 101/-ம் தந்துதவினூர்கள்.

அடுத்து நம் கழகத் தலைவரும், திருச்சி சைவ சித்தாந்த சபை முதலிய பல சமய நிறுவனங்களின் தலைவரும், சிவபூசை செல்வருமாகிய சிவ நெறிப் புரவலர் ப. மூக்கப்பிள்ளை அவர்கள் ரூ. 2100/-ம், நம் கழக ஸ்தாபகத் தலைவர் திரு. கருப்பன் செட்டியாரவர்களின் அருமைப் புதல்வரும், நம் கழகத் துணைத் தலைவரும் சிவபூசைச் செல்வருமாகிய வயிநாகரம் க.சோமசுந்தரம் செட்டியாரவர்கள் ரூ 2020/ம் நம் கழக உறுப்பினரும், சிவ பூசைச் செல்வருமாகிய திருச்சி ராயல் கேப்ஸ் உரிமையாளர் திரு. K. சக்திவேல் அவர்கள் ரூ. 2000/-ம், நம் கழகத் துணைத் தலைவரும், சிவபூசைச் செல்வருமாகிய திரு. தைலா கோபால் அவர்கள் ரூ. 2000/ம் நம்கழகத்தின் குளித்தலைக்கிளைத் தலைவரும், நம் கழகச்செயற் குழு உறுப்பினரும், சிவபூசைச் செல்வருமாகிய மயிலாடி திரு. N. சுப்பிரமணிய முதலியாரவர்கள் ரூ. 2000/-ம், நம் கழகத் துணைச் செயலாளரும், BHEL பொறியாளரும், சிவ பூசைச் செல்வருமாகிய திரு. வை. கி. செல்லமணியவர்கள் ரூ. 2000/- ம், நம் கழகச் செயற்குழு உறுப்பினரும், சிவபூசை செல்வருமாகிய திரு A. R. குழந்தைவேலு செட்டியார் அவர்கள் ரூ. 2000/-ம், நம் கழகச் செயற்குழு உறுப்பினரும், சிவபூசைச் செல்வருமாகிய கோட்டையூர் திரு. அ.சி.நா.சுப. இராமையா செட்டியாரவர்கள் ரூ. 2020/-ம், நம் கழக உறுப்பினரும், சிவ பூசைச் செல்வருமாகிய திருச்சி திரு. பெ. அப்பாவு அவர்கள் ரூ. 500/- ம். சென்னை, திரு. கி. இல. பழநிச்சாமி பிள்ளையவர்கள் மீண்டும் ரூ. 1000/-ம், நம் கழகச்செயற்குழு உறுப்பினரும், சிவபூசை செல்வருமாகிய, காரைக்குடி திரு. பழ. தெ. லெ. தேனப்பச் செட்டியாரவர்கள் ரூ. 250/-ம், நம் கழக துணைத் தலைவராக இருந்த, சிவ்பூசைச் செல்வர் ஓக்கூர் திரு நா. சா. சாத்தப்ப

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

செட்டியாரவர்கள் ரூ. 200/-ம், நம் கழகச் செயலாளரும், சிவபூசைச் செல்வருமாகிய, சிவநெறிக் காவலர் ப. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ரூ. 220/-ம், நம் கழகச் செயற்குழு உறுப்பினரும், சிவபூசைச் செல்வருமாகிய, தோகைமலை திரு. து. க. கந்தசாமியவர்கள் ரூ. 101/-ம், சிவபூசைச் செல்வர் பலவான்குடி திரு. பெரி. மீ. சுந்தரன் அவர்கள் ரூ. 220/-ம் தந்துதவி நூல்வெளிவரப் பெருந்துணை செய்தார்கள்.

சிவபுண்ணியச் செல்வர்களாகிய இவர்கள் எல்லோருக்கும், திருவருளாலும், நம்குருவருளாலும் இம்மை,மறுமைப் பேறுகள் எல்லாம் நிறைவுற்று இன்பம் உண்டாகப் பிரார்த்திக்கிறோம்.

இந்நூலில் வடமொழிஎழுத்தில் மந்திரங்களை அச்சிட்டுச் சேர்க்கும் பொறுப்பை ஏற்றுச் சென்னை இரத்தினம் அச்சகத்தில் அச்சிடச் செய்து, வாங்கித் தந்த சைவசித்தாந்தப் பெருமன்றப் பொருளாளர், நம் கழக உறுப்பினர், சிவபூசைச் செல்வர், 'சைவ நெறிக் காவலர்' சிவ. வேதாசல முதலியாரவர்களுக்கு எங்கள் நன்றிஉரியது.

முத்திரைகளுக்கும், திருவுருவங்களுக்கும் வரைபடங்கள் எழுதித்தந்த தேவகோட்டை 'அப்ஸரா' செல்லப்பன் அவர்களுக்கும், அதனைப் பிளாக் செய்து கொடுத்த திருச்சி M. R. பிளாக் மேக்கர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நூலை அச்சிடுவதற்குத் தேவையான பேப்பரை, ஈரோடு சேஷாயி பேப்பர் மில் நிர்வாகிகளிடமிருந்து மில் விலைக்கே வாங்கித் தந்துதவிய திருச்சி முத்தமிழ்க் காவலர், கலைமாமணி, டாக்டர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் ஐயா அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இந் நூலை அச்சிட்டுத்தந்த, திருச்சி, திருமுருகன் அச்சகத்தினருக்கும், அதன் உரிமையாளர் பள்ளத்தூர் திரு. பழ. சுப்பிரமணியன் செட்டியாரவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குரோதன ஆண்டு, மார்கழித் திங்கள் 21 5—1—1986 சுவாதி நன்னாள், நம் குருநாதர் அவர்களின் 72 வது நாண்மங்கல விழாவும், நம் சைவநெறிக் கழகத்தின் 7 வது மாநிலச் சிவபூசை மாநாடும், காஞ்சித் திருத்தலத்தில் நடைபெறுகின்ற இந் நன்னாளில் சிவஞானக் கருவூலமாகிய இந்த நூலை வெளியிடுகிறோம். சைவ உலகம் பெற்றுப் பயன் அடைவதாக.

அன்புள்ள,

சிவநெறிப் புரவலர்	*சிவநெறிக் காவலர்*
ப. முத்துப்பிள்ளை	**ப. சுப்பிரமணிய பிள்ளை**
தலைவர்.	*செயலாளர்*

சைவநெறிக் கழகச் செயற்குழு & பொதுக்குழு உறுப்பினர்கள்.

5—1—1986
காஞ்சீபுரம்

தேவகோட்டை - 630 302.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

தீக்ஷா குரவர் துதி

யாக்கைகொடுத் தெமையிங்கே யிவை நுகர்ந்து
வருகவென எம்சி ரத்தில்
நோக்கிருநான் குடையான்முன் பெழுதுமெழுத்
தினை ஞான நோக்கம் செய்து
பூக்குமலர்க் கரத்தாலே அழித்தென்றும்
சிவபோகம் பொலியும் வண்ணம்
தீக்ஷைபுரிந் தாண்டருளும் தத்புருஷ சிவகுரவன்
திருத்தாள் போற்றி!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

சைவ சித்தாந்த சாபம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ
சிவமயம்
பாலகுருவாயர் துணை

முன்னுரை

வயிநாகரம் — பாலகவி
"சைவ சித்தாந்த சரபம்"

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

பரமகருணாநிதியாகிய சிவபெருமான், அநாதியே ஆணவ மலத்திலழுந்தி, அறிவு மழுங்கிக் கிடந்த உயிர்களுக்குத் தநு, கரண, புவன, போகங்களை வழங்கி, அவைகள் துன்பம் நீங்கிய இன்ப வாழ்வு பெறத்திருவுள்ளம் கொண்டார். அங்ஙனம் சிவ பெருமானது திருவருளால், உயிர்களுக்குக் கிடைத்திருக்கிற உடம்புகள் எல்லாவற்றிலும், மனித உடம்பாகிய தனுவும், அதனைச் சார்ந்த கரண, புவன போகங்களும் மிகமேலா னவை. ஒரு உயிர், நிலையியலும், இயங்கியலுமாகக் காணப் பெறுகின்ற, எல்லா உடம்புகளையும் பெற்று, வாழ்ந்து, இறுதி யாக மனித உடம்பைப் பெறும் என்பது, அருளாளர்கள் நமக்கு அறிவிக்கும் உண்மையாகும்.

மானிடயாக்கை பெற்று வாழுபவர் அனைவரும், இம்மை யில் பெற வேண்டுபவை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று என்றும், மறுமையில் பெறத் தக்கது வீடு என்றும், ஆன்றோர் கூறுவர். நிலையற்றவைகளாகிய அறம். பொருளின் பங்களை விட நிலையுள்ளதாகிய 'வீடுபேறு' மிகச் சிறந்ததா கும். பாசச் சேர்க்கையால் துன்புறுகின்ற உயிர், அதிலிருந்து விடுபட்டு, எந்த வேளையிலும் தன்னுடன் பிரிப்பின்றி இரண் டறக்கலந்து நிற்கும் சிவபரம் பொருளை அறிந்து, அதுவாகவே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நின்று சிவபோகம் நுகர்தலே, 'வீடு' என்று சொல்லப் பெறுவது. பேரானந்தப் பெரும் பேருகிய இவ்வீடு, சிவபெருமானது திருவருளாலன்றிச் சித்திக்காது. திருவருள், மலபரிபாகத்தாலும், மலபரிபாகம் புண்ணிய பாவங்களின் ஒப்பாலும், புண்ணிய பாவ ஒட்பு சிவ புண்ணியப் பேற்றுலும் வருவனவாம். சிவ புண்ணியப் பேறு, சிவ வழிபாட்டினுல் சித்திக்கும்.

சிவபெருமான் ஒருவரே''பரமபதி''அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்பது வேதாகம முடிபு. பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களும், ஏனைய எல்லோரும் சிவபெருமானது அடிமைகளாகிய பசுக்களேயாவர். பாச பந்தமுடைய இவர்களை, அவரவர் வினையின் வழியே, போகங்களையூட்டி ஆளுகின்ற முதன்மை, சிவபெருமானுக்கே உரியது. அதனுலேயே சிவபெருமான் ''பசுபதி'' என்று வேதாகம புராண இதிகாச முதலியவைகளில் போற்றப் பெறுகின்றுர். ''ஓம் நமோ ஹிரண்ய வர்ஞய ஹிரண்ய ரூபாய ஹிரண்ய பதயே அம்பிகா பதயே உமா பதயே பசுபதயே நமோ நம:' என்று யஜுர் வேதம் உறைப்புடன் உரைக்கும். வேத உடன்பாடுடையவர்கள் என்று, தங்களைப் பெருமைப் படுத்திக் கொள்ளும் சில புறச் சமயவாதிகள், சிவபெருமானுக்கு ஒப்பாக வேறு தெய்வங்களைக் கொண்டு, எரிவாய் நரகுக்கு இரையாவது இரங்கத் தக்கதாகும்.

எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாயிருக்கும் மலச் சேர்க்கையை,அநாதியே கொண்டிருக்கிற உயிர்கள் மலநீக்கம் பெற வேண்டுமானுல், இயல்பாகவே மலச்சேர்க்கை இல்லாதவராகிய சிவபெருமானது திருவருளொன்றையே நாடி ஒழுகுதல் வேண்டும். அங்ஙனமின்றித் தம்மைப் போலவே, மலச் சேர்க்கை உடையவராயிருக்கும் பசுவர்க்கத்தினராகிய தேவர்களை நாடி ஒழுகுதல், அறியாமையின் பாற்பட்டதேயாம். ''சிவ ஏகோத்யேய: சிவ சங்கர: சர்வம் அந்யத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பரித்யஜ்ய,'' என்பது அதர்வ சிகை. இதன் கருத்து, "பிற அனைத்தையும் விட்டு விடுக, நன்மையைச் செய்கின்ற சிவ பெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்'' என்பதாகும்.

உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்திற்குக் காரணமாயிருப்பன, அவற்றின் வினைவயத்தால் நிகழும் பிறப்பிறப்புக்களேயாம். பிறப்பிறப்புக்களை ஒழித்துக்கொண்டாலன்றித் துன்ப நீக்கத்தை வேறு எவ்வாற்றானும் பெற முடியாது. அவற்றை ஒழித்துக் கொள்ளுவதற்கு, எக் காலத்திலும் அவையில்லாதவராகிய ஒருவரது துணையை நாடுவதே, அறிவுடைமையாகும். அங்ஙனமின்றிச் செத்துப் பிறக்கின்ற தெய்வங்களைத் துணைக் கொள்ளுவோர், அத் தெய்வங்களைப் போலச் செத்துப் பிறக்கின்ற செயல்களில் நீங்க முடியாது; துன்புறுவர். தன்னைப் படைப்பார் ஒருவரின்றித், தானே எல்லாவற்றையும் படைப்பவராகவும், தன்னைக் காப்பவரொருவரின்றித் தானே எல்லாவற்றையும் காப்பவராகவும், தன்னை ஒடுக்குபவர் ஒருவரின்றித், தானே எல்லாவற்றையும் ஒடுக்குபவராகவும், விளங்குபவர் சிவபெருமானாகிய பரமபதி ஒருவரே. அவரை வழிபட்டுப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பம் பெறுவதற்கு முயலுவதே அறிவுடைமையாகும்.

'சிவ வழிபாடு' என்பது, சிவபெருமானை விதிப்படி பூசித்தலாம். இது ஆன்மார்த்தம், பரார்த்தம் என இரண்டு வகையில் நிகழும். சிவபூசையாகிய சிவ வழிபாட்டுக்கு வாய்ப்பாக அமைந்த பிறவி, மனிதப் பிறவியும், வாய்ப்பாக அமைந்த உலகம் மண்ணுலகமுமேயாம். பசுபுண்ணியங்களைச் செய்து, அவற்றில் பக்குவப்பட்டவைகளின் பயனாக, ஒருகால எல்லையளவில் விண்ணுலக வாழ்வும், அதிகாரமும் பெற்ற தேவர்களும் கூடச் சிவ பூசை செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிற மண்ணுலக மக்களுக்கு ஒப்பாக மாட்டார் என்று அருள் நூல்கள் கூறுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உயிர்கள் அனைத்தும் இயல்பாகவே அறிவுடையனவாயினும், அநாதியே அவற்றைப் பற்றியுள்ள ஆணவமல மறைப்பால், எதையும் தானாக அறியும் அறிவின்றி, அறிவிக்க அறியும் சிற்றறிவுடையனவாக இருக்கின்றன. அறிவித்தால் அறியும் தன்மையையுடைய உயிர்களுக்கு, அறிவிக்காமலேயே அனைத்தையும் அறியும் வாலறிவனாகிய சிவபெருமான், அவற்றின் பக்குவத்திற்கேற்ப, அவ்வப்போது வேண்டுவனவற்றை அறிவித்தருளுவார். முன்னைப் புண்ணியப் பேற்றால், மனித உடம்பு பெற்ற தகுதியாளருக்குச் சிவபெருமான் வேதசிவாகமங்களை அருளிச்செய்து, அவற்றின் வாயிலாக உண்மைகளை உணர்த்தியருளினார். வேத நூல், சைவ நூலாகிய, இரண்டு நூல்களில், ''வேதம்'' பொதுவான உலகர் பொருட்டும் சைவ நூலாகிய ''சிவாகமம்'' உலகரில் சிறப்பான சத்திபாதர் பொருட்டும், சிவ பெருமானால் அருளிச் செய்யநிபெற்றன.

வேதம், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்குமாம். சிவாகமம், காமிகம் முதல் வாதுளம் வரை, இருபத்தெட்டு எண்ணிக்கையை உடையது. இவ்விருபத்தெட்டனுள், சிவ சாரூபர்களாய்ச் சதாசிவ பதத்திலிருக்கும் பிரணவருக்குக் 1. காமிகத்தையும், சுதாக்கியருக்கு 2. யோகஜத்தையும், தீப்தாக்கியருக்குச் 3. சிந்தியத்தையும் காரணாக்கியருக்குக் 4. காரணத்தையும், சுசிவாக்கியருக்கு 5. அஜிதத்தையும், ஈசாக்கியருக்குத் 6. தீப்தத்தையும் சூக்ஷமருக்குச் 7. சூக்ஷமத்தையும், காலருக்கு 8. சகஸ்ரத்தையும், கணேசருக்குச் 9. சுப்ர பேதத்தையும், அம்சுவுக்கு 10. அம்சுமானையும், சதாசிவமூர்த்தி முதற்கண் உபதேசித்தருளினார். காமிகம் முதல் அம்சுமான் வரையுள்ள பத்து ஆகமங்களையும் உபதேசித்தவரும், பெற்றவர்களும் சிவரூபர்களாகையால் இவை சிவபேத ஆகமங்களெனப் பெறுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இனி, அநாதிருத்திரருக்கு 11. விஜயத்தையும், தாசார்ணருக்கு 12. நிச்வாசத்தையும், நிதநேசருக்கு 13. சுவாயம்புவத்தையும், வியோமருக்கு 14. ஆக்நேயத்தையும், தேஜசுக்கு 15. வீரத்தையும் பிராம்மணேசருக்கு 16. ரௌரவத்தையும், சிவாக்கியருக்கு 17. மகுடத்தையும், சர்வாத்மகருக்கு 18. விமலத்தையும், அநந்தருக்கு 19. சந்திரஞானத்தையும், பிலசாந்தருக்கு 20. முகபிம்பத்தையும், சூலிக்கு 21. புரோத்கீதத்தையும், ஆலயேசருக்கு 22. லளிதத்தையும், பிந்துவுக்கு 23. சித்தத்தையும் சிவ நிஷ்டருக்குச் 24. சந்தானத்தையும், சோமருக்கு 25. சர்வோக்தத்தையும், ஸ்ரீ தேவிக்கு 26. பாரமேச்வரத்தையும், தேவ விபவருக்குக் 27. கிரணத்தையும், சிவருக்கு 28. வாதுளத்தையும், சதாசிவமூர்த்தி உபதேசித்தருளினர் இந்தப் பதினெட்டு ஆகமங்களையும் கேட்டவர் உருத்திரர்களானபடியால், இவை உருத்திர பேத ஆகமங்கள், எனப் பெறுகின்றன. ஆகமங்கள் இருபத்தெட்டும், பலகோடிக் கிரந்தங்களைக் கொண்டு சரியா பாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம், என்னும் நான்கு பிரிவுகளில் அமைந்துள்ளன.

சரியாபாதம், பிராயச்சித்த விதி, சிவலிங்கம், ஜபமாலை, யோகபட்டம் முதலியவற்றின் இலக்கணங்கள் ஆதியவற்றையும், கிரியாபாதம், சந்தியா வந்தனம், பூசை, ஜெபம், ஓமம், சமய விசேஷ நிருவாண தீக்ஷைகள், ஆசாரியாபிஷேகம், ஆதியவற்றையும், யோகபாதம் தத்துவங்கள் தத்துவேசர், சிவயோகம் ஆதியவற்றையும், ஞானபாதம் பதி பசு, பாச, உண்மை, இலக்கணம் ஆதியவற்றையும் தெளிவு செய்யும்.

காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள இருபத்தெட்டு ஆகமங்களும், மூலாகமங்களாகும். இவற்றிற்குரிய உபாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மங்கள் இருநூற்றேழு. அவை காமிகத்துக்கு நாரசிம்மம், வக்த்ராரம், பைரவோத்தரம், என மூன்றும், யோகஜத்துக்கு வீணுசிகோத்ரம், தாரம், சந்தம், சந்ததி, ஆன்மயோகம் என ஐந்தும், சிந்தியத்துக்குச் சுசிந்தியம், சுபகம், வாமம், பாவநாசம், பரோத்பவம், அமிர்தம் என ஆறும், காரணத்துக்குக் காரணம், பாவநம், தௌர்க்கம், மாகேந்திரம், வீமம், மாரணம், துவேஷ்டம் என ஏழும், அஜிதத்துக்குப் பிரபூதம், பரோத்பூதம், பார்வதிசம்ஹிதை, பத்மசம்ஹிதை என நான்கும், தீப்தத்துக்கு அமேயம், சப்தம், ஆச்சாத்யம், அசங்கியம், அமிதௌச்சம், ஆனந்தம், மாதவோத்பூதம், அத்புதம், அச்சதம் என ஒன்பதும், சூக்ஷ்மத்துக்குச் சூக்ஷ்மம் என ஒன்றும், சகஸ்ரத்துக்கு அதீதம், மங்களம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், பிரபுத்தம், விபுதம், அஸ்தம், அலங்காரம், சுபோதகம் எனப்பத்தும் அம்சுமானுக்கு வித்யாபுராணத்தந்திரம், வாசவம், நீலலோகிதம், பிரகாரணம், பூத தந்திரம், ஆத்மாலங்காரம், காசியபம், கௌதமம், ஐந்திரம், பிராம்யம், வாசிஷ்டம், ஈசானம் எனப்பன்னிரெண்டும். சுப்ரபேதத்துக்குச் சுப்ரபேதமென ஒன்றும், விஜயத்துக்கு விஜயம், உத்பவம், சௌமியம், அகோரம், மிருத்யு நாசனம், குபேரம், மகாகோரம், விமலம் என எட்டும், நிச்வாசத்துக்கு, நிச்வாசம், உத்ர நிச்வாசம், நிச்வாச முகோதயம், நிச்வாச நயனம், நிச்வாச காரிகை, கோர சம்ஞ்யம், யமாக்யம், குய்யம் என எட்டும் சுவாயம்புவத்துக்குப், பிரஜாபதிமதம், பத்மம், சுவாயம்புவம் என மூன்றும், ஆக்நேயத்துக்கு ஆக்நேயம் என ஒன்றும், வீரத்துக்குப் பிரஸ்தாரம், புல்லமல்லம் பிரபோதம், போதம், போதகம், அமோகம், மோக சமயம், ஹாடகம், சாகடாதிகம், ஹலம், விலேகனம், பத்ரம், வீரம் எனப் பதிமூன்றும், ரௌரவத்துக்குக் காலக்நம், கலாதீதம் ரௌரவம், ரௌரவோத்தரம், மகா காளம், ஐந்திரம் என ஆறும், மகுடத்துக்கு மகுடம், மகுடோத்தரம் என இரண்டும், விமலத்துக்கு, அநந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷபிங்கம், விருஷோத்தரம், வ்ருஷாத்புதம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சுதந்தம், ரௌத்ரம், பத்ரவிதம், அரேவதம், அதிக்ராந்தம், அட்டகாசம், அலங்கிருதம், அருச்சிதம், தாரணம், தந்திரம், எனப் பதினாறும். சந்திர ஞானத்துக்கு, ஸ்திரம், ஸ்தாணு, மகாந்தம். வாருணம், நந்திகேசுவரம், ஏகபாத புராணம் சங்கரம், நீல ருத்ரகம், சிவ பத்ரம், கல்பபேதம், ஸ்ரீ முகம்,' சிவசாசனம், சிவசேகரம், தேவி மதம் எனப் பதினொன்றும், முக பிம்பத்துக்கு, சதுர்முகம், மலயம், அயோகம், சமஸ் தோபம், பிரதிவிப்பகம், ஆத்மாலங்காரம், வாயவ்யம், தௌடிகம், துடிநீரகம், கலாத்யயம், துலாயோகம், குட்டி-மம், பட்டசேகரம், மகாவித்தை, மகாசௌரம் எனப் பதினைந்தும், புரோத்கீதத்துக்குக் கவசம்,வாராகம், பிங்களம் பாசபந்தம், தண்ட தரம், அங்குசம், தனுர்தரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீ காலஞானம், ஆயுர்வேதம், தனுர் வேதம், சர்ப்பதம், ஷ்ட்ரீவிபேதனம், கீதம், பரதம், ஆதோத்யம், எனப் பதினாறும், லளிதத்துக்கு. லளிதம், லளிதோத்தரம், கௌமாரம் என மூன்றும், சித்தத்துக்குச் சாரோத்தரம், ஔசனேத்தரம், சாலா பேதம், சசிகண்டம் என நான்கும், சந்தானத்துக்கு, லிங்காத்யக்ஷம், சுராத்யக்ஷம், சங்கரம், அமலேச்வரம், அசங்கியம், அநிலம், துவந்துவம் என ஏழும், சர்வோக்தத்துக்குச் சிவதருமோத்தரம், வாயுப்ரோக்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத் கீதம் என ஐந்தும், பாரமேசுவரத்துக்கு, மதங்கம், யக்ஷிணி பத்மம், பாரமேச்வரம், பௌஷ்கரம், சுப்ரயோகம், ஹம்சம், சாமான்யம் என ஏழும், கிரணத்துக்குக் காருடம், நைருதம், நீலம், ரூக்ஷம், பாநுகம், தேநுகம், பிரபுத்தம், புத்தம், காலம் என ஒன்பதும், வாதுளத்துக்கு வாதுளம், உத்தர வாதுளம், காலக் ஞானம், ப்ரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேஷ்டம், நித்யம், சுத்தம், மகாநனம், விசுவம், விசுவாத்மகம் எனப் பன்னிரண்டும் ஆம் இவற்றின் மேம்பட்டுச் சிவ பெருமான், உமாதேவியார், முருகப் பெருமான் ஆதியோருக்கு உபதேசித்த தேவிகா-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

லோத்தரம் சருவஞானோத்தரம் ஆதிய ஆகமங்களும் இருக்கின்றன.

சதாசிவமூர்த்தியாக எழுந்தருளியிருந்து, பிரணவர் முதலியோருக்குச் சிவாகமங்களை உபதேசிப்பதற்கு முன்பு, அருபராயும், சாந்தராயும் பரம காரணராயுமிருக்கும் பரம சிவனார், சிவஞானமாகிய சிவாகமத்தை, நாதரூபமாக அஷ்ட வித்யேசுவரர்களுக்கு உபதேசித்தருளினார். பின்னர், நாதரூப சிவாகமங்கள் பிந்து ரூபத்தையும், அக்ஷரரூபத்தையும்,பராசத்தி அதிட்டானக்குடிலாசத்தியினின்றும்பெற்றன. அவ்வக்ஷர ரூபங்களே இருபத்தெட்டு ஆகமங்களாக அமைய, அவற்றைச்சதாசிவமூர்த்தியிடம் அநந்தேசுவரரும்,அவரிடம் ஸ்ரீகண்டரும், அவரிடம் தேவர்களும், அவர்களிடம் முனிவர்களும், அவர்களிடம் மானுடர்களும் உபதேச வாயிலாகப் பெற்றார்கள்.

''சிவபெருமான் ஒருவரே '' உயிர்களை எந்தக் காலத்திலும் விட்டுப் பிரியாத ''ஆப்தராய்'' இருக்கிறார். இதனால், இவரைப் ''பரமாப்தர்'' என்று, அருள் நூல்கள் போற்றும். பரமாப்தரும், பாசமற்றவரும், எல்லாம் அறியும் பேரறிவினருமாகிய அவர் ''பதி''. அநாதியாகவே பாசபந்தமும், சிற்றறிவுமுடைய உயிர்கள் ''பசுக்கள்''. பசுக்களின் பாசபந்தங்களை ஒழித்து அவைகளுக்குச் சிவத்துவத்தை வழங்குவதால் சிவபெருமான் பசுபதியாக விளங்குகிறார்.

சைவமல்லாத மற்றைச் சமயங்களில், முத்தி சாதனங்களையும், முத்திகளையும் சொன்னவர்கள், பசுக்களே. அவர்களனைவரும் சிற்றறிவினராதலின், அவர்கள் கண்ட உண்மைகள், முடிவானவையாயிருக்க இடமில்லை. பரமாப்தரான பரமசிவனால் அருளப் பெற்ற ஆகமஞானமே, முத்திக்கேதுவாகி உதவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நிலையான முத்திப் பேற்றில் நாட்டமுடைய சைவர்கள், தகுதியுடைய ஆசாரியரை அடைந்து, முறையாகத் தீக்ஷை பெற்று, ஆன்மார்த்த பூசையை வழுவாது செய்துவரல் வேண்டும். "பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்ரு தவர், காக்கைக்கே இரையாகிக்கழிவர்," என்பது திருமுறை சிவாகமவிதிப்படி செய்யும் சிவபூசையே சிறந்ததும் நிறைந்த பயனைத் தருவதுமாகும். பூசை செய்யும் விதிமுறையைச், சிவாகம வாயிலாக உணர்த்தியவர், பூசைப் பயனைத் தரும் சிவபெருமானே என்பது, அழுத்தமாக நினைவிலிருத்தத் தக்க தாகும்.

சிவாகம விதிப்படி செய்யும் சிவபூசையின் சிறப்பையும் இன்றியமையாமையையும், நமக்கு உணர்த்தவே, எல்லா உலகங்களையும் ஈன்ற அன்னையாகிய உமாதேவி, காஞ்சிபுரத் தில் காமாட்சியாகியும், திருவானைக்காவில் அகிலாண்ட நாயகியாயும் இந்நிலவுலகத்தில் சிவபூசை செய்து காட்டினர் தம் பொருட்டாக எவற்றிலும் விருப்பு—வெறுப்புவைக்காத சிவ பெருமான், உய்தி பெற வேண்டிய உயிர்களாகிய நம் பொருட்டாக, ஒரேயொரு விருப்பத்தை மட்டும் வைத்திருக் கிருர். இதைச் சிவபெருமான் உமாதேவியாருக்கு அறிவித்த தாகத் திருத்தொண்டர் புராணம் அருளுகின்றது. "எண்ணி லாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்,உண்மையாவது பூசனை", எனச், சிவபெருமான், "தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெரிய, உள்ளவாறு கேட்டருளிய உலகை ஆளுடையாளுக்கு", அருளியதாகச் சேக்கிழார் பெருமான் நமக்கு உணர்த்துகிருர்.

சிவபெருமானது திருவுள்ளக் கருத்தை உள்ளவாறறிந்த காமாட்சியம்மையார் "அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்துச் சிவபெருமானிடம்,"நாதரே! நீர் அருளிச்செய்த ஆகமத்தின் இயல்பினுல், உம்மை அர்ச்சிக்க எனது ஆசை பொங்குகின்றதென்று வணங்கிக், கருணைக் கடலாகிய சிவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பிரான் மொழிந்த ஆகம வழியைப் பேணி, அவ்வாகம உண்மையிலேயே தலை நின்று, அவ்வாகமங்கள் விதித்த எல்லாவற்றையும் விதிப்படி செய்து பூசித்தார் என்பது, திருத்தொண்டர் புராணத்தால் அறியப் பெறுவதாகும்.

திருவானைக்காவில் அகிலாண்டநாயகி செய்த பூசையை ''பாத்திய மாச மனமருக்கியமும் பாங்குற அமைத்தருள் கொழிக்கும், ஆத்தனூல் விதியாற் சுத்தியோ ரைந்தும் ஆக்கினள் அகிலமீன் றெடுத்தாள்'' என்பது முதலாகக் கச்சியப்ப முனிவர் உணர்த்தி அருளுகின்றார். தேவரும், மறையும் இன்னமும் காணுச் செஞ்சடைக் கடவுளாகிய சிவ பெருமானது திருவருள் அவர் அருளிச் செய்த சிவாகம வழிப் பூசையினாலன்றிச் சித்திக்காதென்பது, பரம ஞானிகள் கண்டறிந்து அனுபவித்த உண்மையாகும்.

விபூதி உருத்திராக்க தாரணம், ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜெபம், சிவபூசை ஆதியன, வேதத்தில் விதிக்கப்பட்டனவே என்றாலும், சிவாகம விதிப்படி சிவதீக்ஷை பெற்று, இவைகளை மேற்கொள்ளுபவருக்கே உண்மை முத்தி கிடைக்கும். சிவ பூசை செய்தற்குரிய விதிமுறைகளைச் சிவாகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. அவற்றை வரிசைப்படுத்தியும், சுருக்கமாகவும், நமக்கு வழங்கியவர்கள் பதினெட்டு சிவாசாரியர்கள், இவர்களால் அருளிச் செய்யப் பெற்றவை 'பத்ததிகள்' என்று வழங்கப் பெறுகின்றன. பத்ததி ஆசிரியர்கள் துர்வாசர், பிங்கலர், உக்ரஜோதி, சுபோதர், ஸ்ரீகண்டர். இராமகண்டர் விஷ்ணு கண்டர், வித்யா கண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், சோம சம்பு, பிரம சம்பு, திரிலோசன சிவர், அகோரசிவர், பிராசாத சிவர், இராமநாத சிவர், ஈசானசிவர், வருணசிவர், என்னும் பதினெண்மராவர்.

சிவாகமங்களில் விதிக்கப்பெற்றசரியை, கிரியை, யோகம்' ஞானம் ஆகிய் நால்வகை வழிபாடுகளுள், நேரே முத்தியை வழங்குவதாகிய ஞான வழிபாடே சிறந்ததாயினும், அவ்வழி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பாட்டிற்குக் காரணமாய், அதன் கருத்தையும் தன்னுள் அடக்கி நிற்பது கிரியை வழிபாடேயாம்.

சிவாகமத்தில் விதிக்கப்பட்ட கிரியைகள் அனைத்தும், உண்மை ஞானம் கிடைப்பதற்கு நிமித்தமாக அமைந்தவை. பூசை செய்பவர்கள், தாம் செய்யும் கிரியைகளின் உள்ளீடுகளை முறையாக அறிந்தால், அதுபற்றிய ஈடுபாடு ஊற்றமாக நிலைநிற்கவும், அதனால் எளிதில் பயன் சித்திக்கவும் வாய்க்கும். அத்தகைய பெரும் பயன், சிவபூசை செய்பவர்களுக்குச் சித்திக்க வேண்டுமென்னும், நன்னோக்கம் கொண்டே நமது சைவநெறிக் கழகம், இந்த நூலை வெளியிட முன் வந்தது.

இதை எழுதுவதற்கு வடமொழியிலுள்ள வேதப்பகுதிகளும் அதர்வசிசிகையாதிய உபநிடதங்களும், காமிகம், முதலிய மூல ஆகமங்களும், சருவ ஞானோத்தரம், தேவிகாலோத்தர மாதிய உப ஆகமங்களும், சித்தாந்த சாராவளி, சோமசம்பு பத்ததி, அகோர சிவ பத்ததி, கிரியா தீபிகை, சம்பு பூஜா விதி, சைவபூஷணம், சிவார்ச்சனா சந்திரிகை, பரார்த்த நித்திய பூஜா விதி, சிவாகமசேகரம், சிவலிங்கப் பிரதிஷ்டா விதி, பிராசாத ஷட் சுலோகி, சிவாத்துவித பாடியம், ஆதிய நூல்களும், தமிழிலுள்ள பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள் சிவ ரகசியம், சிவ தருமோத்தரம், ஞானாமிர்தம் சைவசமய நெறி, சதாசிவரூபம், சூத சங்கிதை, வாயு சங்கிதை பிராசாத தீபம், சிவஞானமா பாடியம், பிரமோத்தர காண்டம், திருக்குறள் கந்த புராணம், திருவிளையாடற் புராணம், காஞ்சிப் புராணம், திருவானைக்காப் புராணம் ஆதிய நூல்களும் அடிப்படையாயிருந்து உதவி செய்தன. இந்நூல்கள் செய்த உதவிக்கு முதற்காரணமாகிப், பல்லாற்றானும் பரமோபகாரமாய் இருந்தது, நம் ஞானாசிரியப் பெருந்தகை சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளின் அருட்கருணை என்பதை அன்பர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். நம் குரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மூர்த்திகள், நமக்குத் தீட்சாக்கிரமத்தில் ஞானசிரியரா யிருந்து பேரருள் வழங்கி ஆட்கொண்டதும், ஒப்புயர்வற்ற சித்தாந்த சைவ நுட்பங்களை, வாய்த்துழியெல்லாம் வலிந்து புகட்டித் தெளிவு செய்து அருளியதுமாகிய கைமாறு கருதாத கருணைத்திறத்துக்கு, இடையீடின்றி அவர்களது திருவடிகளைச் சிந்தித்துப் போற்றுவதன்றி வேறு என் செய்ய வல்லேம்?

மந்திரங்களை ஒலிப்பிழையின்றி உச்சரிப்பது இன்றி யமையாதது. மொழிகளும், எழுத்துக்களும் தோன்று வதற்கு முன்னே, மந்திரங்கள் ஒலி வடிவில் தோன்றின. அவற்றை, ஒலிப்பிழையின்றி உச்சரிப்பதற்கு வசதியாக அவ்வொலிகளுக்குச் சரியான வரி வடிவங்கள் உள்ள வட மொழி எழுத்திலும்,ஒலி வேறுபாடுகளை எண்கள் கொடுத்துக் காட்டித் தமிழ் எழுத்திலும் இந்நூலில் முதலில் வெளியிட் டிருக்கிறோம். அடுத்து, ஆன்மார்த்த சிவபூசை முறைகள் விரிவாக எழுதப்பெற்று அவற்றின் விளக்கங்களும், நூலி லுள்ள அரிய சொற்களுக்குப் பொருள் விளக்கமும், காட் டப்பெற்றிருக்கின்றன. பின்னர், பூசைக்குரிய முத்திரை களை விளக்கும் பாடல்களும்; பூசாமூர்த்திகளின் திருவுருவத் தியானப் பாடல்களும், இடம் பெற்றுள்ளன. இறுதியாக முத்திரைகளைக் காட்டும் படங்களும், பூசா மூர்த்திகளின் திருவுருவப்படங்களும் அமைந்துள்ளன.

நூலை, அச்சுப்பிழை ஒரு சிறிதுமில்லாமல் வெளியிட வேண்டுமென்று, மிகவும் விரும்பியிருந்தோம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஆனால், இடையில் ஏற்பட்ட சில எதிர்பாராத காரணங்களால், அச்சுப்பிழைகள் ஏற்பட்டுவிட்டன. பிழைதிருத்தம் தனியே அச்சிட்டிருப்பதால், முன்னதாக அதைப்பார்த்து' நூற்பகுதிகளில் திருத்தம் செய்துகொள்ள வேண்டுவது, இன்றியமையாததாகும்.

நூலை எழுதிமுடிக்கத் திருவருள் பாலித்த, எம் ஆன்ம நாயகராகிய ஆலவாயண்ணலின் திருவடிகளைச் சிந்தித்து, வாழ்த்தி வணங்குகிறோம்.

இதை அச்சிட்டு வெளியிடுகின்ற நம் சைவநெறிக் கழக அன்பர்களுக்கும், நூல் வெளியீட்டுக்குப் பொருளுதவி செய்த சிவபுண்ணிய சீலர்களுக்கும், பரம கருணாநிதியாகிய சிவபெருமான் திருவருளால், இம்மை மறுமை வளங்கள் அனைத்தும் மென்மேலும் உண்டாவதாக.

நலமே தழைக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ
சிவமயம்

பொருளடக்கம்

1.	பதிப்புரை	பக்கம்	3
2.	முன்னுரை	,,	9
3.	வடமொழி மந்திரங்கள்	,,	1
4.	தமிழ் மந்திரங்கள்	,,	I
5.	சிவபூஜா விதி	,,	1
6.	விளக்கங்கள்	,,	95
7.	சொற்பொருள் விளக்கம்	,,	155
8.	முத்திரை விளக்கம்	,,	166
9.	முத்திரை விளக்கப் பாடல்கள்	,,	178
10.	உருவப்பட விளக்கப் பாடல்கள்	,,	191
11.	முத்திரை விளக்கப் படங்கள்	,,	215
12.	பிழை திருத்தம்	,,	252

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

शिवमयम्

गणपति मूलमन्त्रः

ॐ गं गणपतये नमः

गौरी मूलमन्त्रः

ॐ हां गौर्यै नमः

सोमास्कन्दमूर्ति मूलमन्त्राः

ॐ अं अनन्तासनाय नमः

ॐ वं वृषारूढाय सोमास्कन्दमूर्तये नमः

ॐ ह्रां ह्रीं सः शिवसोमास्कन्दाय नमः

सोमास्कन्दाङ्ग मन्त्राः

ॐ अं हृदयाय नमः

,, अं अक्षरायशिरसे नमः

,, अं हुं ज्वलज्ज्वालिनी शिवायै नमः

,, ह्रूं कवचाय नमः

,, हं हा नेत्रत्रयाय नमः

,, फः अस्त्राय नमः

सोमास्कन्दपरिवारमन्त्राः

ॐ अं नन्दिने नम

,, अं विघ्नाय नमः

,, अं गणपतये नमः

,, अं गौर्यै नमः

,, अं ब्रह्मतालनाय नमः

,, अं वीरभद्राय नमः

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

𑌓𑌂 𑌅𑌂 𑌸𑌾𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌆𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌪𑌰𑌮𑌸𑍁𑌖𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑌾𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍀𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍂𑌂 𑌜𑌯𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍃𑌂 𑌭𑌦𑍍𑌰𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍇𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍈𑌂 𑌵𑌿𑌮𑌲𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍋𑌂 𑌅𑌮𑍋𑌘𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑍌𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌉𑌷𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌷𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃

,, 𑌸𑌂 𑌸𑍋𑌮𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌬𑍁𑌂 𑌬𑍁𑌧𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌬𑍃𑌂 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃

,, 𑌭𑌂 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌅𑌙𑍍𑌗𑌾𑌰𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌶𑌂 𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌰𑌂 𑌰𑌾𑌹𑌵𑍇 𑌨𑌮𑌃

,, 𑌕𑌂 𑌕𑍇𑌤𑌵𑍇 𑌨𑌮𑌃

𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌸𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑌿 𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃

,, 𑌅𑌂 𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌸𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃

,, 𑌅𑌂 𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌯 𑌨𑌮𑌃

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஶிவாஸநமூர்த்தி மூர்த்தய:

ஓம் ஹாம் ஶிவாஸநாய நம:

,, ஹாம் ஹாம் ஹாம் ஶிவமூர்த்தயே நம:

,, ஹாம் ஹௌம் ஶிவாய நம:

ஸம்ஹிதாமந்த்ரா:

,, ஹோம் ஈஶாநமூர்த்தாய நம:

,, ஹேம் தத்புருஷவக்த்ராய நம:

,, ஹூம் அகோரஹ்ருதயாய நம:

,, ஹிம் வாமதேவகுஹ்யாய நம:

,, ஹம் ஸத்யோஜாதமூர்த்தயே நம:

,, ஹாம் ஹ்ருதயாய நம:

,, ஹீம் ஶிரஸே நம:

,, ஹூம் ஶிகாயை நம:

,, ஹைம் கவசாய நம:

,, ஹௌம் நேத்ரேப்யோ நம:

,, ஹ: அஸ்த்ராய நம:

வித்யாதேஹம் ச:

,, ஹாம் ஹௌம் வித்யாதேஹாய நம:

ஶக்தி மூர்த்திம் ச:

,, ஹாம் ஶக்தயே நம:

பஶ்சிமத்வாராவரணமந்த்ரா:

,, ஹாம் ப்ரணவதயே நம:

,, ஹாம் ஸர்வஸ்வதைய் நம:

,, ஹாம் மஹாமுகோக்ஷ்ய நம:

,, ஹாம் நந்திநே நம:

,, ஹாம் மஞ்ஜூர்யை நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஓம் ஹாம் உஹாகாளாய நம:

,, ஹாம் ஸூர்யாஸநாய நம:

,, ஹாம் ஸவெ-ஜ்யோதிராஸநவாரிஜ்யோதிர் நம:

,, ஸ்ரீம் வம் ஶூம் ஹூம் வஷட் வாஶூவதாஸ்த்ராய நம:

,, ஹ: அஸ்த்ராஸநவாருணாய நம:

,, ஹாம் வாஸ்த்வாதிபதயெ ப்ரஹ்மணெ நம:

ஶிவமாய க்ருஜ்ஞ:

,, தந்த்ரேஶாய விஶ்வேஶ்வராத்மஶைலாய ஸ்ரீஸஹிதஞ்;
ஶ்ரீவ: வ்ரஜோத்யாக

ருத்ரஸஞ்ஞ:

,, ஹூம் ஹாம் ஹம் ஹாம் ஹூம் ருத்ரெப்ய நம:

கலாஸஞ்ஞா:

,, ஹாம் நிவ்ருத்திகலாயை நம:
,, ஹீம் ப்ரதிஷ்டா கலாயை நம:
,, ஹூம் வித்யாகலாயை நம:
,' ஹைம் ஶாந்திகலாயை நம:
:, ஹௌம் ஶாந்த்யதீதகலாயை நம

ஷடத்வஸஞ்ஞா:

,, ஹாம் அநந்தாய நம:

,, ஹாம் ஸூக்ஷ்மாய நம:

,, ஹாம் ஜ்ஞாநாய நம:

,, ஹாம் வைராக்யாய நம:

,, ஹாம் ஐஶ்வர்யாய நம;

,, ஹாம் வஜ்ராய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உத்தராவரண மந்த்ரா:

ஓம் ஹாம் மண்டபாய நம:

,, ஹாம் மஹாருத்ரக்ஷேத்ராய நம:

,, ஹாம் ஸதாஶிவ மூர்த்தயே நம:

,, ஹாம் அநந்த மூர்த்தயே நம:

,, ஸ்ரீ கண்ட மூர்த்தயே நம:

,, ஹாம் அம்பிகா மூர்த்தயே நம:

,, ஹாம் ஸ்கந்த மூர்த்தயே நம:

,, ஹாம் விஷ்ணு மூர்த்தயே நம:

,, ஹாம் ப்ரஹ்ம மூர்த்தயே நம:

,, ஹாம் ஸதாஶிவாதி ஸர்வ மூர்த்திப்யோ நம:

ஶிவாஸந மந்த்ரா:

,, ஹாம் ஆதாரஶக்தயே நம:

,, ஹாம் அநந்தாஸநாய நம:

,, ஹாம் அநந்தாய நம:

,, ஹாம் வாஸுகயே நம:

,, ஹாம் தக்ஷகாய நம:

,, ஹாம் கார்கோடகாய நம:

,, ஹாம் ஶங்கபாலாய நம:

,, ஹாம் குலிகாய நம:

,, ஹாம் பத்மாய நம:

,, ஹாம் மஹாபத்மாய நம:

,, ஹாம் தர்மாய நம

,, ஹாம் ஜ்ஞாநாய நம:

,, ஹாம் வைராக்யாய நம:

,, ஹாம் ஐஶ்வர்யாய நம:

,, ஹாம் அதர்மாய நம:

,, ஹாம் அஜ்ஞாநாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஓம் ஹாம் ஸம்வொஸாமத்ராய நம:

,, ஹாம் ஸம்நெஸ்வயராய நம:

,, ஹாம் ராஜஸாய நம:

,, ஹாம் தாமஸாய நம:

,, ஹாம் ஸாத்விகாய நம:

,, ஹாம் விஜ்ஞாஸநாய நம:

,, ஹாம் க்ருதயுகமாய நம:

,, ஹாம் த்ரேதாயுகமாய நம:

,, ஹாம் த்வாபரயுகமாய நம:

,, ஹாம் கலியுகமாய நம:

,, ஹாம் ஸம்வத்ஸராய நம:

,, ஹாம் நியதாயை நம:

,, ஹாம் காலாய நம:

,, ஹாம் கலாயை நம:

,, ஹாம் கேஶவாய நம:

,, ஹாம் ஸங்கர்ஷணாய நம:

,, ஹாம் ப்ரத்யும்நாய நம:

,, ஹாம் வ்யோமாஸநாய நம:

,, ஹாம் ருத்ராய நம:

,, ஹாம் பீஜாய நம:

,, ஹாம் ஸஜ்ஞநாய நம:

,, ஹாம் நாதாய நம:

,, ஹாம் ஜ்ஞாநேச்சாயை நம:

,, ஹாம் க்ரியேச்சாயை நம:

,, ஹாம் கேவலேச்சாயை நம:

,, ஹாம் கனிஷ்டாயை நம

,, ஹாம் பீஜேச்சாயை நம:

,, ஹாம் வஜ்ராய நம:

,, ஹாம் வாமாயை நம:

,, ஹாம் ஜ்யேஷ்டாயை நம:

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

𑍐 𑌹𑌾𑌂 𑌰𑍌𑌦𑍍𑌰𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌕𑌾𑌲𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌕𑌲𑌵𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌬𑌲𑌵𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌬𑌲𑌪𑍍𑌰𑌮𑌥𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌦𑌮𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌹𑌾𑌂 𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌯 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌸𑍋𑌮𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌯 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌸𑍋𑌮𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌯 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌯 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃
,, 𑌹𑌾𑌂 𑌶𑌿𑌵𑌾𑌸𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌕𑌲𑌾𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌵𑌾𑌹𑌨𑌕𑍍𑌰𑌮𑌃

,, 𑌹𑍋𑌂 𑌶𑌶𑌿𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍋𑌂 𑌅𑌂𑌗𑌦𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍋𑌂 𑌇𑌷𑍍𑌟𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍋𑌂 𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍋𑌂 𑌜𑍍𑌵𑌾𑌲𑌿𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍇𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍇𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍇𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃
,, 𑌹𑍇𑌂 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஓம் ஹ்ராம் தமாயை நம:
,, ஹ்ராம் மோஹாயை நம:
,, ஹ்ராம் க்ஷயாயை நம:
,, ஹ்ராம் நித்ராயை நம:
,, ஹ்ராம் த்ருத்யை நம:
,, ஹ்ராம் ஜாட்யை நம:
,, ஹ்ராம் வ்ருத்யை நம:
,, ஹ்ராம் க்ஷயாயை நம:
,, ஹ்ரீம் ரஜாயை நம:
,, ஹ்ரீம் ரத்யை நம:
,, ஹ்ரீம் பால்யை நம,
,, ஹ்ரீம் ரக்ஷாயை நம:
,, ஹ்ரீம் க்ருபாயை நம:
,, ஹ்ரீம் ஸம்யமின்யை நம:
,, ஹ்ரீம் ப்ரக்ரியாயை நம:
,, ஹ்ரீம் த்ருஷ்ணாயை நம:
,, ஹ்ரீம் காமாயை நம:
,, ஹ்ரீம் க்ஷயாயை நம:
,, ஹ்ரீம் இச்சாயை நம:
,, ஹ்ரீம் மோஹின்யை நம:
,, ஹ்ரீம் ப்ராமிண்யை நம:
,, ஹ்ரூம் ஸித்யை நம:
,, ஹ்ரூம் ஶாந்த்யை நம;
,, ஹ்ரூம் த்ருத்யை நம:
,, ஹ்ரூம் லக்ஷ்ம்யை நம:
,, ஹ்ரூம் மேதாயை நம:
,, ஹ்ரூம் காந்த்யை நம:
,, ஹ்ரூம் ஸ்வதாயை நம:
,: ஹ்ரூம் ப்ரஜ்ஞாயை நம:

•

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஷட³த்⁴வ மந்த்ரா:

ஓம் ஹாம் பு⁴வநாத்மநே நம:
,, ஹாம் வர்ணாத்மநே நம:
,, ஹாம் மந்த்ராத்மநே நம:
,, ஹாம் பதா³த்மநே நம:
,, ஹாம் தத்த்வாத்மநே நம:

பு⁴வந மந்த்ரா:

ஓம் ஹாம் காலாக்³நிருத்³ராய நம:
,, ஹாம் கூஷ்மாண்டா³ய நம:
,, ஹாம் ஹாடகேஶ்வராய நம:
,, ஹாம் ப்³ரஹ்மணே நம:
,, ஹாம் விஷ்ணவே நம:
,, ஹாம் ருத்³ராய நம:
,, ஹாம் கபாலீஶாய நம:
,, ஹாம் அஜாய நம:
,, ஹாம் பு³தா⁴ய நம:
,, ஹாம் வஜ்ரதே³ஹாய நம:
,, ஹாம் ப்ரமத²நாய நம:
,, ஹாம் விபூ⁴தயே நம:
,, ஹாம் அவ்யயாய நம:
,, ஹாம் ஶாஸ்த்ரே நம:
,, ஹாம் பிநாகிநே நம:
,, ஹாம் த்ரித³ஶாதி⁴பாய நம:
,, ஹாம் அக்³நிருத்³ராய நம:
,, ஹாம் ஹுதாஶநாய நம:
,, ஹாம் பிங்க³லாய நம:
,, ஹாம் கா²த³காய நம:

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஓம் ஹாம் ஹராய நம:

,, ஹாம் ஜ்வலநாய நம:

,, ஹாம் தஹநாய நம:

,, ஹாம் பப்ரவே நம:

,, ஹாம் ஹவ்யாங்ககாய நம:

,, ஹாம் க்ஷயாங்ககாய நம:

,, ஹாம் யாஜ்ஞாய நம:

,, ஹாம் ஶ்ரத்யவே நம:

,, ஹாம் ஹராயை நம:

,, ஹாம் தாத்ரே நம:

,, ஹாம் விதாத்ரே நம:

,, ஹாம் கர்த்ரே நம:

,, ஹாம் ஸம்யோக்த்ரே நம:

,, ஹாம் வியோக்த்ரே நம:

,, ஹாம் தர்மாய நம:

,, ஹாம் தர்மவத்யை நம:

,, ஹாம் ஸித்த்யை நம:

,, ஹாம் காரணாய நம:

,, ஹாம் ஹேது: நம:

,, ஹாம் க்ரூம்ரத்ருஷ்யை நம:

,, ஹாம் பயாநகாய நம:

,, ஹாம் ஸர்வவேஷாய நம:

,, ஹாம் விரூபாக்ஷாய நம:

,, ஹாம் ருத்ராய நம:

,, ஹாம் லோஹிதாய நம:

,, ஹாம் தம்ஷ்ட்ரிணே நம:

,, ஹாம் பலாய நம:

,, ஹாம் அதிபலாய நம:

,, ஹாம் வாமஹஸ்தாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஓம் ஹாம் மஹாபத்மாய நம:
,, ஹாம் ஶ்வேதாய நம:
,, ஹாம் ஜயபத்ராய நம:
,, ஹாம் தீர்க்கபாஹவே நம:
,, ஹாம் ஜலாங்காய நம:
,, ஹாம் தேவதத்தாய நம:
,, ஹாம் நாகதத்தாய நம:
,, ஹாம் ஶ்ரீவத்ஸாய நம:
,, ஹாம் பவதே நம:
,, ஹாம் வாயுவேகாய நம:
,, ஹாம் ஸம்க்ஷிப்தாய நம:
,, ஹாம் தீக்ஷ்ணாய நம:
,, ஹாம் க்ஷயாங்காய நம:
,, ஹாம் வம்ஶாங்காய நம:
,, ஹாம் வம்ஶஶிவாய நம:
,, ஹாம் கபர்தினே நம:
,, ஹாம் தேவவாஹனாய நம:
,, ஹாம் ப்ரியேஶாய நம:
,, ஹாம் ஸம்பவதே நம:
,, ஹாம் யந்த்ராய நம:
,, ஹாம் பௌமத்யக்ஷாய நம:
,, ஹாம் ஜடாதராய நம:
,, ஹாம் ருக்ஷ்மிதராய நம:
,, ஹாம் ஸந்த்யாதராய நம:
,, ஹாம் ஶ்ரீதராய நம:
,, ஹாம் ப்ரபாஸாய நம:
,, ஹாம் ப்ரகாஶாய நம:
,, ஹாம் ஸித்த்யாயிவாய நம:
,, ஹாம் ஸம்ஸ்தானாய நம:
,, ஹாம் பர்வதேந்த்ராய நம:

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE
Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஓம் ஹாம் ஜ்ஞாநஹ்ருதே நம:
,, ஹாம் வைஶ்வாநராய நம:
,, ஹாம் ஸர்வேஶாய நம:
,, ஹாம் ஶர்வாய நம:
,, ஹாம் ஜ்யேஷ்டாய நம:
,, ஹாம் ஹுதவாஹாய நம:
,, ஹாம் பலிப்ரியாய நம:
,, ஹாம் வ்ருஷாய நம:
,, ஹாம் வ்ருஷயாநாய நம:
,, ஹாம் ஸுநந்தாய நம:
,, ஹாம் க்ரோதநாய நம:
,, ஹாம் ஈர்ஷ்யாஶநாய நம:
,, ஹாம் ப்ரலநாய நம:
,, ஹாம் உதும்பரீஶாய நம:
,, ஹாம் பணீந்த்ராய நம:
,, ஹாம் வஜ்ரிணே நம:
,, ஹாம் தம்ஷ்ட்ரிணே நம:
,, ஹாம் ஶங்கவே நம:
,, ஹாம் விபவே நம:
,, ஹாம் மஹாத்ர்யக்ஷாய நம:
,, ஹாம் த்ர்யக்ஷாய நம:
,, ஹாம் த்ரிதஶேஶ்வராய நம:
,, ஹாம் ஸம்வாஹாய நம:
,, ஹாம் விவாஹாய நம:
,, ஹாம் நபஸே நம:
,, ஹாம் ஜிஷ்ணவே நம:
,, ஹாம் த்ரிலோசநாய நம:
,, ஹாம் வீரபத்ராய நம:
,, ஹாம் ஹ்ருத்காமைத்ர்யை நம:
,, ஹாம் ஸுரேஶ்வராய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஓம் ஹாம் ப்ரஹாஸாய நம:

,, ஹாம் நைஶலாய நம:

,, ஹாம் வாக்ஷராய நம:

,, ஹாம் க்ரூஷாஸிநே நம:

,, ஹாம் ஸிஞ்ஜீமாஞ்ஜிநே நம:

,, ஹாம் ஹாரஹாதயே நம:

,, ஹாம் ஶுகாலேஶ்வராய நம:

,, ஹாம் ஹரிஶ்சந்த்ராய நம:

,, ஹாம் ஶ்ரீமேருராய நம:

,, ஹாம் ஜமேஹ்வேஶ்வராய நம:

,, ஹாம் க்ரூமத்ராதிகேஶ்வராய நம:

,, ஹாம் உன்மத்தேஶ்வராய நம:

,, ஹாம் மஹாகாலாய நம:

,, ஹாம் கேதாராய நம:

,, ஹாம் பைரவாய நம:

,, ஹாம் மயாமயே நம:

,, ஹாம் காலக்ஷேத்ராய நம:

,, ஹாம் நாவக்ராய நம:

,, ஹாம் தவக்ராய நம:

,, ஹாம் விமலேஶ்வராய நம:

,, ஹாம் சண்டஹாஸாய நம:

,, ஹாம் மாலேந்த்ராய நம:

,, ஹாம் ஹிமேஶ்வராய நம:

,, ஹாம் வஸ்த்ரவாஶாய நம

,, ஹாம் ராத்ரகோடீஶ்வராய நம:

,, ஹாம் கபிலாத்தாய நம:

,, ஹாம் மஹாபலயாய நம:

,, ஹாம் மோககர்ணாய நம:

,, ஹாம் ஹஸ்தகர்ணாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஓம் ஹாம் ஸ்வர்ணாக்ஷாய நம:
,, ஹாம் ஸ்தாணவே நம:
,, ஹாம் ச்சகலண்டாய நம:
,, ஹாம் த்விரண்டாய நம:
,, ஹாம் மாகோடாய நம:
,, ஹாம் மண்டலேஶ்வராய நம:
,, ஹாம் காலாஞ்ஜனாய நம:
,, ஹாம் ஶங்குகர்ணாய நம:
,, ஹாம் ஸ்தூலேஶ்வராய நம:
,, ஹாம் ஸ்தலேஶ்வராய நம:
,, ஹாம் பைஶாசாய நம:
,, ஹாம் ராக்ஷஸாய நம:
,, ஹாம் யக்ஷாய நம:
,, ஹாம் காந்தர்வாய நம:
,, ஹாம் ஐந்த்ராய நம:
,, ஹாம் ஸௌம்யாய நம:
,, ஹாம் ப்ராஜேஶாய நம:
,, ஹாம் ப்ராஹ்மணே நம:
,, ஹாம் அக்ருதாய நம:
,, ஹாம் க்ருதாய நம:
,, ஹாம் பைரவாய நம:
,, ஹாம் ப்ராஹ்மாய நம:
,, ஹாம் வைஷ்ணவாய நம:
,, ஹாம் கௌமாராய நம:
,, ஹாம் ஔமாய நம:
,, ஹாம் ஸ்ரீகண்டாய நம:
,, ஹாம் வாமாய நம:
,, ஹாம் பீமாய நம:
,, ஹாம் உக்ராய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஓம் ஹாம் பவாய நம:
,, ஹாம் ஸம்ஸாராய நம:
,, ஹாம் ஏகவீராய நம:
,, ஹாம் ப்ரசண்டாய நம:
,, ஹாம் உமாபதயே நம:
,, ஹாம் அஜாய நம:
,, ஹாம் அனந்தாய நம:
,, ஹாம் ஏகஶிவாய நம:
,, ஹாம் க்ரோதநாய நம:
,, ஹாம் சண்டாய நம:
,, ஹாம் ஸம்வர்த்தாய நம:
,, ஹாம் ஜ்யோதிஷே நம;
,, ஹாம் பஞ்சாந்தகாய நம:
,, ஹாம் ஏகபிங்களாய நம:
,, ஹாம் ஶ்ரீதராய நம:
,, ஹாம் ஏகவீராய நம:
,, ஹாம் ஶிவேஶாய நம:
,, ஹாம் மஹாதேஜஸே நம:
,, ஹாம் வாமதேவாய நம:
,, ஹாம் பவாய நம:
,, ஹாம் உத்பவாய நம:
,, ஹாம் ஏகபிங்களாய நம:
,, ஹாம் ஏகேக்ஷணாய நம:
,, ஹாம் ஸம்ஹாராய நம:
,, ஹாம் ஸூக்ஷ்மாத்ராய நம:
,, ஹாம் வாமாயை நம:
,, ஹாம் ஜ்யேஷ்டாயை நம:
,, ஹாம் ரௌத்ர்யை நம:
,, ஹாம் காள்யை நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஓம் ஹாம் கலவிகரண்யை நம:
,, ஹாம் பலவிகரண்யை நம:
,, ஹாம் பலப்ரமதந்யை நம:
,, ஹாம் ஸர்வபூததமந்யை நம:
,, ஹாம் மநோந்மந்யை நம:
,, ஹாம் அநந்தாய நம:
,, ஹாம் ஸூக்ஷ்மாய நம:
,, ஹாம் ஶிவோத்தமாய நம:
,, ஹாம் ஏகநேத்ராய நம:
,, ஹாம் ஏகருத்ராய நம:
,, ஹாம் த்ரிமூர்த்தயே நம:
,, ஹாம் ஶ்ரீகண்டாய நம:
,, ஹாம் ஶிகண்டிநே நம:
,, ஹாம் ஸதாஶிவாய நம:
,, ஹாம் நிவ்ருத்திகலாயை நம:
,, ஹாம் ப்ரதிஷ்டாகலாயை நம:
,, ஹாம் வித்யாகலாயை நம:
,, ஹாம் ஶாந்திகலாயை நம:
,, ஹாம் ஶாந்த்யதீதகலாயை நம:
,, ஹாம் இந்திகாய நம:
,, ஹாம் தீபிகாயை நம:
,, ஹாம் மோசிகாயை நம:
,, ஹாம் ஊர்த்வகாமிந்யை நம:
,, ஹாம் வ்யாபிந்யை நம:
,, ஹாம் வ்யோமரூபாயை நம
,, ஹாம் அநந்தாயை நம:
,, ஹாம் அநாதாயை நம:
,, ஹாம் அநாஶ்ரிதாயை நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஶிவாகம தந்த்ராவலி ஸஞ்ஜ்ஞா:

ஓம்	ஹாம்	காமிகாய	நம:
,,	,,	யோகஜாய	,,
,,	,,	சிந்த்யாய	,,
,,	,,	காரணாய	,,
,,	,,	அஜிதாய	,,
,,	,,	தீப்தாய	,,
,,	,,	ஸூக்ஷ்மாய	,,
,,	,,	ஸஹஸ்ராய	,,
,,	,,	அம்ஶுமதே	,,
,,	,,	ஸுப்ரபேதாய	,,
,,	,,	விஜயாய	,,
,,	,,	நிஶ்வாஸாய	,,
,,	,,	ஸ்வாயம்புவாய	,,
,,	,,	அநலாய	,,
,,	,,	வீராய:	,,
,,	,,	ரௌரவாய	,,
,,	,,	மகுடாய	,,
,,	,,	விமலாய	,,
,,	,,	சந்த்ரஜ்ஞானாய	,,
,,	,,	முகபிம்பாய	,,
,,	,,	ப்ரோத்கீதாய	,,
,,	,,	லலிதாய	,,
,,	,,	ஸித்தாய	,,
,,	,,	ஸந்தானாய	,,
,,	,,	ஸர்வோக்தாய	,,
,,	,,	பாரமேஶ்வராய	,,
,,	,,	கிரணாய	,,
,,	,,	வாதுலாய	,,

3

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍 𑌮𑌾𑌤𑍃𑌕𑌾 𑌨𑍍𑌯𑌾𑌸 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌵𑌂 𑌶𑌂 𑌷𑌂 𑌸𑌂 𑌆𑌧𑌾𑌰𑌚𑌕𑍍𑌰 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍀 𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌮𑍍𑌬𑌾 𑌸𑌮𑍇𑌤𑌾𑌯 𑌗𑌣𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 ।

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌬𑌂 𑌭𑌂 𑌮𑌂 𑌯𑌂 𑌰𑌂 𑌲𑌂 𑌷𑍍𑌠𑌾𑌨𑌚𑌕𑍍𑌰 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌸𑌮𑍇𑌤𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ।

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌡𑌂 𑌢𑌂 𑌣𑌂 𑌤𑌂 𑌥𑌂 𑌦𑌂 𑌧𑌂 𑌨𑌂 𑌪𑌂 𑌫𑌂 𑌮𑌣𑌿𑌪𑍂𑌰𑌚𑌕𑍍𑌰 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 𑌶𑍍𑌰𑍀𑌭𑍂𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌸𑌮𑍇𑌤𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌨𑌮𑌃 ।

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌕𑌂 𑌖𑌂 𑌗𑌂 𑌘𑌂 𑌙𑌂 𑌚𑌂 𑌛𑌂 𑌜𑌂 𑌝𑌂 𑌞𑌂 𑌟𑌂 𑌠𑌂 𑌅𑌨𑌾𑌹𑌤𑌚𑌕𑍍𑌰 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 𑌗𑍌𑌰𑍀 𑌅𑌮𑍍𑌬𑌿𑌕𑌾 𑌸𑌮𑍇𑌤𑌾𑌯 𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 ।

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌅𑌂 𑌆𑌂 𑌇𑌂 𑌈𑌂 𑌉𑌂 𑌊𑌂 𑌋𑌂 𑍠𑌂 𑌌𑌂 𑍡𑌂 𑌏𑌂 𑌐𑌂 𑌓𑌂 𑌔𑌂 𑌅𑌂 𑌅𑌃 𑌷𑍋𑌡𑌶𑌦𑌲 𑌚𑌕𑍍𑌰 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 [illegible] 𑌸𑌮𑍇𑌤𑌾𑌯 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 ।

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌹𑌂 𑌕𑍍𑌷𑌂 𑌦𑍍𑌵𑌿𑌦𑌲 𑌚𑌕𑍍𑌰 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍀 𑌶𑌕𑍍𑌤𑌿 𑌸𑌮𑍇𑌤𑌾𑌯 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌦𑌲 𑌚𑌕𑍍𑌰 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍇 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌯 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌪𑌰𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿 𑌸𑌹𑌿𑌤𑌾𑌯 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌹𑌂𑌸𑌸𑍋𑌹𑌂 𑌹𑌂𑌸 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ।

𑌬𑌹𑌿𑌰𑍍 𑌮𑌾𑌤𑍃𑌕𑌾 𑌨𑍍𑌯𑌾𑌸 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃

𑌓𑌂	𑌹𑌾𑌂	𑌰𑌕𑍍𑌤	𑌵𑌰𑍍𑌣𑌰𑍂𑌪𑌾𑌯	𑌅𑌕𑌾𑌰𑌾𑌯	𑌨𑌮𑌃
,,	,,	𑌶𑍍𑌵𑍇𑌤	,,	𑌆𑌕𑌾𑌰𑌾𑌯	,,
,,	,,	𑌶𑍍𑌯𑌾𑌮	,,	𑌇𑌕𑌾𑌰𑌾𑌯	,,
,,	,,	𑌪𑍀𑌤	,,	𑌈𑌕𑌾𑌰𑌾𑌯	,,
,,	,,	𑌕𑍃𑌷𑍍𑌣	,,	𑌉𑌕𑌾𑌰𑌾𑌯	,,
,,	,,	𑌶𑍍𑌯𑌾𑌮	,,	𑌊𑌕𑌾𑌰𑌾𑌯	,,
,,	,,	𑌪𑍀𑌤	,,	𑌋𑌕𑌾𑌰𑌾𑌯	,,
,,	,,	𑌶𑌿𑌵𑌿	,,	𑍠𑌕𑌾𑌰𑌾𑌯	,,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஓம்	ஹ்ராம்	ஸித	வர்ண ஸ்வரூபாய	ऌகாராய	நம:
,,	,,	ரக்த	,,	ॡகாராய	,,
,,	,,	பீத	,,	ஏகாராய	,,
,,	,,	ஸ்படிக	,,	ஐகாராய	,,
,,	,,	ஜ்யோதி	,,	ஓகாராய	,,
,,	,,	ஶுக்ல	,,	ஔகாராய	,,
,,	,,	ரக்த	,,	அம்காராய	,,
,,	,,	க்ருஷ்ண	,,	அ:காராய	,,
,,	,,	பீத	,,	ககாராய	,,
,,	,,	ரக்த	,,	ககாராய	,,
,,	,,	க்ருஷ்ண	,,	ககாராய	,,
,,	,,	ஸித	,,	ககாராய	,,
,,	,,	தூம்ர	,,	ஙகாராய	,,
,,	,,	வைடூர்ய	,,	சகாராய	,,
,,	,,	நீல	,,	சகாராய	,,
,,	,,	க்ருஷ்ண	,,	ஜகாராய	,,
,,	,,	ஶ்யாம	,,	ஜகாராய	,,
,,	,,	பீத	,,	ஞகாராய	,,
,,	,,	ரக்த	,,	டகாராய	,,
,,	,,	ஶ்வேத	,,	டகாராய	,,
,,	,,	பீத	,,	டகாராய	,,
,,	,,	நீல	,,	டகாராய	,,
,,	,,	மௌக்திக	,,	ணகாராய	,,
,,	,,	ஶ்வேத	,,	தகாராய	,,
,,	,,	காஞ்சநாப	,,	தகாராய	,,
,,	,,	ஶ்யாம	,,	தகாராய	,,
,,	,,	பீத	,,	தகாராய	,,
,,	,,	ஸ்படிக	,,	நகாராய	,,
,,	,,	ஶ்வேத	,,	பகாராய	,,
,,	,,	ரக்த	,,	பகாராய	,,

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஓம்	ஹ்ராம்	பீத	வர்ண ஸ்வரூபாய	பகாராய	நம:
,,	,,	ரக்த	,,	ஹகாராய	,,
,,	,,	ஶ்யாம	,,	அகாராய	,,
,,	,,	க்ருஷ்ண	,,	யகாராய	,,
,,	,,	ரக்த	,,	ரகாராய	,,
,,	,,	பீத	,,	லகாராய	,,
,,	,,	தூம்ர	,,	வகாராய	,,
,,	,,	கௌர	,,	ஶகாராய	,,
,,	,,	ரக்த	,,	ஷகாராய	,,
,,	,,	ரக்த	,,	ஸகாராய	,,
,,	,,	ஸ்படிக	,,	ஹகாராய	,,
,,	,,	ரக்த	,,	ளகாராய	,,
,,	,,	தூம்ர	,,	க்ஷகாராய	,,

ஶ்ரீகண்ட ந்யாஸ மந்த்ரா:

ஓம்	ஹ்ராம்	அம் ஶ்ரீகண்டாய பூர்ணோதர்யை	நம:
,,	,,	ஆம் அநந்தாய விரஜாயை	,,
,,	,,	இம் ஸூக்ஷ்மாய ஶால்மல்யை	,,
,,	,,	ஈம் த்ரிமூர்த்தயே லோலாக்ஷ்யை	,,
,,	,,	உம் அமரேஶாய வர்த்துலாக்ஷ்யை	,,
,,	,,	ஊம் அர்க்கீஶாய தீர்க்ககோணாயை	,,
,,	,,	ஏம் பாரபூதயே தீர்க்கமுக்யை	,,
,,	,,	ஐம் அதிதயே கோமுக்யை	,,
,,	,,	ஓம் ஸ்தாணுகாய தீர்க்க ஜிஹ்வாயை	,,
,,	,,	ஔம் ஹராய குண்டோதர்யை	,,
,,	,,	அம் ஜண்டீஶாய ஊர்த்வகேஶ்யை	,,
,,	,,	அ: பௌதிகாய விக்ருத முக்யை	,,
,,	,,	கம் ஸத்யோஜாதாய ஜ்வாலா முக்யை	,,
,,	,,	கம் அநுக்ரஹேஶாய உல்கா முக்யை	,,

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஓம்	ஹாம்	அம் கந்ர்பாய ஶ்ரீமதேவ்யை	நம:
,,	,,	ஆம் மஹாஸேனாய வித்யா மதேவ்யை	,,
,,	,,	இம் கெள்ரீஶாய மஹாகாளைய்யை	,,
,,	,,	ஈம் அஜ்ஞேஶாய ஸரஸ்வத்யை	,,
,,	,,	உம் வஞ்ஞாந்தகாய ஸர்வஸித்திகர்யை	,,
,,	,,	ஊம் ஶிவோத்தமாய த்ரைலோக்யவிஜயாயை	,,
,,	,,	ருூம் ஏகருத்ராய மந்த்ர ஶக்த்யை	,,
,,	,,	ரூம் கமலாய ஸூக்ஷ்ம ஶக்த்யை	,,
,,	,,	லும் ஏகநேத்ராய ஸந்தநோத்தே	,,
,,	,,	லூம் சதுரானநாய ஸம்போதாயை	,,
,,	,,	ஏம் அஜேஶாய ப்ராஸிண்யை	,,
,,	,,	ஐம் ஸர்வாய நமாயை	,,
,,	,,	ஓம் ஸோமேஶாய வேதமாயை	,,
,,	,,	ஔம் ஸாங்குஶாயை மத்யாயை	,,
,,	,,	அம் லாங்கலகாய விஸ்ரம்பிண்யை	,,
,,	,,	அ: அர்த்தநாரீஶ்வராய ப்ரகோதாயை	,,
,,	,,	ணம் உமாகாந்தாய ம்ருத்யுநாஶாயை	,,
,,	,,	தம் ஆஷாடிநே ஸத்காளைய்யை	,,
,,	,,	தம் தண்டிநே யாமிந்யை	,,
,,	,,	தம் அத்ரயே ஶங்கிந்யை	,,
,,	,,	நம் மீநாய மதிந்யை	,,
ஓம்	ஹாம்	பம் மேஷாய காமரூபிண்யை	,,
,,	,,	பம் லோஹிதாய காமஜிந்யை	,,
,,	,,	பம் ஶிகிநே கவதிந்யை	,,
,,	,,	பம் சலமுண்டாய ஜயாயை	,,
,,	,,	ஹம் த்விருண்டாய ஹமாயை	,,
,,	,,	மம் மஹாகாளாய ஷஜயாயை	,,
,,	,,	யம் வாலிநே ஸாமவேஶ்வர்யை	,,
,,	,,	ரம் ஹுஜம்கேஶாய ரேவத்யை	,,
,,	,,	லம் பிநாகிநே மாயாவத்யை	,,

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

கணபதி மூலமந்திரத்தை உச்சரித்துச் சிகாமுத்திரை யால் இரண்டு புருவக்கடைகளுக்கு மேலே நெற்றியின் மேற் பகுதியில் மூன்றுமுறை குட்டிக்கொண்டு குருமூலமந்திரத்தை உச்சரித்து மூக்குக்கு நேராகக் கைகளைக்கூப்புக. வலது கைச் சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள்ளங்கையில் மடக்கிவைத்துக் கொண்டு கட்டை விரலால் வலது மூக்கை மூடிச் சம்ஹிதா மந்திரங்களை ஒன்றன்பின் ஒன்றாக நினைக்கும் நேர அளவுக்கு மூச்சை இடது மூக்கு வழியாக உள்ளே இழுத்து, மோதிர விரலால் இடது மூக்கையும் மூடி அதே நேர அளவுக்கு மூச்சை உள்ளே நிறுத்தி, மூடிய கட்டைவிரலை மட்டும் எடுத்து அதே நேரஅளவுக்கு மூச்சை வலதுமூக்கு வழியாக வெளியேவிட்டுச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சிவமூல மந்திரத்தை உச்சரித்து மூக்கையும் வலது காதையும் தொடுக.

சிவசூரிய பூஜை

சூரிய சகளீகரணம்

கர நியாசம்

ஓம் ர: அஸ்த்ராயபட் என்று வலக்கையில் இடக் கையால் மேலும் கீழும் ஒருதடவையும், இடக்கையில் வலக் கையால் மேலும் கீழும் இரண்டு தடவையும் துடைத்து, ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ ; சிவசூர்யாய வௌஷட் என்று இரண்டு கைகளையும் கூப்புக. இரண்டு கைகளையும் சேர்த்து நிமிர்த்தி விரித்துக் கட்டை விரல்களில் சுட்டு விரல்களால் ஓம் அம் ஹ்ருதயாய நம; என்றும், சுண்டு விரல்களில் கட்டை விரல் களால் ஓம் அம் அர்க்காய சிரசே நம ; என்றும், மோதிர விரல்களில் ஓம்அம் பூர் புவஸ்வரோம் ஜ்வாலிநீ சிகாயைநம ; என்றும், நடுவிரல்களில் ஓம் ஹ்ரூம் கவசாய நம ; என்றும் தடவி, நடுவிரல் சுட்டுவிரல்களால் உள்ளங்கைகளில் ஓம் பம் பாநு நேத்ராப்யாம் நம ; என்று தொட்டுச் சுட்டுவிரல்களில் கட்டை விரல்களால் ஓம் ர ; அஸ்த்ராய பட் என்று தடவி, ஓம் ஹ்ரூம் கவசாய நம; என்று இரு கைகளையும் முஷ்டியாகப் பிடித்து ஒன்றை ஒன்றினல் சுற்றி ஓம் கம் கஷோல்காய வௌஷட் என்று கைகளைக் கூப்புக.

அங்க நியாசம்

வலக்கைப் பெருவிரல் அணைந்த மோதிர விரலால் மார்பில் ஓம் அம் ஹ்ருதயாய நம ; என்றும், சிரசில் ஓம் அம் அர்க்காய சிரசே நம ; என்றும், சிகையில் ஓம் அம் பூர்புவஸ் ரோம் ஜ்வாலிநீ சிகாயை நம ; என்றும் உச்சரித்துத்தொட்டு இடக்கைச் சுட்டுவிரலால் மார்பிலிருந்து வலமாக மார்பு வரையும், வலக்கைச் சுட்டுவிரலால் மார்பிலிருந்து இடமாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மார்பு வரையும் ஓம் ஹ்ரூம் கவசாய நம ; என்று கழுத்தைச் சுற்றி நடுவிரல் சுட்டுவிரல்களால் ஓம்பம்பாநு நேத்ராப்யாம் நம ; என்று இரண்டு கண்களையும் தொட்டு, இடது உள்ளங் கையில் வலது மோதிர விரலாலும், வலது உள்ளங்கையில் இடது மோதிர விரலாலும் ஓம் ர ; அஸ்த்ராய பட் என்று தொட்டு, சிரசைச் சுற்றி ஓம் ர ; அஸ்த்ராய பட் என்று தாளத்திரயமும் திக்பந்தனமும், ஓம் ஹ்ரூம் கவசாய நம ; என்றுஅவகுண்டனமும் செய்து மகா முத்திரையால் உடம்பு முழுவதிலும் ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ ; சிவ சூர்யாய நம ; என்று பாவனையால் தடவித் தன்னைச் சூரிய சொரூபமாகப் பாவிக்க.

தரிசன அர்க்கியம்

சூரிய பூசைக்குரிய எட்டு இதழ்த் தாமரை வரைந்த செம்புத் தம்பாளத்தை முன்னே வைத்து அதற்கு முன்னே அர்க்கிய வட்டகையை வைத்துக் கொள்க. வட்டகையில் ஓம் அம் ஹ்ருதயாய வௌஷட் என்று நீர் நிரப்பிச் செஞ்சந் தனம் சிவப்புப்பூச்சேர்த்து முழங்கால்களைப் பூமியில் ஊன்றிக் கொண்டு வட்டகையை எடுத்துப் புருவ நடுவுக்குக் கொண்டு போய் அதில் அமிர்தம் கலந்ததாகப் பாவித்து, ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ ; சிவ சூர்யாய வௌஷட் என்று வட்டகை நீரைத் தம்பாளத்தில் சேர்க்க. சிவசூரிய மூல மந்திரத்தைப் பத்து உரு ஜெபிக்க.

சிவ சூரிய அர்க்கியம்

அர்க்கிய வட்டகையை ஓம் ர ; அஸ்த்ராய பட் என்று புரோக்ஷித்து, ஓம் அம் ஹ்ருதயாய வௌஷட் என்று நீர் நிரப்பி அட்சதை, சந்தனம், புஷ்பம் சேர்த்து எடுத்துப் புருவ நடுவுக்குக் கொண்டு போய் அங்கே உள்ள சிவந்த விந்துவினிடத்தில் இருந்து பெருகும் அமிர்ததாரையாக அந்தப் நீரைப் பாவித்துக் கீழே வைத்துச் சூரிய அங்க மந்திரங்களாலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சூரிய மூலத்தாலும் அர்ச்சித்துப் பதாகை முத்திரையால் ஓம் ஹ்ரூம் கவசாய நம ; என மூடி அர்ச்சித்த மந்திரங்களால் அபி மந்திரித்து, ஓம் ர; அஸ்த்ராய பட் என்றுதிக்பந்தனமும் ஓம் ஹ்ரூம் கவசாய நம ; என்று அவகுண்டனமும் செய்து, ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ ; சிவசூர்யாய வௌஷட் என்றுதேனு முத்திரை காட்டுக. அர்க்கிய ஜலத்தைப் புஷ்பத்தால் தொட்டுத்தன் சிரசு, பூசைத்தானம், பூசைத் திரவியங்களில் ஓம் ர ; அஸ்த்ராய பட் என்று புரோக்ஷிக்க. தனக்கு இரு பக்கங்களிலும் மேலும் கீழும் நாராச முத்திரையால் ஓம் ர ; அஸ்த்ராய பட் என்று பூக்களைப் போட்டு விக்கினங்களை நீக்கிக் கொள்க.

சூரிய துவார பூஜை

மேற்கு வாயில் தென்பக்கத்தில் செந்நிறம், பெரு வயிறு, தொங்குகிற சிகை, வலக்கையில் எழுதுகோல், இடக் கையில் மைக்கூடு கொண்டு உயிர்கள் செய்கிற வினைகளை எழுதிக் கொண்டிருப்பவராகத்தண்டியை ஓம்அம் தண்டினே நம ; என்றும், வடபக்கத்தில், செந்நிறம், வலக்கைச்சுட்டு விரலை நீட்டி அச்சுறுத்தல், ஆடை ஆபரண அலங்காரம், இடக்கையில் தண்டம் கொண்டவராகப் பிங்களரை ஓம் அம் பிங்களாய நம ; என்றும், ஈசான திக்கில், செந்தாமரைப் பீடத்தில் தர்ப்பாசனத்துடன் பாசம் அங்குசம் தந்தம் மாம் பழம் கைக்கொண்டயானை முககணபதியை ஓம்அம்கணபதயே நம ; என்றும், அக்கினி திக்கில், திருநீறு பூசிய திருமேனி, ஜடாமகுடம், யோகபட்டம், பூணூல் சின்முத்திரை உடைய குருவை ஓம் அம் குரவே நம ; என்றும் அர்ச்சிக்க.

ஆசன பூஜை

தம்பாளத்திலுள்ள எட்டிதழ்த் தாமரையின் நடுவில் கீழ்ப்பகுதியில் ஓம் அம் ப்ரபூதாசனாய நம என்றுவெண்ணிறப் பீடத்தையும், அக்கினி, நிருதி, வாயு, ஈசானம் ஆகியநான்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

திசைகளிலுமுள்ள பீடக்கால்களில் முறையே வெண்ணிற விமல சிம்மத்தை ஓம் அம் விமலாய நம ; என்றும், செந்நிறச் சாரசிம்மத்தை ஓம் அம் சாராய நம ; என்றும், பொன்னிற ஆராத்ய சிம்மத்தை ஓம் அம் ஆராத்யாய நம ; என்றும், பச்சை நிறமான பரமசுக சிம்மத்தை ஓம்அம் பரமசுகாயநம; என்றும், எட்டிதழ்த்தாமரையின் நடுவில் மேற்பகுதியில் பத்மாசனத்தைக் கர்ணிகையுடன் கூடியதாகப் பாவித்து ஓம் அம் பத்மாசநாய நம ; ஓம் அம் கர்ணிகாயை நம ; என்றும் அர்ச்சிக்க.

கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டு இதழ்களில் விளக்கொளி போன்ற செந்நிறம், சர்வாபரணபூஷிதம் இரண்டு கைகளில் தாமரைப்பூவும், சாமரமும் கொண்டவர்களாக முறையே தீப்தை, சூக்ஷ்மை, ருஜை, பத்ரை, விபூதி, விமலை, அமோகை, வித்யுதை, எனும் எட்டுச் சத்திகளையும் ஓம் ராம் தீப்தாயை நம ; ஓம் ரீம் சூக்ஷ்மாயை நம ; ஓம் ரும் ருஜாயை நம: ஓம் ரூம் பத்ராயைநம ; ஓம் ரேம்விபூத்யை நம ; ஓம் ரைம் விமலாயை நம ; ஓம் ரோம் அமோகாயை நம ; ஓம் ரௌம் வித்யுதாயை நம; என்றும் அர்ச்சித்து மீண்டும் வடகிழக்கில் சர்வதோமுக சத்தியை ஓம் ர ; சர்வதோ முக்யை நம ; என்று அர்ச்சித்து விஸ்புர. முத்திரை காட்டி, பத்மத்தின் நடுவில் ஓம் அம் அர்க்காசனுய நம ; என்று அர்ச்சிக்க.

சிவ சூரிய பூஜை

வெண்டாமரை மலரின் மேல், விளங்குகின்ற ஒளி மிக்க சிவந்த வட்டமான மண்டலத்தின் நடுவில் மாதுளம்பூ நிறத்துடனும், தண்டுகளுடன் கூடிய வெண்டாமரை மலர்களை இரண்டு தோள்களிலும் பொருந்த ஏந்திய இரண்டு கைகளுடனும், ஒரு திருமுகம், இரண்டு கண்கள், சிவப்பு வஸ்திரம் உடையவராகச் சிவ சூரியமூர்த்தியைத் தியானித்து அஷ்ட தள பத்மத்தில் ஓம் கம் கஷோல் காய சூர்யமூர்த்தயே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நம: என்று நியாசம் செய்க. ஓம் பம் பாநு நேத்ராப்யாம் நம: என்று வலது கைச் சுட்டு விரல் நடுவிரல்களால் அஷ்டதள பத்மத்தில்நேத்ரம் காட்டிச் சிவசூரியமூலத்தால் புஷ்பாஞ்சலி செய்து, புருவமத்தியில் உள்ள அருண விந்து அஞ்சலியில் வந்ததாகப் பாவித்து அஞ்சலி புஷ்பத்தைச் சாத்தி, சிவ சூரிய மூலத்தால் ஆவாகனம், ஸ்தாபனம் சந்நிதானம், சந்நிரோதனம்செய்துபிம்பமுத்திரைகாட்டுக நேத்ரம்நீங்கிய ஹ்ருதயம் முதலான அங்கங்களில் அவ்வவ்வங்கமந்திரங்களைக் கொண்டு முறையே சுண்டு விரல், மோதிர விரல். நடு விரல் சுட்டு விரல். மோதிர விரலால் நியாசம் செய்து சிவ சூரிய மூலத்தால் ஏகத்வம் பாவித்து, திக்பந்தனம், அவ குண்டனம் செய்து தேனுமுத்திரை, மகாமுத்திரை காட்டுக. ச் வசூரிய மூலத்தால் பாத்தியம் இருமுறையும், ஸ்வதாந்த சூரிய மூலத்தால் ஆசமனம் மூன்று முறையும், ஸ்வாகாந்த சூரிய மூலத்தால் அர்க்கியம் ஒரு முறையும், கொடுத்து வௌஷடந்த சூரிய மூலத்தால் செஞ்சந்தனம், சிவப்புப் புஷ்பம், அறுகு அட்சதை சாத்தி மீண்டும் அர்க்கியம் கொடுத்துச் சூரியமூலத்தால் பத்ம முத்திரை பிம்ப முத்திரை சியாட்சூகங்அடிரி கமந்திரங்களால் லயாங்கம் அர்ச்சிக்க.

போகாங்க பூஜை

தென் கிழக்கு, வட கிழக்கு, தென் மேற்கு, வட மேற்கு ஆகிய நான்கு திசைகளிலுமுள்ள தாமரை இதழ்களில் முறையே ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம் ஆகிய அங்கங்களை யும், கர்ணிகையில் நேத்திரத்தையும், கிழக்கு முதல் வடக்கு வரை உள்ள நான்கு திசைகளின் இதழ்களில் அஸ்திரத்தை யும், அர்ச்சிக்க, ஹ்ருதயம் முதல் கவசம் வரை உள்ள அங்க தேவர்களைச் செந்நிறமும் அழகும் உள்ளவர்களாகவும், அபயம், தாமரைப் பூவைக் கைகளில் கொண்டவர்களாகவும் அஸ்திர தேவரைக்கோரப் பல், அச்சுறுத்தும்முகம், எரிகின்ற நெருப்பை ஒத்த ஒளி உள்ளவராகவும் விக்கின நீக்கம் செய்ப வராகவும் தியானிக்க. ஹ்ருதயம் முதலியநான்குக்கும் தேனு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முத்திரையும், நேத்திரத்துக்குக் கோவிடாண முத்திரையும் அஸ்திரத்துக்குத் திராசினி முத்திரையும் காட்டுக. எல்லா மூர்த்திகளுக்கும் அர்க்கியம் கொடுக்க.

சோமாதி ஆவரண பூஜை

மேற்கு முதல் தெற்கு வரை உள்ள நான்கு இதழ்களின் நுனிகளில் முறையே சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன் ஆகியவர்களையும், வடமேற்கு முதல் தென்மேற்கு வரை உள்ள நான்கு இதழ்களின் நுனிகளில் முறையே சனி, செவ்வாய், ராகு, கேது ஆகியவர்களையும் ஓம் ஸம் ஸோமாய நம; ஓம் பும் புதாய நம; ஓம் ப்ரும் ப்ருஹஸ்பதயே நம; ஓம் பம் பார்க்கவாய நம; ஓம் அம் அங்காரகாய நம; ஓம் சம் சனைஸ்சராய நம; ஓம் ரம் ராஹவே நம; ஓம் கம் கேதவே நம; என்று அர்ச்சித்து நமஸ்கார முத்திரை காட்டுக. சந்திரனை முல்லைப்பூ நிறத்துடனும், புதனைத் தங்க நிறத்துடனும் வியாழனைக் கோரோசனை நிறத்துடனும், செவ்வாயைப் பவளநிறத்துடனும், சனியைக்காயாம்பூநிறத்துடனும், ராகுவைக் கருநிறத்துடனும், கேதுவைப் புகை நிறத்துடனும் எல்லோரையும் சர்வாபரண பூஷிதர்களாய் வலது கையை அபயமாக, இடது கையை இடது துடையில் வைத்திருப்பவர்களாகச் சூரிய மூர்த்தியைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களாகத் தியானிக்க.

தூப தீப நைவேத்தியம்

சூரியனுக்கு வலப்பக்கத்தில் (வடக்கு) உஷா தேவியையும், இடப்பக்கத்தில் (தெற்கு) ப்ரத்யுஷா தேவியையும் செந்நிறம், சர்வாபரண பூஷிதம் இரண்டு கைகளிலும் தாமரை மலர்கள் கொண்டவர்களாகத் தியானித்து ஓம் அம் உஷா தேவ்யை நம; என்றும், ஓம் அம் ப்ரத்யுஷா தேவ்யை நம; என்றும் அர்ச்சிக்க, அகோர மந்திரத்தால் தூபமும், நேத்ர மந்திரத்தால் தீபமும், ஸ்வாகாந்த மூல மந்திரத்தால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

புஷ்பம் பிடித்த மிருகி முத்திரை கொண்டு நைவேத்யமும், செய்து சூர்ய மூல மந்திரத்தால் கற்பூரம் காட்டுக. வலது கையில் புஷ்பத்துடன் அர்க்கிய ஜலம் சேர்த்துக் கொண்டு சிவசூர்ய மூல மந்திரத்தைப் பத்து முறையும், அங்க மந்திரங் களை ஒருமுறையும் ஜபித்து வௌஷடந்த சூரியமூல மந்திரத் தால் உத்பவ முத்திரை கொண்டு ஜலத்தைச் சூரியன்முன்னே விட்டுப் புஷ்பத்தைச் சாத்துக. கோளறு திருப்பதிகத் தோத்திரம் பண்ணுக. ஹூம்பட் அந்த அஸ்திர மந்திரம் உச்சரித்து நாராச முத்திரையால்அங்கமந்திரங்களை ளு்ப்பிச் சூரியனிடத்தில் சேர்த்து அர்க்கியம் கொடுத்துச் சிவசூரிய மூலமந்திரத்தாலும், ஹ்ருதய மந்திரத்தாலும் சிவ சூரிய மூர்த்தியை ஹ்ருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

தேஜச் சண்ட பூஜை

வடகிழக்கில் தேஜச்சண்டரைச் செந்நிறம், அச்சுறுத் தும் முகம், அபயம், தாமரை கொண்ட கைகள் சடைமுடி உடையவராகத் தியானித்து ஆசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சித்து ஆவாகனம் ஸ்தாபனம் சந்நிதானம் சந்நிரோ தனம் அவகுண்டனம் செய்து தேனு முத்திரை காட்டி அர்க் கியம் கொடுத்துச் சூரிய நிர்மால்யத்தை நிவேதித்துத் தூப தீபம் காட்டி அஸ்திரத்தால் தாளத்திரயம் செய்து ஓம் அம் தேஜச்சண்டாய ஹ்ருதயாய நம; என்று ஒடுக்கிக் கொள்க. சூரிய சகளீகரணத்தால் சூரிய சொரூபமாகப் பாவித்துக் கொண்ட பாவனை நீங்கும் பொருட்டு ஆசமனம் செய்து திருநீறு அணிக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சிவமயம்

ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை

சிவ பூஜா விதி

வடக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு கணபதி, குரு வணக்கம் செய்து கொள்க.

பிராணாயாமம்

இந்திரியங்களின் இயக்கம் அனைத்தும் பிராண வாயுவின்இயக்கத்தினாலேயே நிகழுகின்றன. பிராண வாயுவை அடக்கினால் இந்திரியச்சேட்டைஒடுங்கும். அங்ஙனம் இந்திரியங்களை வெல்லவும், செய்யும் செயல்களுக்கு முழுப் பயன் சித்திக்கவும், பிராணாயாமம் துணை செய்யும். வலக்கைச்சுட்டுவிரலையும், நடுவிரலையும் உள்ளடக்கி வராக முத்திரை கொண்டு, கட்டை விரல், மோதிர விரல்களால் வலது இடது நாசிகளை அழுத்திப் பிடித்துப் பிராண வாயுவைச் சிரசில் நிறுத்தி, மோதிர விரலால் இடது மூக்கை அழுத்தி மூடி வலது நாசிப்பிங்கல நாடி வழியாக உள்ளே உள்ள அசுத்த வாயுவை வெளிப்படுத்திக் கட்டை விரலால் வலது நாசியை மூடி இடதுநாசி இடகலை நாடி வழியாக வெளியேயுள்ள சுத்தவாயுவை உள்ளே செலுத்தி மோதிர விரலால் இடதுநாசியைமூடி உட்சென்ற வாயுவைச் சுழுமுனையாகிய நடுநாடியில் நிற்கும்படி நிறுத்தி வலது நாசியில் மூடிய கட்டை விரலை எடுத்துமூச்சை வெளியே விடுக. மூச்சை உள்ளே செலுத்துதலாகிய பூரகம், நிறுத்துதலாகிய கும்பகம், வெளிவிடுதலாகிய ரேசகம் என்னும் மூன்றையும் ஒன்றுக்கு ஒரு முறையாக மூன்று முறை சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்துச் செய்க. பிராணாயாம முடிவில் எல்லா அசுத்தங்களும் நீங்கும் பொருட்டுக் கங்கையும் அக்கினியும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தங்கி உள்ள மூக்குவலக்காதைப் பதாகை முத்திரைகொண்டு சிவ மூலமந்திரம் ஓதித் தொடுக.

சகளீ கரணம்

கர நியாசம்

வலக்கையில் அக்கினியும் இடக்கையில் கங்கையும் இருப்பதைச் சிந்தித்து வலக்கையை இடக்கையால் மேலும், கீழும் ஒருதரமும் இடக்கையை வலக்கையால் மேலும் கீழும் இரண்டு தரமும் ஓம் ஹ; அஸ்த்ராய பட் என்று சாண முத் திரையால் துடைத்து அக்கினியால் அசுத்தம் நீங்கிக் கங்கை யால் சுத்தம் உண்டானதாகப் பாவித்துச்சிவசக்தியின் திரு வருள் அமைவதற்காக ஓம் ஹாம் சக்தயே வெளஷட்என்று இரண்டு கைகளையும் கூப்புக. இரண்டு கைகளையும் பிரசன்ன முத்திரையால் சேர்த்துக்கட்டை விரல்களை உள்ளங்கைகளில் வைத்து மற்ற எட்டுவிரல்களையும்நீட்டிக்கைகளை எட்டிதழ்த் தாமரையாகப் பாவித்து உள்ளங்கைகளில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதைச் சிந்தித்து அதிட்டானமுத்திரையால் ஓம் ஹாம் சிவாசனுய நம; என்றும், ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவ மூர்த்தயே நம; என்றும், கட்டை விரல்களால் உள்ளங் கைகளைத் தொடுக. சிவபெருமானது ஐந்து சிரசுகளும் அவ யவங்களும் அமைவதற்காகச் சுட்டு விரல்களால் கட்டை விரல்களின் நுனிகளில் உஷ்ணீக முத்திரை கொண்டு ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம; என்றும் கட்டை விரல்களால் சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் நுனிகளில் முறையே சின்முத்திரை, மோகமுத்திரை, திவ்யமுத்திரை, ஆக்ர முத்திரைகள் கொண்டு ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம; ஓம் ஹூம் அகோர ஹ்ருதயாய நம;ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம; ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம; என்றும் தொடுக. சிவபெருமானது ஞானதேகம் அமைவதற் காகக் கட்டைவிரல்களால் உள்ளங்கைகளில் அதிட்டான முத்திரை கொண்டு ஓம் ஹாம் வித்யா தேஹாய நம; என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தொட்டு ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி ரூபமான முக்கண்கள் அமைவதற்காக நடுவிரல்கள் மூன்றினலும் உள்ளங்கைகளில் கடாமுத்திரை கொண்டு ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம; என்று தொட்டுப் பெருவிரல்களால் உள்ளங்கைகளில் அதிட்டான முத்திரைகொண்டுசிவமூலமந்திரம்உச்சரித்துத் தொடுக. கட்டைவிரல்களால் சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல், சுட்டுவிரல்களில் முறையே ஆக்ர முத்திரை, திவ்யமுத்திரை, மோகமுத்திரை, சின்முத்திரை கொண்டு ஓம்ஹாம் ஹ்ருதயாயநம; ஓம் ஹீம் சிரசேநம; ஓம் ஹூம் சிகாயை நம ஓம் ஹைம் கவசாய நம; என்றும் சுட்டு விரல்களால் கட்டைவிரல்களில்உஷ்ணீக முத்திரை கொண்டு ஓம் ஹ ; அஸ்த்ராய நம; என்றும் தடவுக. இரண்டு கைகளையும்ஆன்மலீக முத்திரை கொண்டு ஓம் ஹைம் கவசாய நம; என்று ஒன்றை ஒன்றினல் சுற்றுக. இங்ஙனம் நியாசம் செய்த மந்திரங்களை நமஸ்கார முத்திரை கொண்டு சிவமூல மந்திரம்உச்சரித்து ஒன்று படுத்துக.

அங்க நியாசம்

சுத்தியின் பொருட்டுப் பாதம் முதல் சிரசு வரை ஓம் ஹ; அஸ்த்ராய பட் என்று பாவனையாகத் தடவி வலக் கைக்கட்டைவிரல் அணைந்த மோதிரவிரலால் திவ்யமுத்திரை கொண்டு மார்பில் ஓம் ஹாம் சிவாசனய நம; என்றும், ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம; என்றும் தொட்டுக் கட்டைவிரல் சுட்டுவிரல் நடுவிரல் மோதிரவிரல் சுண்டுவிரல் களால் உஷ்ணீக முத்திரை சின் முத்திரை மோக முத்திரை திவ்ய முத்திரை ஆக்ர முத்திரை கொண்டு முறையே உச்சி, புருவநடு, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் ஆகியவற்றை ஓம் ஹோம் ஈசானமூர்த்தாய நம; ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம; ஓம் ஹ்ூம் அகோர ஹ்ருதயாய நம; ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம; ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம; என்று தொட்டுக், கட்டைவிரல் அணைந்த மோதிர

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

விரலால் திவ்ய முத்திரை கொண்டு மார்பில் ஓம் ஹாம் வித்யா தேஹாய நம; என்று தொட்டுச் சுட்டுவிரல், நடு விரல், மோதிரவிரல்களால் ஆக்ர கண்ட முத்திரை கொண்டு வலக்கண், புருவநடு, இடக்கண் ஆகியவற்றை ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம; என்று தொட்டுச் சுட்டுவிரலால் ஆக்ர முத்திரை கொண்டு மார்பில் சிவமூல மந்திரம் உச்சரித்துத் தொட்டுச் சுண்டுவிரல் மோதிரவிரல் நடுவிரல்களால் ஆக்ர முத்திரை, திவ்யமுத்திரை, மோகமுத்திரை கொண்டு மார்பு, தலை, சிகை ஆகியவற்றில் ஓம் ஹாம் ஹ்ருதயாயநம; ஓம் ஹீம் சிரசே நம; ஓம் ஹூம் சிகாயைநம; என்று தொட்டு இடக்கைச் சுட்டுவிரலால் மார்பிலிருந்து வலமாக மார்பு வரையும், வலக்கைச் சுட்டுவிரலால் மார்பிலிருந்து இடமாக மார்பு வரையும் நாராச முத்திரை கொண்டு ஓம் ஹைம் கவசாய நம; என்று கழுத்தைச் சுற்றி, வலது உள்ளங்கையில் இடது கை மோதிர விரலாலும், இடது உள்ளங்கையில் வலது கை மோதிர விரலாலும், உஷ முத்திரை கொண்டு ஓம் ஹ: அஸ்த்ராய நம; என்று தொட்டு அசுரர்கள் அஞ்சி ஓடும் பொருட்டு இடது உள்ளங்கையில் வலது கை நடுவிரல் சுட்டு விரல்களால் கோவிடாண முத்திரை கொண்டு ஓம் ஹ; அஸ்த்ராய பட் என்று மூன்று தடவை தட்டுதலாகிய தாளத் திரயம் செய்து எல்லாத் திக்குகளிலும் ஒளி உண்டாகிக்காப்பு நிகழும் பொருட்டுச் சோடிகா முத்திரை கொண்டு கட்டை விரலில் சுட்டு விரலால் சுண்டுதலாகிய திக்பந்தனத்தை ஓம் ஹ; அஸ்த்ராய நம; என்று செய்து சுட்டுவிரலைக் கீழ்நோக்கி வளையமாகச் சுற்றுதலாகிய அவகுண்டனத்தை ஓம் ஹைம் கவசாய நம; என்று செய்து மகாமுத்திரை கொண்டு வௌஷ டந்த சிவமூல மந்திரம் உச்சரித்துத் தேகத்தைப் பாவனை யால் தொடுக.

சாமான்ய அர்க்கியம்

அர்க்கிய வட்டகையில் திவ்ய முத்திரை கொண்டு அஸ்திர மந்திரத்தால் ஜலம் புரோக்ஷித்து ஓம் ஹாம் ஹ்ருத

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

யாய வௌஷட் என்று நீர் நிரப்பி எடுத்துப் புருவநடு வரை கொண்டு போய் அங்குள்ள அமுதம் அதில் கலந்ததாகச் சிந்தித்துக் கீழே வைத்துச் சிவமூல மந்திரத்தால் சந்தனம் புஷ்பம் அறுகு அட்சதை சேர்த்துப் பிரணவத்தால் ஏழு முறை அர்ச்சித்துப் பதாகை முத்திரை கொண்டு ஓம் ஹைம் கவசாய நம; என்று மூடி ஏழுமுறை பிரணவத்தால் அபிமந்திரித்துத் திக்பந்தனம் அவகுண்டனம் செய்து தேனுமுத்திரை கொடுக்க.

துவார பூஜை

பூசைப் பீடத்தின் மேற்குத் துவாரத்தில் (வாயில்) சாமான்ய அர்க்கிய ஜலத்தை ஓம்ஹ; அஸ்த்ராய நம ;என்று புரோக்ஷித்து நிலேயின் மேற்படியில் தென்புறத்தில் கருநிறம் பெருவயிறு வலது இடது மேற்கைகளில் பாசம், அங்குசம், கீழ்க்கைகளில் தந்தம், அக்ஷமாலே, துதிக்கையில் மாதுளம் பழம் கொண்டவராகவும், பத்மாசனத்தில் இருப்பவராகவும் கணபதியை தியானித்து ஓம் ஹாம் கணபதயே நம; என்று அர்ச்சிக்க.

நிலேயின் மேற்படியில் வடபுறத்தில் வெண்மை நிறம், வெள்ளே வஸ்திரம், வலக்கரத்தில் அக்ஷமாலே, இடக் கரத்தில் ஏடு, பத்மாசனம் கொண்டவராகவும், வீணுகானம் செய்பவராகவும் சரஸ்வதியை தியானித்து ஓம் ஹாம் சரஸ்வத்யைநம; என்று அர்ச்சிக்க.

கணபதிக்கும் சரஸ்வதிக்கும் நடுவில் பொன்னிறம் மேல் இடக்கையில் வில்வப்பழம், வலக்கையில் தாமரைப்பூ கீழ்க்கைகளில் அபயவரதம், பத்மாசனம்கொண்டவராகவும் இரண்டு பக்கங்களிலும் இரண்டு யானேகளால் பொற்குடங் களில் நிரம்பிய கங்கை நீர் கொண்டு அபிஷேகிக்கப் பெறுகிற வராகவும், மகாலட்சுமியைத் தியானித்து ஓம் ஹாம் மஹா லக்ஷ்ம்யை நம; என்று அர்ச்சிக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வாயிலுக்கு வெளியில் தென்பக்கத்தில் செந்நிறம், செஞ்சடை, முக்கண்கள், வலக்கையில் ஜபமாலை, இடக்கையில் மழு உடையவராக நந்திதேவரைத்தியானித்து ஓம்ஹாம் நந்திநே நம; என்று அர்ச்சிக்க.

நந்திதேவருக்கு வலப்பக்கத்தில் அவருக்கும் கணபதிக்கும் நடுவில் வெண்ணிறம், வலக்கையில் சாமரம், இடக்கையில் பூர்ண கும்பம், மீன்வாகனம் உடையவராகக் கங்காதேவியைத் தியானித்துஓம்ஹாம் கங்காயை நம; என்று அர்ச்சிக்க.

வாயிலுக்கு வெளியில் வடபக்கத்தில் கருநிறம், கோரப்பல், முக்கண்கள், மேல்வலக்கையில் கபாலம், மேல் இடக்கையில் திரிசூலம், கீழ்வலக்கையில் அச்சுறுத்தும் சுட்டு விரல், கீழ்இடக்கையில் பரசு உடையவராக மஹா காளரைத் தியானித்து ஓம் ஹ்ராம் மஹாகாளாய நம; என அர்ச்சிக்க.

மஹாகாளருக்கு இடப்பக்கத்தில் அவருக்கும் சரஸ்வதிக்கும் நடுவில் பச்சை நிறம், வலக்கையில் சாமரம், இடக்கையில் பூர்ண கும்பம், ஆமை வாகனமுடையவராக யமூனு தேவியைத் தியானித்து ஓம் ஹ்ராம் யமுனாயை நம; என்று அர்ச்சித்து, மேற்கண்ட ஏழு துவார தேவர்களுக்கும் ஓம் ஹாம் சர்வேப்யோத்வார பாலேப்ய ஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுக்க.

விக்நோச்சாடனம்

சிவமூல மந்திரத்தை உச்சரித்து திவ்ய முத்திரையால் வலது இடது கண்களைத்தொட்டு மேலேபார்த்து அங்கு உள்ள விக்கினங்களை நீக்கி வலக்கையை இடப்பக்கத்திலும், இடக்கையை வலப்பக்கத்திலும் வைத்து நாராச முத்திரை கொண்டு ஓம்ஹ; அஸ்த்ராய ஹூம்பட் என்று புஷ்பங்களைத் தெறித்துப் பக்கங்களிலுள்ளவிக்கினங்களைப்போக்கிப்பத்துக் கைகள், பேராற்றல், உக்கிரமான ஐந்து முகம், பதினைந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கண்கள், கோடி சூரியப்பிரகாசம், கபால மாலாபரணம், சந்திர சூடனம், திருநீறு அணிந்த செம்மேனி, நாகாபரணம் கட்கம் பாணம், கேடயம், சூலம், பாசம், மணி, வில், கபாலம், வரதம், வச்சிரம் கொண்டவராகப் பாசுபதாஸ்திர தேவரைத் தியானித்து ஓம் ச்லீம் பம் சும் ஹூம் பட் பாசுபதாஸ்திராய நம; என்று வலது பாதத்தால் மூன்று முறை பூமியில் தட்டிப் பூமியிலுள்ள விக்கினங்களை நீக்குக.

பூசா கிருஹப் பிரவேசம்

பூசைக்கிருகத்தின் இடப்பாகத்தை அடைந்து வலக் காலை முன்னே வைத்துஉள்ளே செல்வதாகச்சிந்தித்துக் கீழ்ப் படியில் தீ நிறம், நான்கு முகம், சத்தி சூலம் அபயம் வரதம் கொண்ட நான்கு கைகள், சடா மகுடம், சந்திர சூடனம் உடையவராகவும், விக்கினங்களைநீக்குபவராகவும், அஸ்த்ரத் வார பாலதேவரைத் தியானித்து ஓம் ஹ அஸ்த்ரத் வார பாலாய நம; என்று அர்ச்சிக்க. தென் மேற்குத் திக்கில் அன்ன வாகனம், பெருவயிறு, பொன்னிறம், தாடி மீசை, நான்கு முகங்கள், தண்டு ஜபமாலை, கமண்டலம், சிருக்குக் கொண்ட நான்குகைகள் உடைய வாஸ்து அதிபரா கிய பிரமாவைத் தியானித்து ஓம்ஹாம் வாஸ்த்வாதி பதயே ப்ரம்மணே நம; என்று அர்ச்சிக்க.

அபிஷேக ஜலம் சேகரித்தல்

அபிஷேக கலசத்தைச் சிவமூல மந்திரம் ஓதி நிரீட் சணமும், ரக்ஷாவகுண்டனங்களும் செய்து, சம்ஹிதா மந் திரங்களால் ஜலத்தைவடிகட்டி, சிவகாயத்ரி மந்திரத்தாலும் ஹ்ருதய மந்திரத்தாலும் நிரப்பிக் கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பூத சுத்தி

ஆன்ம சுத்தி

கணபதி குரு வணக்கம் கர நியாசம் செய்து கொள்க. இரண்டு கால்களின் கட்டை விரல்களிலிருந்து தொடங்கி மூலாதாரம் வரை இரண்டு வடிவாகவும், அதற்கு மேல் ஒன்று சேர்ந்து பிரமரந்திரம் வரை ஒரே வடிவாகவும் ஓடுகின்ற சுழுமுனை நாடி, இடை பிங்கலையுடன் பின்னி உள் தொளையுடன் மின்னல் கொடிபோல் விளங்குகின்றது. அச் சுழுமுனை நாடியில் இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவ நடு, பிரமரந்திரம் என்னும் ஐந்து இடங்களில் கீழ் நோக்கிய ஐந்து தாமரை மொட்டுக்கள் உள்ளன. இந்நாடியின் உள்ளும் புறமும் அமுதம் பொழியும் பரம வியோமரூபியான குண்டலினி சத்தியும், அதில் தீபம் போல் ஒளிவிடும் ஹூம் என்ற பீஜமும் இருக்கின்றன. இதனை முறையாகச் சிந்தித்து ஹூம் என்னும் பீஜத்தில் மனசை நிறுத்தி வாயுவை இட மூக்கின் வழியாக உள்ளே வாங்கிச் சுழுமுனு நாடி வழியாகத் துவாதசாந்தம் வரை கொண்டு போய்ச் சோடிகா முத்திரையால் ஹூம் பட் என்று ஐந்து முறை உச்சரித்துக் கீழ்நோக்கி இருக்கும் ஐந்து தாமரை அரும்புகளும் மேல் நோக்கு முகங்களுடன் மலர்ந்தனவாகச் சிந்தித்து வாயுவை வல முக்கின் வழியாக வெளியே விடுக.

மறுபடியும் வாயுவை இடது மூக்கின் வழியாக வாங்கி உள்ளே நிறுத்தி இருதயத்தில் மின்னொளியுடன் ஹம் என்ற ஆத்ம பீஜத்தில் விளங்குவதும், நுட்பமானதும், புரி அட்டகதேகத்திலிருந்து விடுதலைபெற்றதுமான ஆத்மாவைத் தியானித்து இருதயத்திலிருந்து சம்ஹார முத்திரை கொண்டு ஓம் ஹூம் ஹாம் ஹம் ஹாம் ஹூம் ஆத்மனே நம; என்று வாங்கிக் கண்டம், நாக்கின் அடி, புருவநடு, பிரமரந்திரம் வழியாகச் சுழுமுனு நாடியின் மூலம் ஏற்றி, ஆன்மா திரும்பவும் தேகத்தில்வந்து போகம் புசிக்க இருப்பதாகப்பாவித்துத் துவாத சாந்தத்தில் உள்ள பரமசிவனிடத்தில் சேர்க்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சூக்கும தேக சுத்தி

பிருதிவி முதலான முப்பத்தாறு தத்துவங்களையும் அவையவற்றின் காரணங்களில் ஒடுங்கச் செய்வதற்குப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் முறையே கந்தம், ரசம், ரூபம், ஸ்பரிசம், சப்தம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளிலும் அவற்றைத் தாமச அகங்காரத்திலும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆகிய ஐந்து கன்மேந்திரியங்களை இராஜசஅகங்காரத்திலும் சுரோத்திரம், துவக்கு சட்சு, ஜிஹ்வை, ஆக்ராணம் ஆகிய ஞானேந்திரியங்களையும், மனசையும், சாத்துவிக அகங்காரத்திலும் இம்மூவகை அகங்காரங்களையும் புத்தியிலும், புத்தியைக் குணத்திலும் குணத்தைப் பிரகிருதியிலும், பிரகிருதி அராகம் வித்தை ஆகியவற்றைக் கலையிலும், புருடன் கலை, நியதி, காலம் ஆகியவற்றை மாயையிலும், மாயையைச் சுத்த வித்தையிலும், சுத்த வித்தையை ஈசுவரத்திலும், ஈசுவரத்தைச் சதாசிவத்திலும் சதாசிவத்தைச் சத்தியிலும், சத்தியைச் சிவத்திலும், சிவத்தை நிர்விகார குண்டலினி சத்தியிலும் ஒடுங்கியதாகச் சிந்திக்க.

தூல தேக சுத்தி

பிருதிவி மண்டலத்தைப் பொன்னிறம், கடின இயல்பு, வச்சிர அடையாளம், நாற்கோண வடிவம்கொண்டதாகவும், ஹ்லாம் என்னும் பார்த்திவபீஜம் உடையதாகவும் நிவிர்த்திகலையால் அதிட்டிக்கப்பட்டுச் சத்யோசாத மந்திரத்துடன் காரணேசுவரரான பிரம்மாவை அதிதேவதையாகக் கொண்டதாகவும், பாதம் முதல் சிரசு வரை வியாபித்திருப்பதாகவும் சிந்தித்து ஓம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் நிவ்ர்த்தி கலாயை ஹ ; ஹூம் பட் என்று பிருதியிவின் கந்த ரச ரூப பரிச சப்த குணங்கள் அதற்குப் பகையான வாயுவினால் அடக்கப் பெற்று அவ்வாயுவாகவே ஆனதாகப் பாவித்து வலக்கையில்புஷ்பம் வைத்துக்கொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இடதுநாடிவழியாகவாயுவைஉள்ளே இழுத்துச்சுழுமுனாநாடி வழியாகத் துவாத சாந்தம் வரை கொண்டு போய் வலதுநாசி வழியாக வெளியே விட்டுப் புஷ்பத்தை முழங்கால்கள் நாபி மார்பு நெற்றி சிரசு ஆகியஇடங்களில் பாவனையால் தொட்டு துவாத சாந்தம் வரை கொண்டு போய்ப் பின்புறம் போடுக.

அப்புமண்டலத்தைவெண்ணிறம், குழையும்இயல்பு தாமரை அடையாளம், அரைச்சந்திரவடிவம் கொண்டதாக வும், ஹ்வீம் என்னும் அப்பு பீஜம் உடையதாகவும், பிரதிட்டா கலையால் அதிட்டிக்கப்பட்டு வாமதேவ மந்திரத் துடன் காரணேசுவரரான விஷ்ணுவை அதிதேவதையாகக் கொண்டதாகவும் பாதம் முதல் சிரசு வரை வியாபித்திருப்ப தாகவும் சிந்தித்து ஓம் ஹ்வீம் ஹ்வீம் ஹ்வீம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலாயை ஹ ; ஹூம்பட் என்று அப்புவின் ரசரூப பரிச சப்த குணங்கள் அதற்குப் பகையான அக்கினியால் அடக்கப்பெற்று அவ்வக்கினியாகவே ஆனதாகப் பாவித்து வலக்கையில் புஷ்பம்வைத்துக் கொண்டு இடதுநாடிவழியாக வாயுவைஇழுத்துச் சுழுமுனாநாடி வழியாகத் துவாதசாந்தம் வரை கொண்டு போய் வலது நாடி வழியாக வெளியேவிட்டுப் புஷ்பத்தை நாபி, மார்பு நெற்றி, சிரசு ஆகிய இடங்களில் பாவனையால் தொட்டுத் துவாத சாந்தம் வரை கொண்டு போய்ப் பின்புறம் போர்டுக.

அக்கினி மண்டலத்தைச் செந்நிறம், சுடும் இயல்பு, ஸ்வஸ்திக் அடையாளம் முக்கோண வடிவம் கொண்டதாக வும் ஹ்ரூம் என்னும் வன்னிபீஜம் உடையதாகவும் வித்யா கலையால் அதிட்டிக்கப்பட்டு அகோர மந்திரத்துடன் காரணே சுவரரான உருத்திரரை அதிதேவதையாகக் கொண்டதாக வும்பாதம்முதல்சிரசுவரை வியாபித்திருப்பதாகவும் சிந்தித்து ஓம் ஹ்ரூம் ஹ்ரூம் ஹ்ரூம் வித்யாகலாயை ஹ ; ஹூம் பட் என்று அக்கினியின் ரூப பரிச சப்த குணங்கள் அதற்குப் பகை யான நீரால் அடக்கப்பெற்று அந்த நீராகவே ஆனதாகப் பாவித்து வலக்கையில்புஷ்பம் வைத்துக்கொண்டு இடதுநாடி வழியாக வாயுவை இழுத்துச் சுழுமுனா நாடி வழியாகத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

துவாத சாந்தம் வரை கொண்டு போய் வலது நாடி வழியாக வெளியே விட்டுப் புஷ்பத்தை மார்பு, நெற்றி, சிரசு ஆகிய இடங்களில்பாவனையால் தொட்டுத் துவாத சாந்தம் வரை கொண்டு போய்ப் பின்புறம் போடுக.

வாயு மண்டலத்தைக் கருநிறம், பரவும் இயல்பு, ஆறுபுள்ளி அடையாளம், அறுகோணவடிவம் கொண்டதாக வும் ஹைம்என்ற வாயுபீஜம்உடையதாகவும் சாந்திகலையால் அதிட்டிக்கப்பட்டுத் தத்புருஷ மந்திரத்துடன் காரணேசுவர ரான மகேசுவரரை அதிதேவதையாகக் கொண்டதாகவும், பாதம் முதல் சிரசு வரை வியாபித்திருப்பதாகவும் சிந்தித்து ஓம் ஹைம் ஹைம் சாந்தி கலாயை ஹ ; ஹூம்பட் என்று வாயுவின் பரிசசப்தகுணங்கள் அதற்குப் பகையான பிருதிவி யால் அடக்கப்பெற்று அந்தப் பிருதிவியாகவே ஆனதாகப் பாவித்து வலக்கையில் புஷ்பம் வைத்துக் கொண்டு இடது நாடி வழியாக வாயுவை இழுத்துச் சுழுமுனு நாடி வழியாகத் துவாத சாந்தம் வரை கொண்டு போய் வலது நாடி வழியாக வெளியே விட்டுப் புஷ்பத்தை நெற்றி, சிரசு ஆகிய இடங் களில் பாவனையால் தொட்டுத் துவாத சாந்தம் வரை கொண்டு போய்ப் பின்புறம் போடுக.

ஆகாய மண்டலத்தைப் புகைநிறம் இடம் தரும் இயல்பு, ஒற்றைப் புள்ளி அடையாளம் வட்ட வடிவம் கொண்டதாகவும் ஹெளம் என்னும் ஆகாய பீஜம் உடைய தாகவும் சாந்தி அதீத கலையால் அதிட்டிக்கப்பட்டு ஈசான மந்திரத்துடன் காரணேசுவரரான சதாசிவரை அதிதேவதை யாகக் கொண்டதாகவும் பாதம் முதல் சிரசு வரை வியாபித் திருப்பதாகவும் சிந்தித்து ஓம் ஹெளம் சாந்த்யதீதகலாயை ஹ; ஹூம்பட்என்றுஆகாயத்தின்சப்தகுணத்தைஅகற்றி அப் பூதாகாயம் நித்தியமாய் வியாபகமாய்ச் சுத்தமாயிருக்கிற பரமாகாயத்தால் அடக்கப்பெற்று அப்பரமாகாயமாகவே ஆனதாகப்பாவித்து வலக்கையில் புஷ்பம் வைத்துக்கொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இடது நாடி வழியாக வாயுவை உள்ளே இழுத்துச் சுழுமுனு நாடி வழியாகத் துவாத சாந்தம் வரை கொண்டுபோய்வலது நாடி வழியாக வெளியே விட்டுப் புஷ்பத்தைச் சிரசில் பாவனை யால் தொட்டுத் துவாத சாந்தம் வரை கொண்டு போய்ப் பின்புறம் போடுக.

பூத தோஷ தகனமும் அமிர்தாபிஷேகமும்

பஞ்ச பூத மண்டலங்கள் ஒன்ருல் ஒன்று சுத்தியாகி அப் பூத பரிணும ரூபமான தேகம் மெலிந்ததாகப் பாவித்து வலது கால் கட்டை விரலிலிருந்து சிவ சத்தியால் அதிட்டிக் கப்பட்ட அக்கினியை ஓம் ஹ; அஸ்த்ராய ஹூம் பட் என்று எழுப்பிப் பூத தோஷங்களை எரித்து மல பந்தங்கள் நீங்கியதாகவும் நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகள் மட்டும் மாறுபடாமல் நிற்பதாகவும் பாவித்துச் சிவமூல மந்திரத்தை ஓதித் துவாத சாந்தத்திலுள்ள குடிலா சத்தியினின்றும் பெருகுகின்ற அமுத தாரை, உள்ளும் புறமும் அபிஷேகம் ஆனதாகப் பாவிக்க.

ஜீவ ஸ்தாபனம்

ஹ்ருதய கமலத்தில் ஷடுத்தாசனமும், பத்மாசன மும் அர்ச்சித்து ஓம் ஹாம்ஹம் ஹாம் ஆத்ம மூர்த்தயே நம; என்று புரி அட்டக தேகத்தை நியாசம் செய்து அதில் பரம சிவனிடம் சேர்த்த ஆன்மாவை ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத் மனே நம; என்று கொண்டுவந்து வைத்துத் துவாத சாந்தத் திலுள்ள சத்தி மண்டலத்திலிருந்து பெருகும் அமுத தாரை யால் ஓம் ஹௌம் சக்தயே வௌஷட் என்று நனைத்துச் சகளீகரணம் செய்க.

ஸ்தான சுத்தி

அஸ்திர மந்திரத்தால் தாளத்திரயம்செய்து இடையூறுகளைப் போக்கிப் பத்துத் திக்குகளிலும் திக்பந்தனம் செய்து அசுரர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முதலியோர் உட்புகா வண்ணம் அக்கினி வடிவான மதில்களையும், அவகுண்டனம் செய்து அகழ்களையும் பாவித்து வௌஷடந்த சத்தி மந்திரத்தால் மேலும் கீழும் தேனு முத்திரை காட்டி அமிர்தீகரணம் செய்க.

அந்தர் யாக பூஜை

நாபிக்குக் கீழே பிருதிவி தத்துவத்தைக் கிழங்காகவும், அதற்கு மேல் அப்பு முதலிய இருபத்துமூன்று தத்துவங்களை எட்டங்குல உயரமும், ஒன்பது தொளைகளும், முட்களும் கொண்ட தண்டாகவும், அசுத்த மாயையை முடிச்சாகவும், ஏழு வித்யா தத்துவங்களுடன் சுத்த வித்தையைச் சேர்த்து எட்டுப் புற இதழ்களாகவும் அஷ்ட வித்தியேசுவரர்களை எட்டு அக இதழ்களாகவும் கொண்ட தாமரைப் பூவில் ஈசுவரம், சாதாக்கியம் ஆகியதத்துவங்களை அறுபத்து நான்கு கேசரங்களாகவும், நடுவில் சத்தி தத்துவத்தைப் பொகுட்டாகவும், சிவதத்துவத்தை அப்பொகுட்டினுள் விளங்கும் ஐம்பத்தொரு அட்சரமாகிய பீஜமாகவும் இருதய கமலத்தில் சிவாசனத்தைத் தியானிக்க.

சிவாசனத்தில் பேரொளிப் பிழம்பாயுள்ள சிவபெருமான் சத்தி வடிவினராக எழுந்தருளி இருப்பதைச் சிந்தித்து ஆவாகனுதிகள் செய்து மானசீகமாகப் பூஜிக்க.

பூசை செய்யுமிடத்துச் சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலியவற்றை மனத்தால் கற்பித்துக்கொண்டு அபிஷேகம் அலங்காரம் தூப தீபம், நைவேத்தியம் முதலியனவும் மனத்தால் செய்க.

அகத்து அக்கினி காரியம்

நாபியில் மூன்று மேகலைகளை உடைய குண்டத்தையும் அதில் அக்கினியையும் அஸ்திரமந்திரத்தால் ஒளிபெறச் செய்து நிரீட்சணம் முதலிய சுத்திகளைப்பண்ணி அவ்வக்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வியைத் துவாத சாந்தத்திலிருக்கும் சிவத்துடன் சேர்த்து, அதனுல் பேரொளியடைந்த ஞானுக்கினியான அதை நாபி குண்டத்தில் நிறுத்திச்செந்நிறம், இரண்டுதிருமுகம், பத்துத் திருக்கரங்களுடன் சதாசிவத்தையொத்த திருமேனியுடைய தாகச் சிந்தித்துச் சிவாசன மூர்த்தி மூலங்களால் பூசித்துப் புருவ நடுவிலுள்ள விந்துத் தானத்திலிருந்து பெருகுகின்ற அமுத தாரையாகிய நெய்யை இடை நாடியாகிய சுருவத் தால் ஆகுதியும் சுழுமுன நாடியாகிய சுருக்கினுல் பூரணுகுதி யும் செய்து அஷ்டபுஷ்பம் சாத்திப் புருவ நடுவில் நிஷ்கள ரூபமான சிவபரம்பொருளைத் தியானித்துச் சமாதி கூடுக. சிவபெருமானிடத்தில் புறப்பூசை செய்வதற்கு அநுமதி பெற்றுக் கொள்க.

சிவ ஹஸ்த பாவனை

சிவமூல மந்திரம் ஓதி வலது உள்ளங்கையில் இடது கைக் கட்டை விரலால் சந்தனம், புஷ்பம் அட்சதை வைத்து ஷடுத்தாசன மந்திரங்களாலும். சிவாசன மூர்த்தி மந்திரங் களாலும் நியசித்து சம்ஹிதா மந்திரங்களையும் மூல மந்திரத் தையும் அங்க நியாசத்தில் அவ்வம் மந்திரத் துக்குக் குறித்த முத்திரைகளால் நியாசம் செய்து இரண்டு கைகளையும் சிவரூபமாகப் பாவித்துச் சிவமூல மந்திரத்தால் சிரசில் வைத்து, திவ்ய திருஷ்டியால் இரண்டு கைகளையும் பார்த்துச் சிவபெருமானது கைகளாகப் பாவிக்க.

விசேடார்க்கியம்

அர்க்கிய வட்டகைய்யை அஸ்திர மந்திரத்தால் சுத்தி செய்து விந்து ஸ்தான அமுத ரூபமாகச் சிந்தித்த நீரை வௌஷடந்த ஹ்ருதய மந்திரத்தால் நிரப்பிப் பால் தர்ப்பை நுனி அல்லது அறுகு நுனி அரிசி, சந்தனம், புஷ்பம், எள், யவம், வெண்கடுகுசேர்த்துச் சிவாசன மூர்த்திமூலம்வித்தியாதேகம் நேத்திரம் மற்றை அங்கமந்திரங்கள் ஆகியவற்ருல்அர்ச்சித்து அர்ச்சித்த மந்திரங்களால் அபிமந்திரித்து திக்பந்தனம் அவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

குண்டனம் செய்து தேனுமுத்திரை காட்டுக.

பாத்தியம்—ஆசமனம்

அர்க்கிய வட்டகைகளை அஸ்திரமந்திரத்தால் சுத்தி செய்து ஹ்ருதய மந்திரத்தால் நீர்நிரப்பிப் பாத்தியத்திற்குச் சந்தனம், விலாமிச்சை, அறுகு, வெண்கடுகும், ஆசமனத்திற்கு ஏலம், கிராம்பு. சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு பச்சைக்கற்பூரமும் சேர்த்துப் பாத்தியத்தை அங்க மந்திரங்களாலும், ஆசமனத்தைச் சம்ஹிதா மந்திரங்களாலும் அர்ச்சித்து அபிமந்திரித்துத் திக்பந்தனம் அவகுண்டனம் செய்து தேனுமுத்திரை காட்டுக.

திரவிய சுத்தி

பூசைத் திரவியங்களில் நிரீட்சணம், புரோட்சணம், திக்பந்தனம், அவகுண்டனம்செய்து விசேடார்க்கியஜலத்தை அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷிக்க. விசேடார்க்கியத்தைத் தனது சிரசிலும் புரோக்ஷித்துக் கொண்டு அபிஷேகஜலத்தில் புஷ்பத்துடன் சிறிதுசேர்க்க. பூசைத்திரவியங்களைப் பொதுவாக ஹ்ருதய மந்திரத்தாலும், சந்தனத்தைச் சத்யோஜாத மந்திரத்தாலும், பரிவட்டத்தை வாமதேவமந்திரத்தாலும், ஆபரணங்களை அகோர மந்திரத்தாலும், நிவேதனத்தைத் தத்புருஷ மந்திரத்தாலும், புஷ்பத்தை ஈசான மந்திரத்தாலும் அபிமந்திரிக்க.

ஆத்ம பூஜை

தான் இருக்கும் ஆசனத்தில் சிவாசனத்தால் அர்ச்சித்து நேத்திர மந்திரத்தால் நெற்றியிலும் ஹ்ருதய மந்திரத்தால் மார்பிலும் சந்தனம்வைத்துச்சிவ மூர்த்திமந்திரத்தால் மார்பிலும், சிவமூல மந்திரத்தால் சிரசிலும் அர்ச்சித்துத் தேகத்தைச்சிவரூபமாகப்பாவித்துச் சிவோகம்பாவனைசெய்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மந்திர சுத்தி

கைகளைக் கூப்பிக் கொண்டு, கண்களை மூடி மௌனி யாக இருந்து பற்கள், அண்ணம், உதடுகள் ஆகியவற்றின் தொழிற்பாட்டினுல் உண்டாகும் மாயாகாரியமானஅசுத்தம் நீங்கவும், மந்திரங்களுக்குப் பலனைக் கொடுக்கும் ஆற்றல் மிகுதியாகவும், பஞ்சப்பிரம மந்திரங்களை மூலாதாரத்தி லிருந்து, புருவ நடு அளவாகவும், அங்க மந்திரங்களை அதில் இருந்து பிரமரந்திர அளவாகவும் சிவமூல மந்திரத்தைத் துவாத சாந்தஅளவாகவும் குறில் நெடில் அளபெடை முறை யில் மானதமாகச் சிந்திக்க.

லிங்க சுத்தி

அபிஷேக வேதிகையில் முல்லைப் பூவை ஒத்த வெண் ணிறத்துடன் காம்புடன் கூடி மேல் நோக்கிய தாமரை மொட்டுப் போன்றதும், ஆமை வடிவுடன் கூடிய ஆதார சிலையின் மேல் இருப்பதுமாகிய அனந்தாசனத்தை ஓம் ஹாம் அநந்தாய நம; என்று அர்ச்சித்துச் சிம்ம வடிவத்துடன்ஒன் றுக்கொன்று பின்புறத்தைக் காட்டுகின்றவையும், கிருதம், திரேதம், துவாபரம், கலி ஆகிய யுக வடிவங்களைக்கொண்டு சிவாசனக் கால்களாயிருப்பவையும், ஆகிய தர்மம் ஞானம் வைராக்கியம் ஐச்வர்யம் ஆகியவற்றை வெண்மை, செம்மை பொன்மை, கருமை நிறம் உள்ளவைகளாகச் சிந்தித்துத் தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்குத் திக்கு களில் ஓம் ஹாம் தர்மாய நம; ஓம் ஹாம் க்ஞானுய நம; ஓம் ஹாம் வைராக்யாய நம; ஓம் ஹாம் ஐச்வர்யாய நம: என்று அர்ச்சித்துவெண்ணிறமும்எட்டு இதழ்களும்கொண்ட தாமரைப் பூவைச் சிம்மங்களின்மேல் ஓம்ஹாம் பத்மாய நம: என்று அர்ச்சித்துப் பத்ம முத்திரை காட்டுக.

பெட்டகக் கோயிலில் நான்கு கைகள் மூன்று கண் கள், வரதம், அபயம், சத்திரம், சாமரம் கொண்டவராகப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பீமருத்திரரைத் தியானித்து ஓம் ஹாம் பீமருத்ராய நம; என்று அர்ச்சித்து அபிஷேக வேதிகையில் சிவமூல மந்திரம் ஓதிச் சுவாமியை எழுந்தருளச் செய்து ஓம் தந் மஹேசாய வித்மஹே வாக் விசுத்தாய தீமஹி தந்நசிவ ப்ரசோத யாத் என்னும் சிவகாயத்ரிமந்திரத்தால் சந்திர சேகரம்திரிபுண்டர தாரணம், மூன்று கண்கள், அக்ஷமாலை, வரதம் அபயம் தாமரைப்பூக் கொண்ட நான்கு கைகள், வலதுகாலைமடக்கி இடது காலைப்பத்மாசனத்தில் நீட்டிய சுகாசனம், வெள்ளைப் பரிவட்டம், வெள்ளை மாலை அணிந்த சிவ காயத்ரியைச் சிந் தித்து அர்ச்சித்துச்சாமான்ய அர்க்கியஜலத்தால் சுவாகாந்த மூல மந்திரம் ஓதிப் புரோக்ஷிக்க. ஈசானம் முதலிய சிரசு களில் அர்க்கியம்கொடுத்துப்பெருவிரல் முதலிய விரல்களால் பஞ்சப் பிரம நியாசம் செய்துநிருமாலியப் பூவைச் சண்டேசு வரர் பொருட்டு ஈசான திக்கில் ஹ்ருதய மந்திரத்தால் வைக்க. ஓம் ஹ; அஸ்த்ராய நம; என்று லிங்கத்தையும் ஓம் ச்லீம் பம் சும் ஹூம் பட் பாசுபதாஸ்த்ராய நம; என்று ஆவுடையாரையும் கழுவி, சுவாகாந்தமூலத்தால் அர்க்கியம் கொடுக்க.

கணபதி லட்சுமி குரு பரம்பரை பூஜை

சுவாமி பீடத்தின் வடபுறத்தில் சாமான்யஅர்க்கியஜலத்தை அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்துத் தெற்குநோக்கிய வராய்க் கருமைநிறம் கைகளில்தண்டம், அக்ஷமாலை பாசம், ஈட்டி தரித்தவராய்த் துதிக்கையில் மாதுளம் பழம் உடைய வராகக் கணபதியை தியானித்து ஓம் ஹாம் கணபதயே நம; என்றும், அவருக்குக்கிழக்கில் நீலோற்பலம், தாமரை, அபயம் வரதம் கொண்ட நான்கு கைள், முக்கண்கள், சிவசத்திருபம் உடையவராய்த் தெற்கு நோக்கிய மகாலட்சுமியைத் தியா னித்து ஓம் ஹாம் மஹாலக்ஷ்ம்யை நம; என்றும் அர்ச்சிக்க. வடகிழக்கில் தெற்கு முகமாக வெண்ணிறம் கொண்டு யோக பட்டம் தரித்திருப்பவர்களாகவும், சின்முத்திரை அக்ஷமாலை உடையவர்களாகவும் சதாசிவகுரு அனந்தகுரு ஸ்ரீ கண்டகுரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஸ்கந்தகுரு விஷ்ணுகுரு பிரம்மகுரு ஆகியவர்களைத் தியானித்து ஓம் ஹாம் சதாசிவ குரவே நம ; ஓம் ஹாம் அநந்த குரவே நம ; ஓம் ஹாம் ஸ்ரீ கண்ட குரவே நம ; ஓம் ஹாம் அம்பிகா குரவே நம ; ஓம் ஹாம் ஸ்கந்த குரவே நம ; ஓம் ஹாம் விஷ்ணு குரவே நம ; ஓம் ஹாம் பிர்ம்ம குரவே நம ; என்று அர்ச்சிக்க,

சிவாசன பூஜை

ஆமை வடிவமான ஆதார சிலையில் அமர்ந்திருப்பவராயும், வெண்மையான திருமேனியுடன் வித்தினின்றும் வெளிப்படும் முளை போன்ற சொரூபமுடையவராயும், வரதம் அபயம் பாசம் அங்குசம் தரித்தவராயும் உள்ள ஆதார சத்தியை ஓம் ஹாம் ஆதார சக்தயே நம ; என்று அர்ச்சித்து அதற்கு மேல் தண்டு ரூபமான அநந்தாசனத்தை ஓம் ஹாம் அநந்தாசனாய நம; என்றும் அதில் உள்ள எட்டுச் சர்ப்பங்களையும் கிழக்கு முதல் வடகிழக்கு வரை எட்டுத் திக்குகளிலும் ஓம் ஹாம் அநந்தாய நம ; ஓம் ஹாம் வாசுகிநே நம ; ஓம் ஹாம் தட்சகாய நம ; ஓம் ஹாம் கார்க்கோடகாய நம ; ஓம் ஹாம் சங்க பாலாய நம ; ஓம் ஹாம் குளிகாய நம ; ஓம் ஹாம் பத்மாய நம ; ஓம் ஹாம் மஹாபத்மாய நம ; என்று அர்ச்சித்து, அபிஷேக வேதிகையில் அர்ச்சித்தபடி தர்மம், ஞானம், வைராக்கியம், ஐச்வர்யம் ஆகியவைகளை அர்ச்சித்துக் கிழக்குதெற்குமேற்கு வடக்குத் திக்குகளில் கீழ் முகமாயிருப்பனவும் புருட சொருபத்துடன் கூடியனவும் வெண் கருமை, வெண் செம்மை, செம் பொன்மை, செங் கருமை நிறங்களுடன் இருப்பனவும் ஆகிய அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அநைச்வர்யங்களை ஓம் ஹாம் அதர்மாய நம ; ஓம் ஹாம் அக்ஞானாய நம ; ஓம் ஹாம் அவைராக்யாய நம ; ஓம் ஹாம் அநைச்வர்யாய நம ; என்று அர்ச்சிக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பீடத்தின் நடுவில் ஓம் ஹாம் ராஜஸாய நம ; ஓம் ஹாம் தாமஸாய நம ; ஓம் ஹாம் சாத்விகாய நம ; என்றும் ஓம் ஹாம் சிம்மாஸனய நம ; என்றும் அர்ச்சிக்க.

தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு திசைகளில் ஓம் ஹாம் க்ருதயுகாய நம ; ஓம் ஹாம் த்ரேதாயுகாய நம ; ஓம் ஹாம் த்வாபர யுகாய நம ; ஓம் ஹாம் கலியுகாய நம ; என்றும், வடகிழக்குக்கும், கிழக்குக்கும் நடுவில் ஓம் ஹாம் அவ்யக்தாய நம ; என்றும் தென் கிழக்குக்கும் தெற்குக்கும் நடுவில் ஓம் ஹாம் நியதயே நம ; என்றும், தென் மேற்குக்கும் மேற்குக்கும் நடுவில் ஓம் ஹாம் காலாய நம ; என்றும், வடமேற்குக்கும் வடக்குக்கும் நடுவில் ஓம் ஹாம் கலாயை நம ; என்றும், பீட மத்தியில் ஓம் ஹாம் கேசவாய நம ; என்றும் அர்ச்சிக்க.

பீடத்தின் கீழே பரப்பப்பட்டதும், படுக்கை ரூபமாய் இருப்பதுமாகிய அதச்சதனத்தைத் தென்மேற்கு மூலையில் ஓம் ஹாம் அதச்சதனய நம ; என்றும் அப்படுக்கையின் மேல் பரப்பப்பட்ட உத்தரச் சதனத்தை வடகிழக்கு மூலையில் ஓம் ஹாம் ஊர்த்வச் சதனய நம ; என்றும், பீடமத்தியில் ஓம் ஹாம் யோகாசனய நம ; என்றும் அர்ச்சிக்க.

பீடத்தின் நடுவில் ஓம் ஹாம் கந்தாய நம ; என்று கிழங்கையும், ஓம் ஹாம் பீஜாய நம என்று கிழங்குச் சுருளையும், ஓம் ஹாம் அங்குராய நம என்று முளையையும், ஓம் ஹாம் நாளாய நம ; என்று தண்டையும், ஓம் ஹாம் கண்ட கேப்யோ நம , என்று முட்களையும், ஓம் ஹாம் தளேப்யோ நம ;

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

என்று பூவின் எட்டு இதழ்களையும், ஓம் ஹாம் கேசரேப்யோ நம ; என்று பூந்தாதுகளையும், ஓம் ஹாம் கர்ணிகாயை நம ; என்று பொகுட்டையும், ஓம் ஹாம் பீஜேப்யோ நம ; என்று விதைகளையும், ஓம் ஹாம் பத்மாய நம ; என்று பூவையும் அர்ச்சித்துப்பத்ம முத்திரைகாட்டுக.

கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டு இதழ்களின் நுனிகளில் வாமை, ஜேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதனி, சர்வபூததமனி ஆகிய எட்டுச் சத்திகளையும் சூரிய காந்தியின் வண்ணம், முக்கண்கள், சந்திர பூடணம், சாமரம், வரதம், அபயம் கொண்ட மூன்று கைகளுடன் சிவாசன பத்ம இதழில் வைத்த ஒருகை உடையவர்களாகத் தியானித்து ஓம் ஹாம் வாமாயை நம ; ஓம் ஹாம் ஜ்யேஷ்டாயை நம ; ஓம் ஹாம் ரௌத்ரியை நம ; ஓம் ஹாம் காளியை நம ; ஓம் ஹாம் கலவிகரண்யை நம ; ஓம் ஹாம் பலவிகரண்யை நம ; ஓம் ஹாம் பலப்ரமதின்யை நம ; ஓம் ஹாம் சர்வ பூத தமன்யை நம , என்று அர்ச்சித்து நமஸ்கார முத்திரை காட்டி தூவெள்ளை நிறமான மனோன்மணியைக் கர்ணிகையின் வடகிழக்குத் திக்கில் ஓம் ஹாம் மநோந்மந்யை நம ; என்றும் அர்ச்சிக்க.

இதழ்களின் நுனி வட்டங்களில் கோடி சூரியப் பிரகாசத்துடன் இருக்கும் சூரிய மண்டலத்தை ஓம் ஹ்ராம்சூர்ய மண்டலாய நம ; என்றும், ஐந்து முகம், நான்கு கைகள், பதினைந்துகண்கள், சுவர்ண காந்தி நமஸ்கார முத்திரையுடன் படைப்புக்குக் காரண கர்த்தராய் ஆன்ம தத்துவ ரூபியாய்ச் சூரிய மண்டலாதிபதியாய் விளங்கும் பிரம்மாவை ஓம் ஹாம் சூரிய மண்டலாதிபதயே ப்ர்ம்மணே நம ; என்றும், பூந்தாதுகளின் நுனி வட்டங்களில் கோடிசந்திரப் பிரகாசத்துடன் இருக்கும் சோம மண்டலத்தை ஓம் ஹாம் சோம மண்டலாய நம ; என்றும், மேகநிறம் சங்கு சக்கரம் நமஸ்காரமுத்திரை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கொண்ட நான்குகைகள் உடையவராய்க் காப்புக்குக் காரண கர்த்தராய் வித்தியா தத்துவ ரூபியாய்ச் சோம மண்டலாதிபதியாய் விளங்கும் விஷ்ணுவை ஓம்ஹாம் சோமமண்டலாதிபதயே விஷ்ணவே நம; என்றும், கர்ணிகையின் நுனிவட்டத்தில் பேரொளியுடன் இருக்கும் அக்கினி மண்டலத்தை ஓம் ஹாம் அக்னி மண்டலாய நம; என்றும், இரத்தின வர்ணம் சூலம், அக்கினி நமஸ்கார முத்திரை கொண்ட நான்கு கைகள்உடையவராய்ச் சங்காரத்திற்குக் காரணகர்த்தராய்ச் சிவ தத்துவரூபியாய் அக்கினி மண்டலாதிபதியாய் விளங்கும் ருத்திரரை ஓம்ஹாம்அக்கினி மண்டலாதிபதயேருத்ராயநம: என்றும், கர்ணிகையில் வெண்மை நிறத்துடன் சூரிய சோம அக்னி மண்டலங்கள் வியாபிக்கின்ற இச்சா சத்தி ரூபமான சத்தி மண்டலத்தை ஓம்ஹாம் சக்திமண்டலாயநம; என்றும் படிக நிறம் கத்தி, சூலம், பாணம், அக்ஷமாலை, கமண்டலம், அபயம், வரதம், தாமரை கொண்ட எட்டுக்கைகள் கொண்டவராய்ச் சத்திமண்டலாதிபதியாய் விளங்கும் மகேசுவரரை ஓம் ஹாம் சக்தி மண்டலாதிபதயே ஈச்வராய நம; என்றும் அர்ச்சித்து அந்தச் சத்தி மண்டலத்துக்கு மேல் ஞான சத்தி சொரூபமான சிவாசனத்தை ஓம் ஹாம் சிவாசனாய நம; என்று அர்ச்சிக்க.

சிவ மூர்த்தி பூஜை

சிவலிங்கத் திருமேனியில் சிவபெருமானைச் சுத்தமான படிகம் போன்ற நிர்மலராகவும், ஐந்து திருமுகங்கள், பத்துத் திருக்கரங்கள், பதினைந்து கண்கள், சடா மகுடம், சந்திரசிரோ பூடணம், வலக்கைகளில் சத்தி, கட்கம், சூலம், கட்டுவாங்கம், வரதமும், இடக்கைகளில்உடுக்கை, மாதுளம் பழம், சர்ப்பம், அக்ஷமாலை, நீலோற்பலம், கொண்டவராகவும், சாமுத்திரிகா லட்சணங்கள் அனைத்தும் அமைந்தவராகவும், பத்மாசனத்தில் இருப்பவராகவும், பிரியாத அவய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வங்களுடன் கூடிய சிவதத்துவ வடிவினராகவும் தியானித்து ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம: என்று நியாசம் செய்து அர்ச்சிக்க.

தண்ட பங்கி நியாசம்

மூர்த்தியை தண்டாகாரமாகவும், ஒளிவடிவாகவும் பிரியாமலிருக்கும் அவயவங்களுடனும் பரவிந்து வியாபகசிவதத்துவசொரூபமாகவும் தியானித்துமூர்த்தியின் சிரசில் வலக்கைச் சுட்டு விரலுடன் கூடிய பெருவிரலால் ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: என்றும், முகத்தில் பெருவிரலுடன் கூடிய சுட்டுவிரலால் ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம; என்றும் மார்பில் பெருவிரலுடன் கூடிய நடுவிரலால் ஓம் ஹூம் அகோர ஹ்ருதயாய நம; என்றும், நாபியில் பெருவிரலுடன் கூடிய மோதிர விரலால் ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம; என்றும், முழந்தாள்களில் பெருவிரலுடன் கூடிய சுண்டு விரலால் ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயேநம; என்றும் நியாசம் செய்க.

முண்ட பங்கி நியாசம்

மூர்த்தியின் உச்சிச் சிரசில் வலக்கைச் சுட்டு விரலுடன் கூடிய பெருவிரலால் ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம; என்றும், கிழக்குச் சிரசில் பெருவிரலுடன் கூடிய சுட்டுவிரலால் ஓம் ஹேம் தத்புருஷமூர்த்தாய நம; என்றும், தெற்குச் சிரசில் பெருவிரலுடன் கூடிய நடுவிரலால் ஓம் ஹூம்அகோர மூர்த்தாய நம; என்றும், வடக்குச் சிரசில் பெருவிரலுடன் கூடிய மோதிரவிரலால் ஓம் ஹிம் வாமதேவ மூர்த்தாய நம; என்றும், மேற்குச் சிரசில் பெருவிரலுடன் கூடிய சுண்டு விரலால் ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தாயநம; என்றும் நியாசம் செய்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வக்த்ர பங்கி நியாசம்

மூர்த்தியின் உச்சித் திருமுகத்தைக் குழந்தைப் பருவம், பேரழகு, மேல்நோக்கிய பார்வை, படிகவண்ணம் உள்ளதாகச் சிந்தித்து ஓம் ஹோம் ஈசான வக்த்ராய நம; என்று வலக்கைச் சுட்டு விரலுடன் கூடிய பெருவிரலாலும் கிழக்குத் திருமுகத்தை உருக்கிய தங்கத்தின் ஒளி கம்பீரம் கவர்ச்சி, காளைப்பருவம் உள்ளதாகச் சிந்தித்து ஓம்ஹேம் தத் புருஷ வக்த்ராய நம; என்று பெருவிரலுடன் கூடிய சுட்டுவிரலாலும், தெற்குத் திருமுகத்தைக் கருநிறம் நெரிந்த புருவம் அச்சுறுத்தும் இயல்பு, சிவந்தகண்கள், கோரப்பல், துடிக்கும் உதடு, சந்திர பூடணம் கூடிய ஒளிமிக்க சிவந்த சிகை காளைப் பருவம் உடையதாகச் சிந்தித்து ஓம்ஹூம் அகோரவக்த்ராய நம; என்று பெருவிரலுடன் கூடிய நடுவிரலாலும், வடக்குத் திருமுகத்தைப் பவள வண்ணம், திலகமணிந்த நெற்றி, கருமையான, சுருண்ட கூந்தல், மூன்று கண்கள், கவர்ச்சியான பெண்முகமாகச்சிந்தித்து ஓம் ஹிம்வாமதேவவக்த்ராய நம; என்று பெருவிரலுடன் கூடிய மோதிர விரலாலும், மேற்குத் திருமுகத்தைச் சந்திர ஒளி, ராஜலட்சணம், சந்திர சிரோ பூடணம், தியானம் செய்யும் கண்களை உடையதாகச் சிந்தித்து ஓம் ஹம் சத்யோஜாத வக்த்ராய நம; என்று பெருவிரலுடன் கூடிய சுண்டு விரலாலும் நியாசம் செய்க.

கலா பங்கி நியாசம்

இச்சா ஞானக்கிரியா ரூபமான மூன்று கண்கள், ஞானமாகிய சந்திர கலைச் சிரோ பூடணம், பத்துத் திருக்கரங்கள் ஈசானம் முதலிய பஞ்சப்பிரம மந்திரங்களுடன் கூடிய பேரொளியையுடைய உச்சிமுகமாகிய சிவசாதாக்கியம் ஜோதிஸ்தம்பரூபமானவடக்கு முகமாகிய அமூர்த்தி சாதாக்கியம், ஜோதிஸ்தம்ப லிங்கத்தின் ஒரு பாகத்திலிருந்து தோன்றி ஒருமுகம் மூன்று கண்களுடன் விளங்கும் மேற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முகமாகிய மூர்த்தி சாதாக்கியம், சூலம், பாசம், வச்சிரம், அபயம், கட்கம், அக்கினி, மணி, வரதம் கொண்ட எட்டுக் கைகள், நான்கு முகங்களுடன் லிங்கத்தின் நடுவில்உண்டான தெற்கு முகமாகிய கர்த்ரு சாதாக்கியம் ஐந்து முகம் பத்துக் கைகளுடன் லிங்கத்தில் உண்டான கிழக்கு முகமாகிய கன்ம சாதாக்கியம் என்னும் ஐந்து சாதாக்கியங்களின் வடிவமான முகங்களையும் பஞ்சாக்கரரூபமானதிருமேனியும் பாதத்தி லிருந்து முழங்கால்வரை மின்னல் வண்ணமும், நான்கு முகம் அபயம், பத்மம், அக்ஷமாலை, வச்சிரம் கொண்ட நான்கு கை கள்; மூன்று கண்கள் பருத்துயர்ந்த கொங்கைகளை உடைய நிவிர்த்தி கலையைச் சிந்தித்து, அதற்குமேல் நாபிவரை சந்திர காந்தி, அபயம், பத்மம், அக்ஷமாலை தாமரைப்பூக் கொண்ட நான்கு கைகள் மூன்று கண்கள் பருத்துயர்ந்த கொங்கைகளை உடைய பிரதிஷ்டாகலையைச் சிந்தித்து அதற்கு மேல் ஹ்ருத யம் வரை தீவண்ணம் மூன்று முகம், அபயம், பத்மம் அக்ஷ மாலை சத்தி கொண்ட நான்கு கைகள் மூன்று கண்கள்பருத்து உயர்ந்த கொங்கைகளை உடையவித்தியா கலையையும் அதற்குமேல் புருவநடு வரை கருவண்ணம் நான்குமுகம், அப யம்,பத்மம்,அக்ஷமாலைத்வஜம் கொண்டகைகள், மூன்றுகண் கள்பருத்துயர்ந்த கொங்கைகளைஉடைய சாந்தி கலையைச்சிந் தித்து அதற்கு மேல் பிரமரந்திரம் வரை சந்திரப்பிரபைஐந்து முகம், அபயம், பத்மம், அக்ஷமாலை பாசம் கொண்ட கைகள் மூன்று கண்கள் பருத்துயர்ந்த கொங்கைகளை உடைய சாந்தி அதீத கலையைச் சிந்தித்து இவ்வைந்து கலைகளின் வடிவின ராகச் சிவபெருமானைத்தியானித்து ஈசானத்தின்பகுதியாகிய ஈசானியின் ஐந்துகூறுகளைஉச்சிச் சிரசில் ஓம் ஹோம்சசிந்யை நம; என்றும், கிழக்குச் சிரசில் ஓம் ஹோம் அங்கதாயை நம ; என்றும், தெற்குச்சிரசில் ஓம்ஹோம் இஷ்டாயை நமஎன்றும் வடக்குச் சிரசில் ஓம் ஹோம் மரீச்யை நம; என்றும், மேற்குச் சிரசில் ஓம் ஹோம் ஜ்வாலிந்யை நம; என்றும், தத்புருஷத் தின் பகுதியாகிய பூரணியின் நான்கு கூறுகளைக் கிழக்கு முகத் தில் ஓம் ஹேம் சாந்த்யை நம; என்றும், தெற்கு முகத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பவாதி நாம அர்ச்சனை

சுவாமிக்கு பவாதி நாமங்களாலும் சுவாமியின் திருநாமத்தாலும் அர்ச்சனை செய்க.

ஜெப சமர்ப்பணம்

சிவாசன பத்மத்துக்குத் தெற்கில் உருக்கிய தங்கத்தின் ஒளியும், நான்கு கைகள், மூன்று கண்கள், சந்திர சேகரம், கைகளில்தாமரைப்பூ, நீலோற்பலம் அபயம் வரதம் கொண்டு வெண்டாமரைப்பூவில் சர்வாபரண பூஷிதையாய் வீற்றிருக்கும் ஸ்ரீபஞ்சாட்சர தேவியைத் தியானிக்க. ஜப மாலையின் நாயக மணியில் சிவாசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சித்து எடுத்து மார்புக்கு நேராகப் பரிவட்டத்தால் மூடிக் கொண்டு ஓசை உண்டாகாமல் சிவத் தியானத்துடன் ஸ்ரீபஞ்சாட்சரத்தை நூற்றெட்டு உரு ஜெபித்து இடது கையில் புஷ்பம் வைத்து அதற்கு புரோட்சணம் திக்பந்தனம் அவகுண்டனஞ் செய்து ஹ்ருதய மந்திரத்தால் வலக்கை கொண்டு மூடிஅப்புஷ்பத்தை வலக்கையில் வைத்துச்சிறிது அர்க்கிய ஜலம் சேர்த்து;குஹ்யம் அதிகுஹ்யம் முதலிய மந்திரங்கள்அனைத்தையும் காப்பாற்றுகிறதேவரீர்,அடியேன் செய்த ஜபத்தை ஏற்றருளுவீராக,, என்னும் பொருளையுடைய (குஹ்யாதி குஹ்ய) என்னும்ஸ்லோகத்தைச் சொல்லி வலது முழந்தாளை நிலத்தில் ஊன்றிக் கொண்டு உத்பவ முத்திரையால்வெளஷடந்தசிவமூலம்உச்சரித்துச்சுவாமியின் வலக்கையில் ஜலத்தையும், திருவடியில் புஷ்பத்தையும் சேர்க்க.சம்ஹிதா மந்திரங்களைப் பத்து உரு வீதம் ஜபித்துச் சுவாமிக்குப் புஷ்பம் சாத்துக.

குரு வித்யா பீட பூஜை

சுவாமிக்குத் தென் கிழக்கில் பத்திரம் வைத்து அதில் ஓம் ஹாம் சிவகுரு ஆசனயநம:ஓம்ஹாம் சிவகுருமூர்த்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தயே நம: ஓம் ஹாம் சிவ குரவேநம: என்று அர்ச்சித்து, ஓம் ஹாம்சிவ குரவே நம: என்றுஆவாஹன ஸ்தாபனசந்நிதான சந்நிரோதனம் செய்து நம: ஸ்வதாஸ்வாகாந்தகுருமூலமந்தி ரங்களால் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்து ஸ்வாஹா ந்த குருமூலத்தால் நைவேத்யம் செய்து நமாந்த குரு மூலத் தால் தூப தீப கற்பூரங் காட்டுக.

சுவாமிக்கு மேற்கில் பத்திரம் வைத்து அதில் ஓம் ஹாம் சக்த் யாதி சக்தி பர்யந்த யோக பீடாசனுய நம: என்று ஆசனம் கற்பித்து அதில் சிவாகமம்—திரு முறைகளை வைத்து ஓம் ஹாம் வித்யா பீடாய நம: என்று அர்ச்சிக்க.

பிரதட்சண நமஸ்காரம்

சிவத்தியானம் சிவநாமஉச்சரிப்பு கைஅஞ்சலியுடன் சுவாமியை மூன்றுமுறை பிரதக்ஷணம் செய்து, வடக்கே தலை வைத்து மூன்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து 'சுராதிபம் நமஸ்க்ருதய' என்னும் சிவாகமத் தோத்திரமும், பன்னிரு திருமுறைத் தோத்திரங்களும் செய்க.

இரண்டாம் காலமாதிய பூசை

இவ்வாறே இரண்டாவது, மூன்ருவது, நான்காவது கால பூசைகளைச் செய்யலாம் அல்லது நான்கு காலங்களுக் கும் தனித்தனியே சிவாசன மூர்த்தி மூலம் சம்ஹிதா மந்தி ரங்களால் அர்ச்சித்து அர்க்யம் கொடுக்க.

அக்னி காரியம்

அக்னி காரியம் செய்வதற்குச் சுவாமியிடம்அனுமதி பெற்றுக் கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

குண்ட சம்ஸ்காரம்

செங்கல் அல்லது மணலினால் ஒரு முழச்சதுரமும் மூன்றங்குலஉயரமும்உள்ளகுண்டத்தை அமைத்துக்கொள்க குண்டத்தில் நிரீட்சணம் புரோட்சணம் தாடனம் அவகுண்டனம்செய்க அஸ்திரமந்திரத்தால் தர்ப்பையைக் கொண்டு கநநம் (தோண்டுதல்) உத்தாரணம் (கிளறுதல்) பூர்த்தி (நிரப்புதல்)சமம்(பரப்புதல்)ஆகியவற்றைசெய்துகவச மந்திரத்தால் நனைத்து அஸ்திர மந்திரத்தால் குட்டனம் (கெட்டிப் படுத்துதல்)சம்மார்ஜனம்(பெருக்குதல்)சமாலேபனம்(மெழுகுதல்)ஆகியவற்றைச்செய்க குண்டத்தின் நடுமேகலையில் ஓம் ஹௌம்சாந்த்யதீத கலாயைநம;கீழ்மேகலையில் கிழக்கில்ஓம் ஹைம் சாந்திகலாயை நம; தெற்கில் ஓம் ஹ்ரூம் வித்யா கலாயைநமவடக்கில் ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலாயைநமமேற்கில் ஓம்ஹ்லாம் நிவ்ர்த்திகலாயை நம என்றுநியசிக்க.கீழ்மேகலையில் குண்டத்தைச் சுற்றிக்கவச மந்திரத்தால்மூன்று நூல்களை ரக்ஷையின் பொருட்டுச் சுற்றுக. குண்டத்தில் ஓம் ஹாம் ஹ்ருதயாய நம ; ஓம் ஹாம் கலாமயாய குண்டாய நம : என அர்ச்சிக்க. அஸ்திரமந்திரத்தால்தர்ப்பையைக் கொண்டு மேற்கிலிருந்து கிழக்காக மூன்று கோடுகளும் தெற்கிலிருந்து வடக்காக ஒரு கோடும் கீறி ஓம் ஹைம் கவசாய நம : என்று அப்யுட்சணம் செய்க. அடி முடிகளில் திரிசூல வடிவமாக்கிய மூன்று தர்ப்பைகளை அஸ்திர மந்திரத்தால் குண்டத்தில் வடக்கு நுனியாக வைப்பதாகிய வஜ்ரீகரணம் செய்து கிழக்கு வடக்கு நுனியாக இரண்டு தர்ப்பைகளை வைக்கும் சதுஷ்பத சம்ஸ்காரம் செய்க.

வாகீசுவரி வாகீசுவர ஆவாஹனம்

குண்டத்தின்நடுவில்கிழக்குநுனியாகவும்வடக்குநுனியாகவும் தர்ப்பைகளைப் பரப்புவதாகிய அக்ஷ பாடத்தைக் கவச

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மந்திரத்தால்செய்து ஓம் ஹாம் ஹ்ருதயாயநம: ஓம்ஹாம் வாகீசுவரிஆசனாய நம: ஓம் ஹாம் வாகீசுவர ஆசனாயநம: என்று ஆசனங் கற்பிக்க.

பசுமை நிறம் இளம்பருவம் மலர்ந்த முகம் கருவிழிகளுடன் லோக மாதாவாக விளங்குகிற வாகீசுவரியைக் குண்டத்தில் வைக்கப்பெற்ற ஒரு கூர்ச்சத்தில் ஓம் ஹாம் வாகீச்வர்யை நம: என்றும், செந்நிறம், முக்கண்கள் பாசம் சூலம் அபயம் வரதக் கைகளையுடையவராக வாகீசுவரரைக் குண்டத்தில் வைக்கப்பெற்ற மற்றொரு கூர்ச்சத்தில் ஓம் ஹாம் வாகீச்வராய நம: என்றும் அர்ச்சித்து அவர்கள் வடகிழக்கில் உடனிருப்பதாகச் சிந்தித்து இருவருக்கும் ஸ்வாஹாந்த மூலங்களால் அர்க்கியங் கொடுக்க.

குண்டத்தில் அக்கினி இடுதல்

சூரியகாந்தம் அல்லது மடைப்பள்ளியிலிருந்து கொண்டு வந்த அக்னியைச் சுத்த பாத்திரத்தில் வைத்து அதிலிருந்து ராக்ஷஸ பாகத்தை அஸ்திர மந்திரத்தால் நிருதி திக்கில் நீக்கி நிரீட்சணம், புரோட்சணம், தாடனம், அப்யுட்சணம் ஆகிய நாற்சுத்திகளைச் செய்க. ஓம் ஹாம் ஹம் ஹாம் வந்நி மூர்த்தயே நம: என்று சம்ஹாரமுத்திரையால் அக்னியைக் கிரஹித்துப் பூரகத்தால் இருதயத்துள் கொண்டு போய்க் கும்பகத்தால் ஜாடராக்னி பைந்தவாக்கினிகளுடன் சேர்த்து ரேசகத்தால் வெளியே கொண்டு வந்து சுழுமுனை நாடி வழியாகத் துவாத சாந்தத்துக்குக் கொண்டு போய்ப் பரமசிவனுடன் கலந்ததாகச் சிந்தித்து ரேசகத்தால் பிங்கலை நாடி வழியாக வெளியே கொண்டுவந்து உத்பவ முத்திரையால் ஓம் ஹாம் ஹ்ரூம் வந்நி சைதன்யாய நம; என்று அக்னி பாத்திரத்தில் வைத்து சம்ஹிதா மந்திரங்களால் அர்ச்சித்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நிக்பந்தனம் அவகுண்டனஞ் செய்து தேனுமுத்திரை காட்டி அவ்வக்னியைச் சிவபெருமானது வீர்யமாகப் பாவித்து அது வாகீசுவரரால் வாகீசுவரியின் கர்ப்ப நாடியில் விடப்பட்ட தாகச் சிந்தித்து அக்னி பாத்திரத்தைச் சிவமூல மந்திரத்தால் குண்டத்தின் மேல் மூன்று முறை சுற்றிக் குண்ட மேகலையில் வைத்து ஹ்ருதய மந்திரத்தால் அர்ச்சித்து அக்னியைக் குண்டத்தில் சேர்க்க, வாகீசுவரி வாகீசுவரர்களுக்குச் சௌச ஆசமனங்களின் பொருட்டு ஹ்ருதய மந்திரத்தால் ஜலவிந்துவைக் கொடுக்க, ஓம் ஹ்ராம் ஹ்ரூம் கர்ப்பாக்நயே நம: என்று கர்ப்பாக்நியை அர்ச்சித்து அஸ்திர மந்திரத்தால் ஜெபிக்கப்பட்ட தர்ப்பைக் கங்கணத்தை வாகீசுவரியின் இடக் கையில் கட்டுக. கர்ப்பாதானம் சித்திப்பதற்காக அக்னியில் சத்யோஜாத மந்திரத்தால் அர்ச்சித்து ஹ்ருதய மந்திரத்தால் மூன்றுமுறை எள்ஆகுதி கொடுக்க. மூன்ருவது மாதத்தில் பும்சவனம் சித்திப்பதற்காக வாமதேவ மந்திரத்தால் அர்ச்சித்துஓம்ஹீம்சிரசே ஸ்வாஹா என்றுமூன்றுமுறை எள் ஆகுதி கொடுக்க. ஆருவது மாதத்தில் ஸீமந்தோந்நயனம் சித்திப்பதற்காக அகோர மந்திரத்தால் அர்ச்சித்து ஓம் ஹூம் சிகாயை நம: என்று மூன்று முறை எள் ஆகுதி கொடுக்க. அக்னிக் குழந்தைக்கு முகம் முதலிய அங்கங்கள் உண்டாகவும், வாய் திறத்தல் வாய்ச் சுத்தி ஆகியவற்றிற்காகவும் சிகா மந்திரத்தால் மூன்று முறை எள் ஆகுதி கொடுக்க.

பத்தாவது மாதத்தில் அக்னிக் குழந்தை ஜனனமான பின்னர் ஜாதகன்மம் சித்திக்கத்தத்புருஷ மந்திரத்தால் அர்ச்சித்துக் கவச மந்திரத்தால் மூன்று முறையும், சிவமூல மந்திரத்தால் ஐந்து முறையும் எள் ஆகுதி கொடுக்க. கர்ப்ப மலத்தை நீக்கும் ஸ்நானத்திற்காக அக்னியை தர்ப்பை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முதலியவற்ருல் ஜ்வாலை செய்து வாகீசுவரியின் தர்ப்பைக் கங்கணத்தை அவிழ்த்துவிட்டுத் தங்கக் காப்புத் தரித்திருப்ப தாகத் தியானித்து ஹ்ருதய மந்திரத்தால் அர்ச்சிக்க. சூதகம் நீங்கும் பொருட்டுக் குண்டத்தில் புரோக்ஷணமும் குண்டத்துக்கு வெளியில் தாடன அப்யுட்சணங்களும் செய்க, குண்டத்துக்கு வெளியில் நான்கு பக்கங்களிலும் வடக்கு கிழக்கு நுனிகளாகப் போடப்படும் பரிஸ்த்ரணம் எனப்படும் தர்ப்பை முஷ்டிகளாகிய விஷ்ட்ரங்களை அஸ்திர மந்திரத்தாலும் ஹ்ருதய மந்திரத்தாலும் சேர்க்க. மேகலை களில் வடக்கு கிழக்கு நுனிகளாக நான்கு பக்கங்களிலும் வைக்கப்பெறும் சமித்து பரிதி என்று சொல்லப்பெறும். விஷ்ட்ரங்கள் முப்பது தர்ப்பைகளால் மேலே வலமாகப் போடப்பட்ட முடிச்சு — கீழே சடைபோலப் போடப்பட்ட முறுக்குடன் இருத்தல் வேண்டும். உமிழ் நீர் நீக்கத்துக்காக அடி முடிகளை நெய்யில் தோய்த்த ஐந்து சமித்துக்களை அஸ் திரத்தால் ஆகுதி செய்க. கிழக்குப் பரிதியில் ஓம் ஹாம் ப்ர்ம்மணே நம: மேற்குப் பரிதியில் ஓம் ஹாம் விஷ்ணவே நம: தெற்குப் பரிதியில் ஓம் ஹாம் ருத்ராய நம: வடக்குப் பரிதியில் ஓம் ஹாம் அநந்தாய நம: என்று அர்ச்சித்து விஷ்ட்ரங்களில் கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டுத் திக்குகளிலும் அவ்வத் திக்குப்பாலகர்களை அர்ச்சித்து அக்கினிக் குழந்தையைக் காப்பாற்றும்படி சிவாக்ஞையைத் தெரிவிக்க, ஈசான மந்திரத்தால் அக்கினியை அர்ச்சித்து அஸ்திரமந்திரத்தால் மூன்று ஆகுதிகள் கொடுத்து அக்னிக் குழந்தைக்குச் ''சிவாக்நிஸ்தவம் ஹுதாசன'' என்று நாம கரணம் செய்து செந்நிறம் ஐந்து முகம் பதினைந்து கண்கள் ஏழு நாக்கு பத்துக் கைகள் செவ்வாடையுடன் தாமரைப் பூவில் பத்மாசனத்துடன் இருக்கும் சிவாக்னி தேவரைத் தியானித்து வாகீசுவரி வாகீசுவரர்களை அர்ச்சித்துப் பராங்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முகார்க்யம் கொடுத்து ஒடுக்கிக் கொண்டு வெளஷடந்த சிவமூல மந்திரத்தால் பூரணுகுதி கொடுக்க.

சிருக் சிருவ சம்ஸ்காரம்

சிருக்கை மேல் நோக்காகவும் சிருவத்தைக் கீழ் நோக்காகவும் பிடித்து அஸ்திர மந்திரத்தால் அக்னியில் காட்டி முஷ்டி தர்ப்பையின் அடியினுல் சிருக் சிருவங்களின் அடியையும் தர்ப்பை மத்தியால் சிருக் சிருவங்களின் மத்தி யையும் தர்ப்பை நுனியால் சிருக் சிருவங்களின் நுனியையும் தொட்டு அக்கினியில் காட்டி சிருக் சிருவங்களின் அடியில் ஓம் ஹாம் ஆத்ம தத்வாய நம: மத்தியில் ஓம் ஹீம் வித்யா தத்வாய நம: நுனியில் ஓம் ஹூம் சிவ தத்வாய நம: என்று நியசித்து சிருக்கில் சிவ சக்தியையும் சிருவத்தில் சிவத்தையும் நியசித்து சிருக் சிருவங்களின் கழுத்துகளில் கவச மந்திரத்தால் மூன்று நூல்களைச் சுற்றி ஓம் ஹாம் சிவசக்த்யை நம: ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: என்று அர்ச்சித்து வலப் பக்கத்தில் வைத்துக்கொள்க.

ஆஜ்ய சம்ஸ்காரம்

பசுவின் நெய்யில் நிரீக்ஷணம் புரோக்ஷணம் தாடனம் அப்யுட்சணம் ஆகிய நான்கு சுத்திகளைச் செய்து தன் தேகத்தைப் பிரும்ம ரூபமாகப் பாவித்து நெய்யை எடுத்துக் குண்டத்துக்கு மேல் மூன்று முறை சுற்றுவதாகிய பர்யக்னிகரணம் என்னும் சம்ஸ்காரம் செய்து அக்னியில் காய்ச்சித் தென்கிழக்கில் வைத்துத் தர்ப்பை நுனியால் நெய் யை எடுத்து ஓம் ஹாம் ப்ர்ம்மணே ஸ்வாஹா என்று தாபன சம்ஸ்காரமாகிய ஓமத்தைச் செய்க. தன் தேகத்தை விஷ்ணு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ரூபமாகப் பாவித்து நெய்யை வடகிழக்கில் வைத்து தர்ப்பை நுனியால் நெய்யை எடுத்து ஓம் ஹாம் விஷ்ணவே ஸ்வாஹா என்று அதிச்ரயண சம்ஸ்காரமாகிய ஹோமத்தைச் செய்க. தன் தேகத்தை ருத்ர ரூபமாகப் பாவித்து நெய்யைக் குண்ட நாபியில் வைத்து தர்ப்பை நுனியால் நெய்யை எடுத்து ஓம் ஹூம் ருத்ராய ஸ்வாஹா என்று உத்வாஸன சம்ஸ்காரமாகிய ஹோமத்தைச் செய்க. இரண்டு தர்ப்பை களால் செய்யப்பட்ட பவித்திரத்தின் அடிப்பாகத்தை இடக் கைப் பெருவிரல் அணி விரலாலும் நுனிப் பாகத்தை வலக் கைப் பெருவிரல் அணிவிரலாலும் பிடித்துக் கொண்டு சூக்ஷ்ம ரூப விக்கினங்கள் மேலே செல்லும் பொருட்டு அஸ்திர மந்திரத்தால் மூன்று முறை நெய்யை அக்னி முகமாக்குவ தாகிய உத்ப்லவனம் செய்து பவித்ர முடிச்சை அவிழ்த்து அக்னியில் சேர்க்க, விக்கினங்கள் கீழே செல்லும் பொருட்டு ஹ்ருதய மந்திரத்தால் மூன்று முறை நெய்யைத் தன் முக மாக்குவதாகிய சம்ப்லவனம் செய்து உத்ப்ல வனத்தில் குறித்தபடி அமைந்த பவித்திர முடிச்சை அவிழ்த்து அக்னி யில் சேர்க்க.

ஒரு தர்ப்பையை இருதய மந்திரத்நால் கொளுத்தி அஸ்திர மந்திரத்தால் நெய்யில் போடுவதாகிய பவித்ரீ கரணமும், மற்றொரு தர்ப்பையைக் கொளுத்தி கவச மந்திரத்தால் நீராஞ்சனம் செய்து அஸ்திர மந்திரத்தால் நெய்யைச் சுற்றி அக்னியில் போடுவதாகிய தீபனமும் செய்க. எஞ்சிய தர்ப்பைகளை அஸ்திர மந்திரத்தால் அக்னி யில் சேர்க்க. ஒட்டை (கட்டைவிரல் நுனியிலிருந்து சுட்டு விரல் நுனிவரை) அளவுள்ள நடுவில் முடியப்பெற்ற இரண்டு தர்ப்பைகளை நெய்யில் போட்டு நெய்யின் வலப்பக்கத்தை சுக்லபட்சமாகவும், இடப்பக்கத்தைக் கிருஷ்ணபட்சமாகவும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மத்தியைப்பிங்கலை இடை சுழுமுனை நாடிகளாகவும் சிந்திக்க. வலது பக்க நெய்யைச் சிருவத்தால் எடுத்து அக்னியின் வலது கண்ணில் ஓம் ஹாம் அக்நயே ஸ்வாஹா என்றும் இடது பக்க நெய்யை இடது கண்ணில் ஓம் ஹாம் ஸோமாய ஸ்வாஹா என்றும் நடுப்பகுதி நெய்யை ஓம் ஹாம் அக்நி ஸோமாப்யாம் ஸ்வாஹா என்றும் ஹோமம் செய்க. சிருவத்தால் நெய்யை அக்னியில் ஸ்வா என்று ஹோமஞ் செய்து எஞ்சிய நெய்யை ஹா என்று நெய்ப் பாத்திரத்தில் விடுக. அக்னியின் கண்கள் திறப்பதற்காக மூன்று கண்களிலும் முகத்திலும் ஓம் ஹாம் அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா என்று ஹோமஞ் செய்க' நெய்யை அங்க மந்திரங்களால் அபிமந்திரித்து திக்பந்தனம் அவகுண்டனம் செய்து தேனு முத்திரை காட்டுக. ஹ்ருதய மந்திரத்தால் நெய்த்துளியை நெய்ப் பாத்திரத்தில் தெளிக்க. சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்கள் அக்கினியின் முகங்களாயிருப்பதாகப் பாவித்து அவற்றின் பிரகாசத்தை உண்டாக்குவதாகிய அபிகார மாகிய சம்ஸ்காரமாக சத்யோஜாதம் முதல் ஈசானம் வரை உள்ள பஞ்சப்பிரம மந்திரங்களால் ஹோமஞ் செய்க. இரண்டு முகங்களைச் சேர்த்து ஒரே ஆகுதி கொடுத்தலாகிய சந்தான சம்ஸ்காரத்தை ஓம் ஹம் ஹிம் சத்யோஜாத வாமதேவாப்யாம் ஸ்வாஹா ஓம் ஹிம் ஹூம் வாமதேவ அகோராப்யாம் ஸ்வாஹா ஓம் ஹூம் ஹேம் அகோர தத்புருஷாப்யாம் ஸ்வாஹா ஓம் ஹேம் ஹோம் தத்புருஷ ஈசானுப்யாம் ஸ்வாஹா என்ற மந்திரங்களால் நான்கு ஆகுதிகள் செய்க. ஓம் ஹம் ஹிம் ஹூம் ஹேம் ஹோம் சத்யோஜாத வாமதேவ அகோர தத்புருஷ ஈசானுப்யாம் ஸ்வாஹா என்றுதென்கிழக்குமூலையிலிருந்து வடமேற்குமூலை வரையும் தென்மேற்கு மூலையிலிருந்து வடகிழக்கு மூலை வரையும் நெய்த்தாரையை விட்டுச் சத்யோஜாத முகத்தில் மற்ற நான்கு முகங்களையும் அடக்குவதாகிய ஏகீகரணத்தைச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

செய்க. அக்கினியின் ஏழு நாக்குகளுக்கும் தீபனம் உண்டாவதற்காக மேற்கில் ஓம் யூம் ஹிரண்யாயை ஸ்வாஹா நடுவில் ஓம் லூம் கனகாயை ஸ்வாஹா வடக்கில் ஓம் வூம் ரக்தாயை ஸ்வாஹா தெற்கில் ஓம் சூம் க்ருஷ்ணாயை ஸ்வாஹா கிழக்கில் ஓம் ஷௌம் சுப்ரபாயை ஸ்வாஹா தென் கிழக்கில் ஓம் ஸௌம் அதிரக்தாயை ஸ்வாஹா வடகிழக்கில் ஓம் ஹௌம் பகுருபாயை ஸ்வாஹா என்று ஆகுதி கொடுத்து நாக்குகளைச் சேர்த்தலாகிய அநுசந்தானத்தைமேற்கிலிருந்து நடுவரை ஓம் யூம் லூம் ஹிரண்ய கனகாப்யாம் ஸ்வாஹா நடுவிலிருந்து வடக்கு வரை ஓம் லூம் வூம் கனக ரக்தாப்யாம் ஸ்வாஹா வடக்கிலிருந்து தெற்கு வரை ஓம் வூம் சூம் ரக்தா க்ருஷ்ணாப்யாம் ஸ்வாஹா தெற்கிலிருந்து கிழக்கு வரை ஓம் சூம் ஷௌம் க்ருஷ்ண சுப்ரபாப்யாம் ஸ்வாஹாகிழக்கிலிருந்து தென்கிழக்கு வரை ஓம் ஷௌம் ஸௌம் சுப்ரபா அதிரக்தாப்யாம் ஸ்வாஹா தென்கிழக்கிலிருந்து வடகிழக்கு வரை ஓம் ஸௌம் ஹௌம் அதிரக்தா பகுரூபாப்யாம் ஸ்வாஹா என்று செய்க. ஓம் யூம் லூம் வூம் சூம் ஷௌம் ஸௌம் ஹௌம் ஹிரண்யா கனகா ரக்தா க்ருஷ்ணா சுப்ரபா அதிரக்தா பகுரூபேப்ய ஸ்வாஹா என்று ஏழு நாக்குகளையும் ஏகீகரணம் செய்க.

அக்கினியில் சிவபூஜையும் ஹோமமும்

அக்கினியின் இருதய கமலத்தில் பஞ்சாசனம் அல்லது ஷடுத்தாசனம் பொரியினால் அர்ச்சித்து சிவபெருமானை ஆவாகனம் முதலியன செய்து ஆசனமூர்த்தி மூலத்தாலும் சம்ஹிதா மந்திரங்களாலும் அர்ச்சிக்க. பின்னர் பஞ்சாவரணத்திலும் பரிவார மூர்த்திகளை அர்ச்சித்து ஸ்வாகாந்த மூல மந்திரத்தால் நூற்றெட்டு நெய்ஆகுதியும் ஸ்வா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

காந்த சம்ஹிதா மந்திரங்களால் மந்திரத்திற்குப் பத்து விதம் நெய் ஆகுதியும் செய்க. நெய், பால், தேன், தயிர், பொரி. விலாமிச்சை முதலிய வேர்கள், பழங்கள், நவதான்யம், கரும்பு, புஷ்பங்கள், பத்திரங்கள், சமித்து, பச்சைக் கற்பூரம் குங்குமப்பூ புனுகு சவ்வாது கஸ்தூரி கோரோசனை சந்தனம் குங்குலியம் அன்னம் பக்ஷயம் பாயசம் ஆகியவற்றில் இயன்ற வற்றைப் பஞ்சப்பிரம்ம மந்திரங்களாலும் பதமந்திரத்தா லும் ஹோமம் செய்க.

பூரணாகுதி

நெய்யால் நிரப்பப் பெற்ற சிருக்கில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு தங்கம் வெள்ளி புஷ்பம் பொரி பட்டு வஸ்திரம் ஆகியவற்றை வைத்து அதன்மேல் சிருவத்தைக் கீழ்நோக்காக வைத்துச் சிருக்கு சிருவங்களின் பின்பாகத்தை இடது கையால் தாங்கியும் முன்பாகத்தை வலது கையால் பிடித்தும் சங்க முத்திரையுடன் எடுத்து நிமிர்ந்த தேகம் தலை கழுத்துடன் கால்களைச் சமமாக வைத்து நின்று நாபி ஸ்தா னத்தில் சிருக்கின் அடி பொருந்தச் சிருக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டு பிரம்மா முதலிய காரணேசுவரர்களைக் கடந்து சிருக்கின் அடியை இடது ஸ்தனம் வரை கொண்டு போய் வௌஷடந்த மூல மந்திரத்தாலும் சம்ஹிதா மந்திரங் களாலும் வால்நெல் அளவான தாரையாகப் பூரணாகுதி செய்க. அக்கினியில் எழுந்தருளியுள்ள சுவாமிக்கு அர்க்கியம் தூப தீப நைவேத்யம் நீராஞ்சனம் செய்க. விஷ்டரங்களை எடுத்து நுனி இடை அடிகளை நெய்யில் நனைத்து ஒரு தர்ப் பையை எடுத்து வைத்துக்கொண்டு ஏனையவற்றை நுனி முதலாக இருதய மந்திரத்தால் அக்னியில் சேர்த்துப் பின்னர் அந்த ஒரு தர்ப்பையையும் இருதய மந்திரத்தால் அக்கினியில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சேர்க்க. பரிதிகளைக் குண்டத்தில் சேர்த்து விஷ்டரங்களின் பஸ்பமாகிய ஹோமரக்ஷையைச் சிவமூல மந்திரத்தால் எடுத்து ஹ்ருதய மந்திரத்தால் நெய் சேர்த்துக் குழைத்துச் சிவமூல மந்திரத்தால் சுவாமிக்குச் சாத்தி நேத்திர கவச மந்திரங்களால் நெற்றியில் வைத்துக் கொள்க.

சிவ சம்யோஜனம்

ஓம் ஹ; அஸ்த்ராய ஹூம்பட் என்று சம்ஹிதா மந்திரங்களைக் குண்டத்தினின்று சம்ஹார முத்திரையால் எழுப்பிச் சிவத்திடம் சேர்த்துச் சிவபெருமானிடம் ''சுவாமி சிற்றறிவுள்ள அற்பனுகிய சிறியேனது சிறு பக்தியால் தேவரீர் சிரமமுற்றிருக்கிறீர், குற்றத்தைப் பொறுத்தருளு வீராக'' என்று பிரார்த்திக்க. சுவாமியைப் பவாதி நாமங் களால் அர்ச்சித்துப் பராங்முகார்க்கியம் கொடுத்துச் சிவலிங் கத்தில் ஒடுக்குக, ஓம் ஹ்ரௌம் ஹ்ரூம் சிவாக்நயே ஹ்ருதயாய நம: என்று அக்னியை ஹ்ருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

அந்தர் பலி

குண்டத்துக்கு அருகில் தென்கிழக்கில் ஒரு மண்டல மிட்டுஅதில்தெற்கில் ஓம்ஹ்ராம்மாத்ருப்ய ஸ்வாஹா, மேற்கில் ஓம் ஹாம் கணேப்ய ஸ்வாஹா வடக்கில் ஓம் ஹாம் யக்ஷேப்ய ஸ்வாஹா வடகிழக்கில் ஓம் ஹாம் க்ரஹேப்ய ஸ்வாஹா தென்கிழக்கில் ஓம் ஹாம் அசுரேப்ய ஸ்வாஹா தென் மேற் கில் ஓம் ஹாம் ராக்ஷஸேப்ய ஸ்வாஹா வட மேற்கில் ஓம் ஹாம் நாகேப்ய ஸ்வாஹா என்றும் மண்டல நடுவின் வட கிழக்கில் ஓம் ஹாம் நக்ஷத்ரேப்ய ஸ்வாஹா தென்கிழக்கில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஓம் ஹ்ராம் ராசிப்ய ஸ்வாஹா தென்மேற்கில் ஓம் ஹ்ராம் விச்வேப்ய ஸ்வாஹா மேற்குக்கும் வடமேற்குக்கும் நடுவில் ஓம் ஹ்ராம் க்ஷேத்ர பாலாய ஸ்வாஹா என்றும் சுத்த அன்னம் (ஹவிஸ்) அல்லது பொரியினால் அந்தர் பலியிடுக.

பகிர் பலி

முதல் மண்டலத்துக்கு அருகில் இரண்டாவது மண்டலமிட்டுக் கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டு திக்குகளில் முறையே இந்திரன் முதல் ஈசானர்வரையுள்ள திக்குப் பாலகர்களுக்கு அவரவர்களின் ஸ்வாகாந்த மூல மந்திரங்களாலும் வடகிழக்கில் பிரம்மனுக்கும் தென்மேற்கில் விஷ்ணுவுக்கும் நடுவில் க்ஷேத்ர பாலருக்கும் அவரவர்களின் ஸ்வாகாந்த மூல மந்திரங்களாலும். மண்டலங்களுக்கு வெளியில் ஓம் ஹ்ராம் வாயஸாதிப்யஸ் ஸமய பேதிப்ய ஸ்வாஹா என்றும் பகிர் பலியிடுக. பலி மந்திரங்களை இருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

அக்கினி காரியம் (சுருக்கம்)

கணபதி குரு வணக்கம் பிராணாயாமம், சகளீகரணம் செய்து குண்டத்தில் சமித்து அடுக்கிக் கொள்க. குண்டத்திற்கு நிரீட்சணம், புரோக்ஷணம் தாடனம் அப்யுட்சனம் ஆகிய நாற்சுத்திகள் செய்க. குண்டத்தில் ஐந்து கலா மந்திரங்களாலும் ஓம் ஹ்ராம் கலா மயாய குண்டாய நம: என்றும் அர்ச்சிக்க மூன்று நுனி தர்ப்பைகளை அடி நுனிகள் திரிசூலவடிவில் பொருந்த அமைத்து நுனி வடக்கு நோக்கி இருக்கவும் இரண்டு நுனி தர்ப்பைகளை நுனிகள் வடக்கையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கிழக்கையும் நோக்கி இருக்கவும். சிவமூல மந்திரம் ஓதிக் குண்டத்தில் வைக்க. வாகீசுவரி வாகீசுவரர்களை அவர்களின் மூல மந்திரங்களால் குண்டத்தில் எழுந்தருளச் செய்து திக்பந்தனம் அவகுண்டனம் தேனுமுத்திரையுடன் அர்ச்சிக்க ஓம் ஹாம் ஹம் ஹாம் வந்நிமூர்த்தையே நம: என்று குண்டத்தில் அக்கினியைச் சேர்த்து அதைக் கையில் புஷ்பம் கொண்டு சம்ஹார முத்திரையால் கையில் வந்ததாக பாவித்து ஓம் ஹாம் ஹம் ஹாம் வந்நிமூர்த்தயே நம: என்று எடுத்து ஜாடராக்னி—பைந்தவாக்கினியுடன் கூட்டி துவாத சாந்தத்துக்குக் கொண்டுபோய்ச் சிவத்துடன் சேர்த்துக் கூட்டி ஓம் ஹ்ராம் ஹ்ரூம் வந்நி சைதன்யாய நம: என்று குண்டத்தில் வைத்துப் பஞ்சப் பிரம மந்திரங்களால் அர்ச்சித்து ஹ்ருதய மந்திரத்தால் அர்க்கியம் கொடுக்க. அக்கினிக் குழந்தைக்கு ஜாதகன்மம் முதல் விவாஹம் வரை உள்ள சோடசக் கிரியைகள் சித்திக்கும் பொருட்டு ஹ்ருதய மந்திரத்தால் 16 ஆகுதிகளும் சிவமூல மந்திரத்தால் 5 ஆகுதிகளும் கொடுக்க. குண்டத்துக்கு வெளியில் கிழக்கில் ஓம் ஹாம் ப்ர்ம்மணே நம: தெற்கில் ஓம் ஹாம் விஷ்ணவே நம: மேற்கில் ஓம் ஹாம் ருத்ராய நம; வடக்கில் ஓம் ஹாம் அநந்தாய நம: என்றும் அக்கினி மத்தியில் ஓம் ஹாம் ஆதார சத்யாதி சர்வேப்யோ ஆசன தேவதாப்யோ நம: என்றும் அர்ச்சிக்க குண்டத்தைச் சுற்றிக் கிழக்கு முதல் எட்டுத் திக்குகளிலும் இந்திரன் முதலிய எட்டுத் திக்குப் பாலகர்களை அர்ச்சித்து வாகீசுவரி வாகீசுவரர்களுக்குப் பராங்முகார்க்கியம் கொடுத்து இருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

சுவாமியை ஆசன மூர்த்தி மூலத்தாலும் பஞ்சப் பிரம மந்திரங்களாலும் அர்ச்சித்துச் சிவலிங்கத்திலிருந்து சிவமூல மந்திரத்தால் குண்டத்தில் எழுந்தருளுவித்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஆவாகனுதிகள் செய்து ஆசன மூர்த்தி மூலத்தால் அர்ச்சிக்க. ஸ்வாகாந்த சிவமூல மந்திரத்தால் நெய் ஆகுதி 28ம் பொரி ஆகுதி 10ம் தர்ப்பை ஆகுதி 10ம் செய்க. சம்ஹிதா மந்திரங்களாலும் இஷ்ட மூர்த்திகளின் மூலமந்திரங்களாலும் நெய் ஆகுதி செய்க. ஸ்ருக்கில் நெய்யும் புஷ்பமும் வைத்து ஸ்ருவத்தால் மூடி வௌஷடந்த மூலமந்திரத்தால் பூரணுகுதி கொடுக்க தர்ப்பையை அக்னியில் கொளுத்திச் சிவமூல மந்திரத்தால் ரக்ஷையை எடுத்து ஹ்ருதய மந்திரத்தால் நெய் சேர்த்துக் கவச மந்திரத்தால் குழைத்துச் சிவமூல மந்திரத்தால் சுவாமிக்குச் சாத்தி நேத்திர மந்திரத்தாலும் கவச மந்திரத்தாலும் நெற்றியில் அணிந்து கொள்க. அக்னியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குப் பராங்முகார்க்கியம் கொடுத்து ஹ்ருதய மந்திரத்தால் சிவலிங்கத்தில் ஒடுக்குக. குண்டத்துக்கு வெளியில் பொரியினுல் ஓம் ஹாம் ருத்ராதிப்ய ஸ்வாஹா ஓம் ஹாம் இந்த்ராதிப்ய ஸ்வாஹா என்று பலியிடுக. சிவாக்னியை ஹ்ருதயத்தில் ஒடுக்கிக்கொள்க,

ஆன்ம நிவேதனமும் கன்ம சமர்ப்பணமும்

சிவபெருமானிடம் ''சுவாமி தேவரீரது பிரசாதத்தால் அடியேனுக்கு உறுதியாகச் சித்தி உண்டாகும். தேவரீரது திருவடியின் கீழிருக்கும் அடியேன் செய்த புண்ணிய பாவ ரூபமான கன்மங்களைத் தேவரீர் ஏற்றுக் கொண்டு அவை அடியேனைப் பந்திக்காதபடி நாசம் செய்தருளுவீராக. சிவனே அனைத்தையும் தருபவன். சிவனே அனைத்தையும் ஏற்பவன். சிவனே அனைத்துலகங்களும் ஆனவன். எவ்விடத்திலும் பூசை கொள்பவனும் சிவனே' என்னும் பொருளையுடைய ஓம் ஹாம் யத் கிஞ்சித் முதலிய சுலோகங்களைச் சொல்லிப் பிரார்த்தித்து ஓம் ஹாம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஹ்ருதயாய நம: என்று அர்க்ய ஜலத்தைச் சுவாமியின் முன் விடுக,

சிவ பூசைப் பூர்த்தி

சுவாமிக்கு ஆசன மூர்த்தி மூலம் பஞ்சப்பிரம மந்திரங்களால் அஷ்டபுஷ்பம் சாத்தி வணங்கி சத்யோஜாதம் முதல் ஈசானம் வரை பஞ்சப்பிரம மந்திரங்களாலும் அஸ்த்ரம் முதல் ஹ்ருதயம் வரை ஷடங்க மந்திரங்களாலும் அர்ச்சித்துப் பராங்முகார்க்கியம் கொடுத்து நாராச முத்திரையால் ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம்பட் என்று எல்லா மந்திரங்களையும் உப சம்ஹாரம் செய்து திவ்ய முத்திரையால் சிவலிங்கத்தில் சேர்த்து ஓம் ஹாம் சிவாய ஹ்ருதயாய நம; என்று சுவாமியை ஹ்ருதயத்தில் ஒடுக்கி மூர்த்தியை "மண் பொருந்தி என்ற தேவாரத் திருப்பாடலை ஓதிப் பெட்டகத்தில் எழுந்தருளுவிக்க. பெட்டகத்தின் மேல் முக்கண்கள் அபய வரதம் சத்திரம் சாமரம் கொண்ட கைகள் உள்ள பீம ருத்ரரை அர்ச்சித்துக் திருகாப்பை விண்ணப்பிக்க. மேற்குத் துவாரம், வடக்குத் துவாரம், ஆசன ஆவரண மூர்த்திகளுக்கு ஓம் ஹாம்சர்வேப்ய சிவபரிவாரதேவதாப்ய ஸ்வாஹ என்று பராங்முகார்க்கியம் கொடுத்து ஹ்ருதயத்தில் ஒடுக்கிக் கொள்க..

சண்டேசுவர பூசை

வடகிழக்கில் ஓம் ஹாம் சண்டாசனுய நம: ஓம் ஹாம் சண்டமூர்த்தயே நம: ஓம் ஹாம் த்வனிச் சண்டேச்வராய் ஹூம்பட் ஸ்வாஹா என்று சண்டேசுவரரை ஆவாஹனம் செய்து ருத்ர கோபத்தில் உண்டானவராகவும் கருநிறம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நான்குமுகங்கள் சூலம் மழு அக்ஷமாலை கமண்டலம் கொண்ட கைககள் பன்னிரண்டு கண்கள் சடாமகுடம் சந்திரசேகரம் சர்ப்பவளையல் சர்ப்பப் பூணூல் உடையவராகவும் வெண்டாமரையில் பத்மாசனத்தில் இருப்பவராகவும் தியானித்து சிவ நிர்மால்யத்தை நிவேதித்து அர்க்கியம் தூப தீபம் கொடுத்துக் கற்பூரம் காட்டுக.'' சண்டேசுவரரே அடியேன் செய்த சிவபூசைக் கிரியையில் அடியேனது அறியாமையால் ஏதேனும் குறைகள் நேர்ந்திருப்பின் அவற்றை நிறைவுடையதாக ஆக்குதல் வேண்டும்'' என்று பிரார்த்தித்து வணங்கி அஸ்த்ர மந்திரத்தால் தாளத்திரயம் செய்து பராங்முகார்க்கியம் கொடுத்து இருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

கபில பூஜை

வடகிழக்கில் ஒரு பத்திரம் வைத்து அதில் கபில நிறமுள்ள நந்தையை ஓம் ஹாம் கபிலே நந்தே நம : கருநிற முள்ள பத்ரையை ஓம் ஹாம் கபிலே பத்ரே நம ; வெண்ணிற முள்ள சுரபியை ஓம் ஹாம் கபிலே சுரபே நம : புகை நிற முள்ள சுசீலையை ஓம் ஹாம் கபிலே சுசீலே நம : செந்நிற முள்ள சுமனையை ஓம் ஹாம் கபிலே சுமனஸே நம : என்றும் அர்ச்சித்து அருகம்புல் நிவேதித்து ஓம் ஹாம் நந்தா திப்ய ஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுக்க.

சிவப் பிரசாதம்

அகோர மந்திரத்தை இருபத்தொரு முறை ஜபித்து சிவபாதோதகத்தை ஆசமனம் செய்து திருநீறு பூசிக் கொள்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

போஜன விதி

அன்னம் கறி முதலியவற்றைப் படைத்து அஸ்திர மந்திரத்தால் புரோக்ஷித்து ஓம் ஹாம் ம்ருத்யுஞ்சயாய வௌஷட் என்று ஏழுமுறை ஜபித்து ஓம் ஹாம சிவாய ஸ்வாஹா ஓம் ஹாம் குரவே ஸ்வாஹா என்று நிவேதித்து வலப்பக்கத்தில் பூமியில் சிறிது அன்னம் வைத்து ஓம் ஹாம் நாக கூர்ம கிரிகர தேவதத்த தனஞ்சயேப்ய உபப்ராண வாயுப்ய ஸ்வாஹா என்று ஜலம் விட்டு எஞ்சிய ஜலத்தை அம்ருதோ பஸ் தரணமஸி என்று உட்கொண்டு பிறகு சாப்பிடுக. உண்ட பிறகு உள்ளங்கையில் ஜலம் கொண்டு அமர் தாபி தானமஸி என்று உத்தரா போசனம் செய்து எழுந்து வாய் கைகள் கழுவி ஆசமனம் செய்து திருநீறு அணிந்து கொள்க.

நலமே தழைக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ
சிவமயம்
ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை

விளக்கங்கள்

பூசகர் இருப்பிடம்

சூரியமூர்த்தி கிழக்குத்திக்கில் உதித்து மேற்கு நோக்கி வருபவராகையால் சூரிய பூசை கிழக்கு நோக்கிச் செய்யப் பெறும்.

அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் மூன்றாவதாகிய பாசம் ஆணவம் கன்மம் மாயைஎன மூவகைப்பட்டிருக்கும் இவற்றுள் மூன்றாவதாகிய மாயை சுத்தமாயை என்றும் அசுத்த மாயை என்றும் இரு வகைப் பட்டிருக்கும் சுத்த மாயை, சிவபெருமானுக்கு நிலைக்களமாயிருந்து அவர் உயிர்களுக்குச் செய்யும் உதவிகள் நிகழ ஆதாரமாயிருக்கும். அசுத்த மாயை உயிர்கள் அனைத்துக்கும் நிலைக்களமாயிருந்து அவற்றின் இயக்கத்துக்குத் துணை செய்யும். சுத்தமாயையிலிருந்து நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்வரம், சுத்தவித்தை ஆகிய ஐந்து சிவ தத்துவங்கள் தோன்றிச் சிவபரம்பொருளின், அருவத் திருமேனிகளாகிய சிவத்துக்கும்–சத்திக்கும் நாத விந்துக்கள் நிலைக்களங்களாகவும் அருவுருவத் திருமேனியாகிய சதா சிவத்துக்குச் சாதாக்கியம் நிலைக்களமாகவும் உருவத் திரு மேனிகளாகிய மகேசுவரன் – உருத்திர மூர்த்திகளுக்கு ஈச்வரம், சுத்தவித்தைகள் நிலைக்களங்களாகவும் இருப் பனவாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அசுத்த மாயையிலிருந்து ஏழு வித்யாதத்துவங்களும் இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களும் தோன்றும். ஆன்ம தத்துவங்களுள் அடிநிலையினதாகிய பிருதிவி தத்துவ சம்பந்த மான நிலவுலகில், அசுத்த மாயை தொடக்கொண்டு வாழும் உயிர்கள், சுத்த மாயா தத்துவங்களையும் கடந்து தத்வாதீத ராக விளங்கும் சிவபெருமானைப் பூசிப்பதற்குத் தகுதி உடையாரல்லர். நமது தேகமும் நாம் வாழுமிடம் பூசிக்கு மிடம் முதலியவைகளும் பிருதிவிதத்துவச் சார்புடைய னவே. சிவபூஜை செய்வதற்குரிய தகுதியை நாம் பெறு வதற்குச் சுத்த தத்துவத்தில் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அதனுல் பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம், கந்தம், ரசம், ரூபம், பரிசம், சப்தம், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், செவி, மெய், கண், நாக்கு, மூக்கு, மனம், அகங்காரம், புத்தி, சித்தம் என்னும் ஆன்ம தத்து வங்கள் இருபத்து நான்கையும், புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை என்னும் வித்யா தத்துவங்கள் ஏழையும் கடந்து சிவதத்துவங்களில் அடிநிலையினதாகிய சுத்த வித்யா தத்துவத்தை அடைந்ததாகப் பூசகன் தன் னைப் பாவித்துக் கொள்ளுவது, பூசகனுக்கும் சிவத்துக் கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்குவதாகும். அஸ் திரம் எந்தத் தீங்கையும் அணுகவொட்டாது தடுப்பதா தலால் அஸ்திரமயமான விமானம் பூசகனது இருப்பிடப் பாதுகாப்புக்கு துணை செய்கின்றது.

ஆசனங்களில் தருப்பாசனம் புகழையும் பலகை ஆசனம் செல்வத்தையும், வஸ்திராசனம் நோய் நீக்கத்தை யும், கம்பளாசனம் உடல் நலத்தையும், புலித் தோலாசனம் போக மோக்ஷங்களையும், மான் தோலாசனம் ஞானத்தை யும், கூர்மாசனம் போக மோக்ஷங்களையும் வழங்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கணபதி திருவணக்கம் பிராணாயாமம்

முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமான் அடியார்கள் செய்யும் எந்தச் செயலும் இடையூறின்றி நிறைவேறுவதற்கு அருள்புரிகின்ற பொழுது கணபதி மூர்த்தியாகி முன்னிற்பார். சொற்கூறும் பொருட் கூறுமாக உள்ள அண்ட பேரண்டங்களின் தோற்றத்திற்கு நாதவிந்துக்கள் மூலமானவை. நாதம் தண்டவடிவமாகவும், விந்து புள்ளி வடிவமாகவும் இருக்கும். இவை இரண்டும் கூடுகிறபொழுது ''உ'' ஆகும். இதை உணர்த்துவதே கணபதி மூர்த்தியின் ஆனைமுகம். உலகத் தோற்றத்துக்குரிய முதன்மையும், இடையூறு அகற்றும் தகைமையும் கணபதி மூர்த்தியிடம் இருப்பதால் அவரை வணங்குவது எந்தச் செயலிலும் முதற்கண் நிகழவேண்டியதாகும். செயல்கள் சோர்வில்லாமல் நிகழ்வதற்குத் தேகத்திலுள்ள பிரதான உறுப்புக்கள் நம் தலைப்பகுதியில் உள்ளன என்பதும், அவற்றுள் உச்சந்தலை, புருவநடு ஆகியவை சிறப்புடையன என்பதும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கணபதி வணக்கத்தில் புருவக்கடைகளுக்கு மேலே தலையில் குட்டப்பெறும் குட்டுக்களால் அறிவு விளக்கத்துக்கு அடிப்படையான புருவநடு—மூளைப்பகுதி ஆதிய மூன்றுமுறை குட்டுவது ஆணவ கன்ம மாயா மல நீக்கத்தையும், ஐந்துமுறை குட்டுவது இவற்றுடன் மாயேய திரோதாயி மல நீக்கத்தையும் பெறுவதற்காம்.

இவை சுறுசுறுப்படைந்து செயற்பாட்டு உறுதியில் கூடும். குட்டும்பொழுது தலை உச்சியிலிருக்கும். அமுதம் பெருகிச் சுழுமுனை நாடிவழியாக மூலாதாரத்துக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் கணபதிக்கு அபிஷேகமாகும். அதனால் கணபதி வணக்கம் குட்டுதலுடன் நிகழ்த்தப் பெறுகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

திருவருள் பெறுவதற்குக் குருவருளை அன்றி வேறு சாதனம் இல்லை. இது சமயவாதிகள் அனைவராலும் ஒப்ப முடிந்தஒன்று. குருவருள் பெறாதவர்கள் வேறு எந்த முயற்சியாலும் திருவருளை அடையமுடியாது. செல்கதிக்கு வழி காட்டுவோராகிய சிவபெருமான் மும்மலச் சேர்க்கை உடைய சகல வர்க்கத்து உயிர்களாகிய நமக்கு நம் போன்ற மனித வடிவந்தாங்கிய குருமூர்த்திகளை நிலைக்களமாகக் கொண்டே அருள்புரிவாராதலின் குருவையும் சிவத்தையும் வேறு பிரித்துக் காணாது குருவையே சிவமாக எண்ணி வணங்குவது முறை. குரு என்ற சொல் கு—ரு என்று பிரிக்கப்பெற்று அஞ்ஞானம் நீக்குபவர் என்னும் பொருளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது,

பிராணாயாமம் என்பது பிராண — ஆயாமம் எனப் பிரிந்து பிராண வாயுவை அடக்குதல் என்னும் பொருளில் இருப்பது. பிராணிகளின் மூச்சுக்காற்று சில வேளைகளில் வலதுநாடி வழியாகவும் சிலவேளைகளில் இடது நாடி வழியாகவும் சிலவேளைகளில் இரண்டு நாடி வழியாகவும் வெளி வந்து கொண்டிருக்கும். இவ்வெளிப்பாடுகளில் வலதுநாடி வெளிப்பாடும் இரண்டு நாடிகளும் கூடிய சுழுமுனா நாடி வெளிப்பாடும் சிறப்புடையன. இவ்வெளிப்பாட்டு வேலை களைச் செய்யும் செயல்கள் உறுதியும் மிகுதியுமான பயன் களை நல்கும் சிறப்புடையன. இதற்கேற்ப மூச்சை ஒழுங்கு படுத்துவதற்குப் பிராணாயாமம் செய்யப்படுகின்றது.

சுழுமுனை முதலிய நாடிகள் நாபிக்குக் கீழே உள்ள கிழங்கிலிருந்து தோன்றுவன. அதிலிருந்து எழுபத்தீரா யிரம் நாடிகள் தோன்றி அதன் கீழும் மேலுமாக நிலவும். அக் கிழங்கின் வலப்பக்கத்தில் பிங்கல நாடியும் இடப்பக்கத் தில் இட நாடியும் தோன்றிப் பிராண வாயுவுடன் சேர்ந்து உச்சந்தலை வரை சென்று போக்குவரவு செய்யும். சுழுமுனா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நாடி அக் கிழங்கிற்குக் கீழே இரு கிளைகளாகவும் மேலே ஒரு கிளையாகவும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறுஆதாரச் சக்கரங்களையும் உச்சந்தலைக்கு மேல் துவாத சாந்தம் வரை உள்ள நான்கு நிராதாரச் சக்கரங்களையும் வியாபித்திருக்கும். ப்ரும்மாவை அதிபராகக் கொண்ட பிங்கலை நாடியால் அசுத்த வாயுவை வெளியே விட்டு விஷ்ணுவை அதிபராகக் கொண்ட இடநாடியால் சுத்த வாயுவை உள்ளே நிரப்பி உருத்திரரை அதிபராகக் கொண்ட சுழுமுனை நாடியால் வாயுவை மேலே எழுப்பிப் பிங்கல நாடியால் வாயுவை வெளிவிடும் பொழுது அது வலநாடி பிங்கல நாடி வழியான வெளிப்பாட்டுக்குத் துணை செய்யும்.

சூரிய பூசை

சூரிய பூசை, அந்தர்யாக பூசை, சிவலிங்க பூசை அக்கினி கார்யம், குருபூசை, சிவாகம பூசை ஆகிய ஆறு வகையான பூசைகளையும் நாள்தோறும் செய்யவேண்டு மென்று சிவாகமங்கள் விதிக்கின்றன. '' ஆதித்யன் சிவம், சிவமே ஆதித்யன் '' என்று சிவாகமும், ''அருக்கனுவான் அரன் உரு அல்லனோ'' என்று திருமுறையும் அருளுகின்றன. சிவபெருமான் சரம், அசரமாகிய எல்லாவற்றிலும் நிறைந் திருக்கும் உண்மையை அவரது அஷ்டமூர்த்த வடிவம் காட்டும், சிவபூசையில் அதன் அங்கமாக முதற்கண் செய் யப்படும் சூரியபூசையில் சிவபெருமான் பலப்ரமதனி என் னும் சக்தியை அதிட்டித்து உருத்திரமூர்த்தியாக நின்று பூசையை ஏற்று வினை அநுபவங்களை ஒழித்து இன்பம் வழங்குவார்.

சகளீகரணம்

சகளீகரணம் 'என்பது, கரநியாசம், அங்கநியாசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

என்னும் இரண்டு வகைகளில் செய்யப்பெறுவது. பூசிக்கப் பெறும் மூர்த்தியைப் பூசித்தற்குரிய தகுதி கிடைப்பதற்காகப் பூசகன் தன் கைகளையும் தேகத்தையும் அந்த மூர்த்தியின் சொரூபமாக்குதலே சகளீகரணமாம், சகளம் என்பது உருவம். கரணம் என்பது செய்தல். வலக்கையில் கங்கையும் இடக்கையில் அக்கினியும் இருப்பதால் கைகளைத் துடைக்கும் போது கைகள் சுத்தமடைகின்றன.

கைப் பெருவிரல்களில் அமுதம் இருப்பதால் கைகளைக் கூப்பும்போது தூய்மையும் இனிமையும் உண்டாகின்றன. இரண்டு கைகளையும் சேர்த்து விரிக்கும் போது உள்ளங் கைகளில் படியும் கட்டைவிரல் பொகுட்டாகவும், மற்ற எட்டு விரல்கள் எட்டு இதழ்களாகவும், அமைந்து கைகள் தாமரை மலரை நிகர்க்கும். கரநியாசத்தில் உள்ளங்கையிலும் விரல்களிலும் நியசிக்கப்படும் அங்க மந்திரங்களால் கைகள் சூரிய சொரூபத்தை அடையும். அதுபோலவே அங்கநியாசத்தில் தேகத்தில் நியசிக்கப்படும் அங்கமந்திரங்களால் தேகம் சூரிய சொரூபத்தை அடையும். கரநியாசத்தில் கைகளை ஒன்றை ஒன்றினால் சுற்றுவதாலும், அங்கநியாசத்தில் மகாமுத்திரை காட்டுவதாலும் தனித்தனியே நியசிக்கப்பட்ட மந்திரங்கள் ஒருமை நிலையையடைகின்றன.

தரிசனார்க்கியம்

வானத்திலுள்ள பிரத்யட்ச சூரியனைத் தரிசித்து அவருக்குக் கொடுப்பதாகச் சிந்தித்துச் சூரிய பூஜைக்குரிய எட்டிதழ் தாமரை வரைந்த பீடத்தில் கொடுப்பது தரிசனார்க்கியம் ஆகும்.

சிவ சூரிய அர்க்கியம்

சூரிய பூசையில் பயன்படுத்துவதற்காக ஜலத்தில் மந்திர சத்தியைக் கூட்டி அமைத்துக் கொள்ளுவது சூரிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அர்க்கியம் எனப்பெறும். ஜலத்திற் கூட்டியமந்ர சக்தியை நிலைநிறுத்துவது அபிமந்தரணம் என்னும் கிரியை. திக்பந்தனம் என்பது கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டுத்திக்குகள். மேலும் கீழுமாகிய இரண்டு திக்குகள் ஆகப் பத்துத் திக்குகளிலும் உள்ள குற்றங்களை வரவொட்டாமல் தடுப்பது. அவகுண்டனம் என்பது தடுக்கப்பெற்ற குற்றங்கள் மீண்டும் உட்புகாதபடி காவல் செய்வது. திக்பந்தனமாகிய ரக்ஷை அகழ் என்றும் அவகுண்டனம் மதில் என்றும் சொல்லப்பெறும். தேனுமுத்திரை ஜலத்தில்அமுதச் சேர்க்கையைச் செய்யும்.

துவார பூசை

துவாரம் என்பது வாயில். பூசைக்குரிய பிரதான மூர்த்தியைப் பூசிப்பதற்கு முன்னர் அவரது பரிவாரங்களாக வாயிலில் உள்ள மூர்த்திகளையும் அவருக்கு அருகிலுள்ள மூர்த்திகளையும் பூசிக்கவேண்டும். அதன்படி வாயிற்காவலர்களாகச் சூரியமூர்த்தியின் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தண்டி பிங்களரும், கணபதி முதலியவர்களும் சூரிய பூசையில் முன்னதாகப் பூசிக்கப் பெறுகிறார்கள்.

ஆசன பூஜை

சுவாமி எழுந்தருளியிருக்கும் ஆசனத்தின் அங்கங்களில் பல தெய்வங்கள் உள்ளனர். அவர்களைத் தனித் தனியாகப் பூசிப்பது ஆசன பூசை.

சிவசூரிய பூசை

பூசிக்கப் பெறும் மூர்த்தியினது திருவுருவம் பூசகனது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உள்ளத்தில் முன்னதாக நிலைநிற்க வேண்டும். "உள்ளக் கிழியின் உரு எழுதி" என்பது திருமுறை. அகத்தில் உருவ கப்படுத்திக்கொண்ட சுவாமியைப் புறத்தில் பூசிப்பதற்கு எட்டி தமிழ்த்தாமரை வரைந்த பீடத்தில், மூர்த்தியின் தேக அமைப்புப் பொருந்த மூர்த்தி மந்திரத்தாலும், சைதன்ய அமைப்புப் பொருந்த மூலமந்திரத்தாலும் அங்கங் களின் அமைப்புப் பொருந்த அங்க மந்திரத்தாலும் நியாசம் செய்தல் வேண்டும். பாத்யம் என்பது திருவடிகளை விளக் கக் கொடுப்பதாதலின் இரண்டு திருவடிகள் பற்றி இரண்டு தடவை செய்யப்பெறுவது. ஆசமனம் என்பது உள்ளே பருகக் கொடுப்பதாதலின் ஆசமன அடிப்படையில் மூன்று தடவை செய்யப்பெறுவது. அர்க்கியம் என்பது சிரசில் தெளிப்பதாதலின் ஒரு தடவை செய்யப்பெறுவது. லயாங் கம் என்பது சுவாமியின் திருமேனியில் அடங்கியிருக்கும் உறுப்புகள்.

போகாங்க பூசை

சுவாமியின் அங்கங்கள் உயிர்களுக்கு அருள்செய்வ தற்காக தொழிற்பாட்டை மேற்கொள்ளும். அங்ஙனம் தொழிற்படுவதைச் சிந்தித்துச் செய்வதே போகாங்க பூசை யாம் சுவாமியின் அங்கங்களில் நின்று தொழிற்படும் அங்க தேவதைகள் போகாங்கத்தில் பூசிக்கப்பெறுகின்றனர்.

ஆவரண பூசை

சுவாமியைச் சுற்றி இருப்பது ஆவரணமென்று சொல் லப் பெறும். சிவசூரிய மூர்த்தியின் ஆவரணத்தில் அவரை நோக்கிவர்களாய்ச் சந்திரன் முதலிய கிரகதேவதைகள் உள்ளனர். அவர்களைப் பூசிப்பது ஆவரண பூசை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தூப தீப நைவேத்தியம்

சிவசூரிய மூர்த்தியின் கிரியாசக்தி உஷாதேவி அவரது இச்சாசக்தி ப்ரத்யுஷாதேவி இவர்கள் இருவரும் அவரது வலப்பாகம் இடப்பாகங்ளில் இருப்பார்கள். இவர்களைப் பூசித்த பின்னர் தூபம் தீபம் நைவேத்தியம் ஆராத்ரிகம் ஜப சமர்ப்பணம் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும். தூபம் அறியாமையைப் போக்குவது, தீபம் மெய்ஞ்ஞானத்தை உண்டாக்குவது. நைவேத்தியம் ஆத்ம சமர்பணத்தையும், ஆராத்திரிகம் ஆன்ம ஒடுக்கத்தையும் அளிக்கும். ஜப சமர்ப்பணம் யான் எனது என்னும் செருக்கை நீக்கும்.

தேஜச் சண்ட பூசை

சிவசூரிய மூர்த்தியின் அனுக்கராக இருந்து அவரது வழிபாட்டு பயனை வழங்குபவர் தேஜச் சண்டர். அவரைப் பூசிப்பதால் சூரிய பூசை குறைவின்றி நிறைவு பெறும்.

சிவ பூஜை

வடக்கு நோக்கி இருத்தல்

கன்ம நீக்கமும் முத்திப்பேறுமாகிய பயன்கள் சித்திக்கவே சிவபூசை செய்யப்பெறுகின்றது. சிவபெருமானது திருமுகங்கள் ஐந்தனுள் தெற்கு நோக்கியுள்ள அகோரமுகம் துன்ப நீக்கம்—இன்ப ஆக்கங்களை வழங்குவதாதலால் அத் திருமுகத்தைத் தனக்கு எதிர்முகமாகக் கொண்டு பூசகன் வடக்கு நோக்கி இருத்தல் வேண்டும். சிவபெருமான் கிழக்கு நோக்கியிருக்கும் தத்புருஷ முகத்தின் மூலமாகப் பூசையை ஏற்றுக் கொள்ளுகிறார். இதுபற்றியே சுவாமிக்குத் தென்மேற்குத் திக்கில் பூசகன் இருத்தல் வேண்டும் என்று சிவாகமம் விதிக்கின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சாமான்ய அர்க்கியம்

சிவபூசையில் பூசிக்கப்பெறும் பரிவார தேவர்களுக்காக அமைத்துக் கொள்வது சாமான்யார்க்கியம். அஸ்திர மந்திரம் சுத்தியை வழங்குவது. அதனுல் அந்த மந்திரங் கொண்டு அர்க்கிய வட்டகையில் புரோக்ஷித்துச் சுத்திசெய்து கொள்ளுதல் வேண்டும். இருதய மந்திரம் நிறைவைத்தருத தாதலால் அந்த மந்திரங்கொண்டு ஜலத்தை நிரப்புதல் வேண்டும். புருவ நடுவிலுள்ள அமுதக் கலப்பால் ஜலம் தூய்மையை அடையும். பரிவார தேவர் அனைவருக்கும் பயன் படுவது சாமான்ய அர்க்கியமாதலால் எல்லாத்தேவர்களுக்கு முரிய பிரணவ மந்திரம் அர்க்கிய ஜலத்தை அர்ச்சிப்பதற் கும் அபிமந்திரிப்பதற்கும் உரியதாகிறது. ஏழுதரம் அர்ச் சிப்பது நம: ஸ்வதா, ஸ்வாஹா, வஷட் வௌஷட், பட், ஹூம் என்னும் ஏழு கோடிகளை அடிப்படையாகக் கொண்டு நிகழுவதாகும்.

துவார பூசை

சுவாமிக்கு நான்கு திசைகளையும் நோக்கும் திருமுகங் கள் உள்ளனவாதலின் அவர் எழுந்தருளியிருக்கும் இடத் திற்கு நான்கு துவாரங்கள்; (வாயில்கள்) உண்டு. ஆன் மார்த்த பூசையில் வடக்கு வாயில் அல்லாத மற்ற மூன்று வாயில்களிலும் துவாரமூர்த்திகளைப் பூசிக்கலாம். ஆனுல் "மேற்குத் துவாரத்தில் துவார தேவர்களைப் பூசிப்பதே எல்லாச் சித்திகளையும் வழங்கும்'' என்று சிவாகமம் அருளு கின்றது. துவார தேவராவார் சிவசந்நிதியின் வாயிலில் உள்ள பரிவார மூர்த்திகள். துவாரத்தில் கணபதியை நிலையின் மேற்படியில் வடபுறத்திலும், சரஸ்வதியைத் தென்புறத்திலும், மகாலெக்ஷிமியை நடுவிலும் அர்ச்சிக்கவும் விதி இருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

விக்நோச்சாடனம்

விக்நோச்சாடனம் என்பது விக்னங்களை நீக்குவது என்னும் பொருளை உடையது. மந்திரத்தை ஓதிப்பார்க்கும் பார்வையால் மேலே உள்ள விக்கினங்களும் புஷ்பங்களை மந்திரம் ஓதித் தெறிப்பதால் பக்கத்திலுள்ள விக்கினங்களும் மந்திரம் ஓதிப் பாதத்தைத் தட்டுவதால் கீழே உள்ள விக்கினங்களும் நீங்குகின்றன.

பூசா கிருகப் பிரவேசம்

பூசா கிருகப் பிரவேசம் என்பது பூசை மண்டபத்தை அடைதல் என்னும் பொருளையுடையது. பூசை அறை தனியாக இருக்குமாயின் இதற்கு முன்னே சொன்ன எல்லாக் கிரியைகளையும் அறைக்கு வெளியே செய்து பின்னர் அறையினுள் பிரவேசிக்க வேண்டும். இல்லையெனில் முற்கூறிய கிரியைகளை அறைக்கு வெளியேசெய்து பின்னர் அறையினுள் பிரவேசிப்பதாக பாவித்துக் கொள்ள வேண்டும். பூசை அறையின் கீழ்ப்படியில் அஸ்த்ர த்வாரபாலரும் அவருக்குத் தெற்கில் வாஸ்து அதிபதியாகிய ப்ரம்மாவும் இருந்து காவல் புரிவதால் அவ்விடங்களில் அவர்களைப் பூசித்தல் முறை.

அபிஷேக ஜலம் சேகரித்தல்

நீரீட்சணம் முதலியவற்றால் அபிஷேக ஜலம் மந்திர பூர்வமான சுத்தியை அடைகின்றது.

பூத சுத்தி

சிவாகம விதிப்படி செய்யப்படும் பூசையில் பூதசுத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஸ்தானசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இலிங்கசுத்தி என்னும் ஐவகைச் சுத்திகளும் செய்யப்படும். சிவாகமவிதியைக் கடைபிடிக்காமல் வேறு விதிகளைக்கொண்டு மற்றையோர் செய்யும் எல்லாப் பூசைகளிலும் மந்திரபூர்வமான இச்சுத்திகள் செய்யப் பெறுவதில்லை. அதனால் அப்படிச் செய்யும் பூசைகள் பூசைப் பயனைத் தரமாட்டா. ஐவகைச் சுத்திகளுள் முதலாவதாகிய பூதசுத்தி ஆன்மசுத்தி சூக்கும தேகசுத்தி, ஸ்தூல தேகசுத்தி, பூத தோஷ தகனமும் அமுதாபிஷேகமும் ஜீவஸ்தாபனம் என்னும் ஐந்து வகைகளில் நிகழும். பூசிக்கப்படுகிற சிவபெருமான் மாயையின் விரிவுகளாகிய முப்பத்தாறு தத்துவங்களை கடந்து பேரொளிப் பிழம்பாக விளங்குபவர். பூசிக்கும் பூசகனோ அசுத்த மாயா சரீரத்துடன் தத்துவங்களில் கட்டுப்பட்டு அழுக்குடன் இருப்பவன். அசுத்தனாகிய பூசகன் தன்னைப் பரிசுத்தனாக்கிக்கொள்வதற்காக பூதசுத்தி முதலியவற்றைச் செய்து கொள்ளுதல் வேண்டும். இதனால் ஆன்மா ஸ்தூல சூக்கும தேக உபாதைகளிலிருந்து விடுபட்டு நின்மலமான ஞானக் கிரியா சத்திகளுடன் கூடிச் சுத்தனாவான்.

பிருதிவி முதலிய தத்துவங்கள் அறிவற்றவை ஆதலால் அவை தாமாகத் தொழிற்படமாட்டா என்பதை உணர்ந்து அவைகளினின்றும் நீங்கும் பாவனையே பூதசுத்தி என்பது. "பூத ரூபமான தேகாபிமானத்தை விடுதல் பூதசுத்தி என்று நூல்கள் கூறுகின்றன. ஆன்ம சுத்தியில் பூதரூபமான தேக குணங்களை எரித்தற்பொருட்டுத் தேகத்திலிருந்து ஆன்மாவை எடுத்துத் துவாதசாந்தத்திலுள்ள சிவபெருமானிடம் ஒப்படைக்கப் பெறுகிறது. தத்துவங்கள் முப்பத்தாறும் மேலேயுள்ள குண்டலினி சத்தியிலிருந்து தோன்றியவை ஆதலால் அவை தோன்றிய முறையிலேயே ஒன்றிலொன்றை ஒடுக்குவது சூக்கும தேக சுத்தியாகும். ஸ்தூல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தேகம் பஞ்சபூதச் சேர்க்கையால் ஆகியதாதலின் அப்பூத மண்டலங்களை அவற்றிற்குப் பகையான மண்டலங்களால் அடக்கி அவை ஒடுங்கியனவாகப் பாவிப்பதால் ஸ்தூல தேகம் சுத்தியடைகின்றது. பூதமண்டலங்கள் சுத்தியாக அதனுல் மெலிந்த தேகம் சிவசத்தி அதிட்டான அக்கினியால் தோஷங்களினின்றும் நீங்கி, மலபந்தங்கள் அகன்று, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை ஆகிய ஐந்து கலைகளுடன் மட்டும் இருக்கும். இங்ஙனம் கலாரூபம் ஆகிய ஸ்தூல தேகத்தில் சிவசக்தியின் அமுத தாரை அபிஷேகம் நிகழும் போது அத்தூல தேகம் அழுக்கற்ற தூய்மை நிலையையடைகின்றது. அவ்வாறு தூய்மையடைந்த தேகத்தில் முன்னர்த் துவாதசாந்தத்தில் ஒடுங்கிய ஆன்மாவை மீட்டுவந்து ஸ்தாபித்து அமுத தாரை அபிஷேகம் செய்வதால் முழுமையான பரிசுத்தத்தை உயிரும் உடலும் பெற்றுப் பூசகனை சிவபூசை செய்யத் தகுதி உடையவனுக ஆக்குகின்றன. சுத்தி செய்யப்பெற்ற மந்திர மயமான சரீரத்தால் பூசகனுக்குச் சுயரூபம் அமையும். பூசகன் தன்னைச் சிவமாக்கிக் கொள்ளாது சிவத்தை அர்ச்சித்தல் கூடாதாகையால் பூதசுத்தி மேற்கூறிய ஐவகை அங்கங்களுடன் செய்யப்பெறுகின்றது.

ஸ்தான சுத்தி

மாயா காரியங்களாகிய அசுத்த தத்துவங்களைச் சத்தி காரியங்களாகிய சுத்த தத்துவங்களாகச் செய்து கொள்வது ஸ்தான சுத்தி. இச்சுத்தியால் பூசைக்குரிய இடம் முதலியன சிவமயமாக ஆகும்.

அந்தர்யாக பூசை

அந்தர்யாக பூசை என்பது சிவத்தை உள்ளத்தில் நிறுத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

திப் பூசிப்பது என்னும் பொருளையுடையது. புறப்பூசை செய்வதற்கு முன்பு அகப்பூசை ஆகிய அந்தர்யாக பூசையை அவசியம் செய்து கொள்ளுதல் வேண்டும். அகப்பூசையின்றிச் செய்யப்பெறும் புறப்பூசைக்குப் பூசைப்பயன் கிடையாது. பூசகனது இதய கமலத்தில் எழுந்தருளியிருக்கும் பேரொளிப் பிழம்பாகிய சிவமே புறத்தில் சிவலிங்கம் முதலிய திருமேனிகளில் எழுந்தருளிவித்துப் பூசிக்கப்பெறுகிறாதலின் அந்தர்யாக பூசையின்றிச் செய்யப்பெறும் புறப்பூசை வீணானதென்று ஞானநூல்கள் கூறுகின்றன.

அகப்பூசையில் பூசகன் தனது அறிவைக் கொல்லாமை' புலனடக்கம், பொறை, இறக்கம், மெய்யுணர்வு, வாய்மை, தவம், அன்பு என்னும் எண்வகைப் பூக்களாக்கி அர்ச்சித்தல் வேண்டும். அந்தர்யாக பூசையே முத்திக்குச் சாதனம் என்று அருள் நூல்கள் கூறுகின்றன. அதுவே ஆன்ம சுத்தியை நல்குவது. சிவத்தை இதய கமலத்தில் வைத்துப் பூசித்து ஞானத்தால் சிந்திக்கச் சிந்திக்கக் கண்ணாடிக்குப் பொடியிட்டு விளக்க விளக்க அதன் மாசு நீங்கி ஒளி யேலிடுமாறு போல சிவம் உள்ளத்தில் மேலிட்டு விளங்கித் தோன்றும். தோன்றவே மலம் பற்றறக் கழியும். இது ஆன்ம சுத்திக்கு ஏதுவாகி முத்தியை வழங்கும்.

இருதய கமலம் பிருதிவி முதல் நாதம் வரையுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் கிழங்கு முதல் பீஜம் வரையுள்ள அங்கங்களாகக் கொண்டிருப்பது. அண்டத்திலுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்திருக்கும் சிவம் பிண்டத்திலுள்ள அந்த முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அவற்றை ஆசன அங்கங்களாகக் கொண்டு அவற்றின் உச்சியில் எழுந்தருளியிருப்பார். அண்டபிண்டங்கள் சமம் என்பது இதனால் அறியப்படும். அகப்பூசையில் முதல் உபசாரமாகிய ஆசனம் இருதயகமலம், இரண்டு மூன்று நான்காவது உபசாரங்களாகிய பாத்திய ஆசமன ஆர்க்கியம் உடல் பொருள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஆவியை சிவத்திடம் ஒப்புவித்தல். ஐந்தாவதாகிய திருமஞ்சனம் நேயத்தைச் சிவத்திடம் வைப்பது. ஆறாவதாகிய வஸ்திரம் ஆன்மபோதத்தைச் சிவபோதத்தால் மூடுவது. ஏழாவதாகிய முப்புரிநூல் மல மாயா கன்மச் சேட்டைகள் நீங்கிச் சிவதத்துவ விளக்கம் உண்டாதல். எட்டாவதாகிய சந்தனம் போகப்பற்று நீங்கி நிற்றல். ஒன்பதாவதாகிய புஷ்பம் கொல்லாமை முதலிய எண்வகை ஒழுக்கங்களை நிலை நிறுத்துதல், பத்தாவதாகிய அக்ஷதை அகமும் புறமுமாகிய இருவகைச் சுத்தியினாலும் மங்கலம் செய்தல். பதினொன்றாவதாகிய தூபம் போக்கு வரவுடன் தொழிற்படுகின்ற மனத்தில் பிராணனாகிய நெருப்பையிட்டுக் கர்வமாகிய புகையைக் கூட்டுதல். பனிரெண்டாவதாகிய தீபம் ஞான விளக்கை ஏற்றுதல். பதின்மூன்றாவதாகிய நீராஞ்சனம் வினைப்பயனை எஞ்சுதலின்றி எரித்தல். பதினான்காவதாகிய திருவமுது பாச பசு ஞானங்களைச் சிவத்தின் பாற்படுத்தல். பதினைந்தாவதாகிய தாம்பூலம் ஆன்ம சுபாவம் ஒழிந்து சிவ சுபாவம் ஆதல். பதினாறாவதாகிய அர்ச்சனை திருவருளைச் சிந்தித்து இன்புற்று அருட்சத்தி பதியப்பெறுதல். அந்தர்யாக பூசையில் சோடசவுபசாரங்களை இங்ஙனம் மனத்தால் சிந்திப்பது முறை.

அகத்து அக்கினி கார்யம்

அந்தர்யாக பூசையில் சிவபெருமான் இருதயதானத்தில் வைத்துப் பூசிக்கப் பெற்றது போல அகத்து அக்னிகார்யத்தில் அவர் மானசீகமாக நாபிகுண்ட அக்கினியில் எழுந்தருளுவித்துப் பூசிக்கப்பெறுகிறார்.

சிவ ஹஸ்த பாவனை

பூசகனது கைகளைச் சிவபெருமானது கைகளாக மந்திரங்களுடன் பாவித்துகொள்ளுவது சிவஹஸ்த பாவனையாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

விசேடார்க்கியம்

சாமான்யார்க்கியம் விசேடார்க்கியம் நிரோதார்க்கியம் பராங்முகார்க்யம் என அர்க்கியங்கள் நான்குவகைப் படும். பரிவார தேவர்களுக்கு உபயோகமாவது சாமான்யார்க்கியம். சிவபெருமானுக்கு மட்டும் உரியது விசேடார்க்கியம். சுத்திகளுக்கு உபயோகமாவது நிரோதார்க்கியம் உத்யாபனத்தில் பராங்முகார்க்கியம் பயன்படும். விசேடார்க்கியம் சிவபெருமானது சிரசில் தெளிப்பதற்குரியது. இதில் அர்ச்சிக்கப்பெறும் சிவாசன மந்திரம் சிவபெருமானது ஆசனத்தையும், சிவமூர்த்தி மந்திரம் அவரது ஞானதேகத்தையும், சிவமூல மந்திரம் அவரையும், பஞ்சப் பிரம மந்திரங்கள் அவரது ஐந்து திருமுகங்களையும் ஷடங்க மந்திரங்கள் அவரது அவயவங்களையும் விளங்கச் செய்னவாம்.

திரவிய சுத்தி

விசேடார்க்கிய ஜலத்தைத் திரவியங்களில் புரோக்ஷிப்பதால் அவை சுத்தியடையும். மேலும் பூசைத் திரவியங்கள் அனைத்தும் மாயையிலிருந்து உண்டானவை ஆதலால் அவற்றின் மாயாரூபம் நீங்கிச் சித்சத்தி உருவம் உண்டாகி அவை சிவபூசைக்கு உரியனவாகும் தகுதியையும் அடைகிறது.

ஆத்ம பூஜை

முன்னர்ச் செய்த ஆன்மசுத்தி கிரியையால் ஆன்மா சுத்தியடைந்த தாயினும் பூசைக்குக் கர்த்தாவாகப் பூசகன் இருப்பதால் ஏனைய திரவியங்கள் போல அவனது ஆன்மாவும் பூசைக்குச் சாதனமாயிருத்தல் பற்றி அவ்வான்மாவின் பசுபோதத்தை நீக்கிச் சிவபெருமானைப் போல நிர்மலமான ஞானக்கிரியா சத்தியை உடையதாக அது பாவிக்கப் பெற்றுப் பூசித்துக் கொள்ளப் பெறுகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மந்திர சுத்தி

மந்திரங்கள் அனைத்தும் பயன்களை வழங்கும் ஆற்றலுடையவை. ஒலி வடிவாகிய மந்திரங்கள் பூசகனால் ஓதப்பெறுகிறபொழுது மாயை சம்பந்தப்பட்ட இருள் ஒலியாகவே இருக்கும். அப்போது அவற்றால் வரும் பயன்கள் உடனடியாகச் சித்திக்க மாட்டா. இருள் நாத ஒலியை அருள்நாத ஒலியாக மாற்றிக்கொள்ளுவதே மந்திர சுத்தியாகும். ஓதியவுடன் பயன் கிடைப்பதற்கு மந்திர சுத்திக்கிரியை இன்றியமையாததாகும் திருவைந்தெழுத்தை எழுத்துக்களாகவும் சொற்றொடராகவும் கொள்ளாமல் சிவம் திருவருள் ஆன்மா திரோதான சத்தி மலம் ஆகிய ஐந்தாகக் காணுவதும் இதன் உண்மையாகும்.

இலிங்க சுத்தி

சிவபெருமானது திருமேனியாக இருப்பது சிவலிங்கம் சிவசக்தியினது திருமேனியாக இருப்பது ஆவுடையார். இவ்விரண்டும் கூடிய மாயா சம்பந்தமான திருவுருவத்தை அருளுருவமாகப் பாவிப்பதே லிங்கசுத்தியாகும். சிவபெருமான் சேதன அசேதனப் பிரபஞ்சங்கள் அனைத்திலும் பாலில் நெய்போல மறைந்து நிறைந்திருக்கும் உண்மையை உணர்ந்து அந்த நிறைவு இலிங்கத் திருமேனியிலும் இருப்பதை முதலில் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். இலிங்க சுத்தி செய்யபெற்ற திருவுருவம் மந்திரங்களை நியாசம் செய்வதற்குரிய தூய்மையை அடைகிறது. மேற்கூறிய பூதசுத்தி ஸ்தானசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இலிங்கசுத்தி ஆகிய ஐந்து சுத்திகளும் பூசகனுக்கு ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய பஞ்ச பாசங்களையும் நீக்குவனவாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கணபதி லக்ஷ்மி குரு பரம்பரைப்பூஜை

கணபதி பூஜை சிவபூஜையைத் தடையின்றி நிறைவேற்றி வைக்கும். லக்ஷ்மி பூஜை பூஜைப் பொருள்களை நாளுக்கு நாள் மிகுதியாக்கித் தரும். குருபரம்பரை பூஜை மெய்ஞானத்தை உண்டாக்கும்.

சிவாசன பூஜை

சிவாசனம் தாமரைப்பூவின் வடிவினதாய்க் கிழங்கு, தண்டு, முடிச்சு, இதழ்கள், கேசரம், கர்ணிகை என்பவற்றால் வகுக்கப்பெற்றதாய் ஆதாரசத்தி முதல் குடிலா சத்தி வரை இருநூற்றிருபத்து நான்கு புவனங்களை உறுப்புக்களாகக் கொண்டு அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்னும் ஐந்து பிரிவுகளை உடையதாயிருக்கும். ஆமை வடிவமான கூர்மாசனம் எல்லா புவனங்களுக்கும் அடியிலிருந்து அவற்றிற்கு ஆதாரமாய்ப் பிரம்மாண்டத்தை வியாபித்து அண்டத்தைத் தொழிற்படுத்தும். இதனை லிங்கபீடத்தின் அடியில் பூசிக்கவேண்டும். சிவாசன பத்மத்தின் கிழங்குருபமான ஆதாரசத்தி நூறுகோடி யோசனை அளவுள்ள பிரும்மாண்ட ரூபப் பிருதிவி தத்துவத்தைத் தனக்கு அளவாகக் கொண்டிருப்பது. நிவிர்த்தி கலையால் வியாபிக்கப்பட்ட பிருதிவி தத்துவம் பிரும்மாண்டத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களைக் கொண்டது. பிரும்மாண்டத்திலுள்ள புவனங்களுக்கு காலாக்னி ருத்ரர் முதல் பத்ரகாளி வரை நூற்றெட்டு அதிபர்கள் உள்ளனர்.

ருத்திரர்கள் என அழைக்கப்பெறும் இவர்கள் பலவிதமான வடிவங்களும் பலவகையான ஆயுதங்களும்மிகுந்தவலிமையும் ஏராளமான பரிவாரங்களும் கொண்டவர்கள். பத்துத் திக்கிலுமுள்ள இவர்கள் திக்குப் பாலகர்களின் ஆற்றலை அடக்கி அவர்களால் பூசிக்கப்பெறுபவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அநந்தாசனம்

அநந்தாசனம் ஆதாரசத்திக்குமேல் பிரதிட்டை வித்தை என்னும் இரண்டு கலைகளில் அடங்கியுள்ள அப்பு தத்துவம் முதல் காலதத்துவம் வரையுள்ள இருபத்தொன்பது தத்துவங்களையும் தனக்கு அளவாகக் கொண்டிருப்பது; இதுவே சிவாசன பத்மத்தண்டு. இது காலதத்துவத்துக்கு மேற்பட்டதாகிய மாயா தத்துவத்தை முடிச்சாகக் கொண்டு பதினொராயிரம் கோடி யோசனை உயரமுடையதாயிருக்கும். அதன் மேல் ஆயிரம் படங்களின் கூட்ட ரூபமான தாமரை மொட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டு நான்கு கைகள் நமஸ்கார முத்திரையுடன் அநந்த தேவர் எழுந்தருளியிருப்பார். இவர் இருக்குமிடம் அநந்தாசனம் எனப்படும். இவரைச் சுற்றிக் கிழக்கு முதல் வடகிழக்குவரை உள்ள திக்குகளில் அநந்தன், வாசுகி, தக்ஷகன், கார்க்கோடகன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகாபத்மன் என்னும் எட்டுச் சர்ப்பங்கள் ஒற்றைப்படத்துடன் சர்ப்பராசனைப் பார்த்து கொண்டிருக்கும். அப்பு தத்துவம் முதல் பிரகிருதி தத்துவம் வரையுள்ள இருபத்துமூன்று தத்துவங்களும் பிரதிட்டா கலையாலும், புருடன் முதல் மாயை வரையுள்ள ஏழு தத்துவங்களும் வித்யா கலையாலும் வியாபிக்கப்படுபவை. இவற்றுள் பிரதிட்டாகலை ஐம்பத்தாறு புவனங்களிலும் வித்யா கலை இருபத்தைந்து புவனங்களிலும் வியாபிக்கும். பிரதிட்டா கலையால் வியாபிக்கப்படுகிற ஐம்பத்தாறு புவனங்களில் அமரேசபுவனம் முதல் ஸ்தலேசுவர புவனம் வரை உள்ள நாற்பது புவனங்கள் அநந்தாசனத்தில் இருப்பவை.

சிவாசன பத்மக் கிழங்கை நெகிழ்விப்பதாகிய அப்பு தத்துவத்தில் அமரேசபுவனம் முதல் லகுளீசுவர புவனம் வரையுள்ள எட்டுப் புவனங்களில் இருக்கும் இத்தத்துவத்திலுள்ள ஆன்மாக்களது அநுபவங்களை அந்தந்தப் புவனாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பர்கள் நியமனம் செய்வார்கள். இவர்களுள் லகுளீசுவரர் வலக்கரங்களில் மழு, சூலமும் இடக்கரங்களில் கமண்டலம் சின்முத்திரையும் தரித்து ஆன்மாக்களுக்கு மலபந்த நீக்கம் செய்து நற்கதிநல்குங்குருமூர்த்தியாக எழுந்தருளிஇருப்பார்

நீரை இழுத்து ஒன்றுபடுத்துவதாகிய தேயுதத்துவத்தில் அரிச்சந்திர புவனம் முதல் பைரவ புவனம் வரையுள்ள எட்டுப் புவனங்கள் இருக்கும். ஆன்மாக்களது அநுபவங் களை அந்தந்தப் புவனாதிபர்கள் நியமனம் செய்வார்கள்.

இயக்கிக் கூட்டுவதாகிய வாயுதத்துவத்தில் கயா புவனம் முதல் பீமபுவனம் வரையுள்ள எட்டுப் புவனங்களில் இருக்கும் ஆன்மாக்களது அநுபவங்களை அந்தந்தப் புவனா திபர்கள் நியமனம் செய்வார்கள்.

இடங்கொடுப்பதாகிய ஆகாய தத்துவத்தில் வஸ்திர பாத புவனம் முதல் ஸ்தாணு புவனம் வரை உள்ள எட்டுப் புவனங்களில் இருக்கும் ஆன்மாக்களது அநுபவங்களை அந் தந்தப் புவனாதிபர்கள் நியமனம் செய்வார்கள்,

பத்மத்தின் முளைகளாகத் தாமத குணத்தைப் பொருந் திப் பூதாதி அகங்காரத்திலிருந்து தோன்றிய கந்தம், ரசம், ரூபம், பரிசம், சப்தம் ஆகிய ஐந்து தன்மாத்திரைத் தத்து வங்களில் சகலண்ட புவனம் முதல் மண்டலேசுவர புவனம் வரை நான்கு புவனங்கள் உள்ளன.

பத்மத் தண்டின் துளைகளாக இராசத குணத்தைப் பொருந்தி வைகாரிக அகங்காரத்திலிருந்து தோன்றிய வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் ஆகிய ஐந்து கன்மேந் திரிய தத்துவங்களிலும் சாத்துவீக குணத்தைப் பொருந்தித் தைசத அகங்காரத்தில் தோன்றிய சுரோத்திரம், துவக்கு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சட்சு, ஜிஹ்வை, ஆக்ராணம் ஆகிய ஐந்து ஞானேந்திரிய தத்துவங்களிலும் காலாஞ்சர புவனம் சங்குகர்ண புவனம் ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன.

மனம், அகங்காரமாகிய இரண்டு தத்துவங்களும் அகத்தில் நின்று தொழிற்படுத்துவன. இதில் ஸ்தூலேசுவரர், ஸ்தலேசுவரர் ஆகிய இருவரது புவனங்களும் அடங்கி உள்ளன. மனத் தத்துவம் சங்கற்பிப்பது.

அகங்கார தத்துவம் அறிவு அடிப்படையில் தைசத அகங்காரம் என்றும் தொழில் அடிப்படையில் வைகாரிக அகங்காரமென்றும் உருவ அடிப்படையில் பூதாதி அகங்காரமென்றும் மூவகைபட்டு நிற்கும்.

சிம்மாசனம்

பிரதிட்டாகலை வியாபக ஐம்பத்தாறு புவனங்களில் அநந்தாசன வியாபக புவனங்கள் நாற்பதுக்குமேல் புத்தி தத்துவத்தில் பைசாச புவனம் முதல் ப்ராம்மண புவனம் வரையுள்ள எட்டுப் புவனங்களும் சிம்மாசனத்திலிருக்கும்.

அநந்த தேவரது ஆற்றல்களாய்க் கிருதம், திரேதா, துவாபரம், கலி ஆகிய யுகங்களின் வடிவமான கால்களை யுடையனவாய்த் தென்கிழக்கு தென்மேற்கு வடமேற்கு வடகிழக்கு ஆகிய திசைகளில் தருமம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் என்னும் பெயர்களையுடைய சிங்கங்கள் உள்ளன. கிழக்கு முதலிய நான்கு திசைகளிலும் அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்னும் பெயர் களையுடைய புருஷாமிருகங்கள் உள்ளன. சிம்மாசன

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

புவனங்கள் எட்டனுள் ஐந்திரம் சௌமியம் பிரகேசம் ப்ராம்மணம் ஆகிய புவனவாசிகளுக்கு தரும ஞான வைராக்கிய ஐசுவரிய குணங்களும் கந்தருவம் யக்ஷம் ராக்ஷஸம் பைசாச புவனவாசிகளுக்கு அதர்ம, அஞ்ஞான அவைராக்கிய அநைசுவரிய குணங்களும் இருக்கும்.

யோகர்சனம்

பிரதிட்டா கலை வியாபக ஐம்பத்தாறு புவனங்களில் அநந்தாசன சிம்மாசன வியாபக புவனங்களுக்கு மேல் முக்குண வடிவாகிய பிரகிருதி தத்துவத்தில் அகிர்த புவனம் முதல் ஸ்ரீ கண்ட புவனம் வரையுள்ள எட்டு புவனங்களும் புருட தத்துவத்தில் வாம புவனம் முதல் ஏகவீர புவனம் வரையுள்ள ஆறு புவனங்களும் யோகாசனத்திலிருக்கும்.

பிரகிருதி தத்துவமாகிய குண தத்துவத்தில் சாத்துவீக இராசத தாமத குணங்கள் வெளிப்படுதலும் பிரிதலும் இன்றி ஒத்து நிற்கும். சாத்துவிக குணத்தினால் குலமர பொழுக்கம், பெரியோர்ப் பேணல், கற்றறிவுடைமை, இனியவை கூறல், தற்புகழ்வின்மை, பெற்றதில் மகிழ்ச்சி, நடுவுநிலை, உண்மை, ஒழுக்கம், உதவி, உயர்பத விருப்பு, பிரியம், புகழ்ச்சி விருப்பின்மை, அடக்கம், இரக்கம் ஆகிய பதினைந்து குணங்களும் உண்டாகும். இராசத குணத்தினால் வலிமை கோபம், ஊக்கம், மானம், உறுதி, அஞ்சாமை, வன்கண்மை, மூர்க்கம், டாம்பீகம் ஆகிய ஒன்பது குணங்களும் உண்டாகும், தாமத குணத்தினால் அழுகை, கல்வியின்மை, இகழ்ந்தாரைச் சார்தல். கோளுரை, செருக்கு, உறக்கம், நல்லதில் வெறுப்பு, தற்புகழ்ச்சி, திருட்டு ஆகிய ஒன்பது குணங்களும் உண்டாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அராக தத்துவத்தில் பிரசண்ட புவனம் முதல் ஏகசிவ புவனம் வரை ஐந்து புவனங்களும் வித்யா தத்துவத்தில் குரோத புவனம் சண்டபுவனமாகிய இரண்டு புவனங்களும் கலா தத்துவத்தில் தியுதிபுவனம் சம்வர்த்த புவனமாகிய இரண்டு புவனங்களும் நியதி தத்துவத்தில் சூரபுவனம் பஞ் சாந்தக புவனம் ஆகிய இரண்டு புவனங்களும், கால தத்து வத்தில் ஏகவீர புவனம் சிகேத புவனம் ஆகிய இரண்டு புவனங்களும் யோகாசனத்தில் உள்ளன.

அப்பு தத்துவம் முதல் காலத்துவம் வரை உள்ள இரு பத்தொன்பது தத்துவங்களும் சிவாசன பத்மத் தண்டின் வடிவாயிருக்க :அமரேச புவனம் முதல் சிகேத புவனம் வரை யுள்ள எழுபத்தைந்து புவனங்களும் தண்டிலுள்ள முட்களின் வடிவாயிருக்கின்றன.

மூலப்பிரகிருதியிலுள்ள பிரும்ம புவனத்தின் நடுவில் பொன் மயமான கோயிலில்ப்ரும்மா எழுந்தருளியிருந்து ப்ரகிருதிக்குட்பட்ட புவனவாசிகளைப் படைத்துக் கொண் டிருப்பார். பிரும்ம புவனத்துக்கு மேல் வைணவ புவனத் தின நடுவில் இந்திர நீலமயமான கோயிலில் விஷ்ணு எழுந் தருளியிருந்து தம்மைப் போன்ற சாரூபம் பெற்ற அடியார் கள் புடைசூழ ஆன்ம பரிபாலனம் செய்து கொண்டிருப்பார். அவரது இருதயத்தில் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் மனம் அகங்காரம் புத்தி பிரகிருதி என்னும் ஒன்பது தத்து வங்களும் பொருந்தி நின்று அவரது அறிவை விளக்கும்.

அதற்குமேல் ஒளிமிகுந்த கௌமார புவனத்தில் குமாரக் கடவுள் எழுந்தருளியிருந்து அவரை வழிபடுபவர்களுக்கு அளவில்லாத போகங்களை வழங்கிக் கொண்டிருப்பார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அதற்கு மேல் உள்ள ஔமம் புவனத்தில் உமா தேவியார் எழுந் தருளியிருந்து தம்மை வழிபடுபவர்களுக்கு நல்லின்பத்தை வழங்கிக் கொண்டிருப்பார்.

அதற்குமேல் கோடி சூர்யப் பிரகாசத்துடன் பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களால் வணங்கப்படுவதாகிய பிரா கிருதச் சிவலோக ஸ்ரீ கண்டபுவனத்தில் ஸ்ரீ கண்ட பரமேசு வரர் எழுந்தருளியிருப்பார். இவர் இவருக்கு மேலேயுள்ள அநந்தேசுவரரால் அதிட்டிக்கப் பெறுபவர். கீழே பிரம்ம புவனத்திலுள்ள பிரம்மாவை அதிட்டித்துப் படைப்பையும், வைஷ்ணவபுவனத்திலுள்ள விஷ்ணுவை அதிட்டித்துக் காப் பையும், காலாக்கினி ருத்திரரை அதிட்டித்தும் தாமாகவும் அழிப்பையும் இவர் செய்வார்.

சிவாசன பத்மத்தின் கிழக்கு முதலிய நான்கு திசைகளி லும் அவ்யக்தம், நியதி, காலம், கலை என்னும் தத்துவங் களும், செம்மைநிறமுள்ள பத்மத்தின் கீழிதழில் மாயா தத், துவமும், அதன் வெண்மை நிறமுள்ள மேல் இதழில் சுத்த வித்யா தத்துவமும் இருக்கும். யோகாசனத்தை வித்யாகலை அதிட்டிப்பதால் இது உயிர்களுக்கு அறிவை வழங்குமிடமாய் இருக்கிறது.

முப்பத்தாறு தத்துவங்களில், மேலே உள்ள நாதரூபமா கிய சிவதத்துவம் மாயையில் நின்று பிரகிருதி மாயையை உண்டாக்கும். மேலும் அது சத்தி தத்துவத்தில் நின்று காலம் நியதி, கலை ஆகிய தத்துவங்களையும், சுத்த வித்தையில்நின்று வித்யா தத்துவத்தையும், ஈசுவரத்தில் நின்று அராக தத்து வத்தையும் தோற்றுவிக்கும். உயிர்களுக்குக் காலம், நியதி. கலை, வித்தை. அராகம் ஆகிய ஐந்து தத்துவங்களும் கூடிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

போது வந்த புருட தத்துவத்தைச் சாதாக்கியம் தொழிற் படுத்தும்.

சிவசத்திகளுள் ஒன்றாகிய இச்சாசத்தி ஈசுவரதத்துவத்தை எழுப்ப, ஈசுவர தத்துவம் அராக தத்துவத்தை எழுப்பி, மலத்துடன் கூடிய உயிர்களுக்கு இச்சையை எழுப்பும். கிரியா சத்தி, சத்தி தத்துவத்தை எழுப்ப, சத்தி தத்துவம் கலாதத் துவத்தைத் எழுப்பி உயிர்களின் ஆணவ மல சத்தியைச் சிறித ளவு மெலியச் செய்து அவற்றைத் தொழிற்பட வைக்கும். கலை என்பதற்கு நீக்கம் — நியமனம் என்னும் பொருள்கள் உள்ளன. ஆதலின் கலா தத்துவம் ஆணவ இருளைச் சிறிது நீக்குவதும், போக நியமனம் செய்வதும் அறியத் தக்க னவாம். ஞான சத்தி சுத்த வித்யா .தத்துவத்தை எழுப்ப சுத்த வித்தை, வித்யா தத்துவத்தை எழுப்பி உயிர்களுக்கு அறிவை விளக்கும். மேலும் கிரியா சத்தி, சத்தி தத்துவத்தைக் கொண்டு நியதி, காலமாகிய தத்துவங்களை எழுப்பி உயிர்களுக்குப் பொருள் நிச்சயத்தையும் இறப்பு, நிகழ்வு எதிர்வு ஆகிய மூன்று காலங்களுக்கும் உரிய நுகர்ச்சி களையும் ஊட்டும்.

பத்மாசனம்

சிவாசன பத்மத்தின் எட்டு இதழ்களும், அனந்தர் முதலிய அஷ்ட வித்யேசுவர ரூபங்களாய் இருக்கும். சிவபெரு மானது கிரியாசித்தி குறைந்து ஞானசத்தி மிகுந்த போது தோன்றும் சுத்த வித்யா தத்திவத்தில் இவ்விதழ்கள் எட்டும் உள்ளன. அஷ்டவித்யேசுவரர்கள் தீவிர மலபரிபாகம் பெற்று சிவானுக்கிரஹத்தை அடைந்து ஈசுவர தத்துவ புவனாதிபர் களாயிருப்பவர்கள். இந்த எண்மருள் முதல்வராகிய அநந்த தேவர் மற்ற வித்யேசுவரருக்கும், சுத்த வித்யா புவன வாசி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

களுக்கும் தலைவராகவும், அசுத்த மாயையைக் கலக்கி, மாயா தத்துவ புவனங்களைத் தோற்றுவிப்பவராகவும், அதிகார மலம் மட்டும் உடையவராகவும் இருந்து பக்குவம் முதிர்ந்த போது சிவானுக்கிரஹத்தால் முத்தியை அடைபவர் ஆவார்

மந்த மலபரிபாகத்தால் சிவானுக்கிரகம் பெற்றும் அபக்குவர்களாய் அஷ்ட வித்யேசுவரர்களால் பிரேரிக்கப்படுபவர்களாய் ஏழு கோடி மகா மந்திரேசுவரர்கள் இருக்கிறார்கள் இவர்களில் மூன்றரைக்கோடி மந்திரேசுவரர்கள் குருமூர்த்திகளாயிருந்து ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் உள்ள சகலவர்க்கத்து ஆன்மாக்களை ஆட்படுத்தி அருள்புரிவார்கள். பேரூழிக்காலத்தில் சிவபெருமான் தாமே வந்து இவர்களுக்கு முத்திப் பேற்றை வழங்குவார். எஞ்சி உள்ள மூன்றரைக் கோடி மந்திரேசுவரரும் மாயாதத்துவத்துக்கு மேலும், சுத்தவித்யா தத்துவத்துக்குக்கீழும் அதிகாரம் உடையவராய் ஊழிக் காலத்தில் குருமூர்த்தி அதிட்டானவாயிலாக அனுக்கிரகம் பெறுவர்.

பத்ம இதழ்களின் நுனிகளில் கோடி சூர்யப்பிரகாசமுள்ள சூரிய மண்டலத்தில் பிரும்மா எழுந்தருளியிருப்பார். சுத்த வித்யா தத்துவத்தில் நந்தி, மகா காளர், பிருங்கி, விநாயகர் இடபதேவர், கந்தர், தேவி, சண்டர் என்னும் கணநாதர்கள் வீற்றிருந்து சிவபெருமானைச் சிவாகமங்களால் பூசித்துக் கொண்டிருப்பார்கள். சப்த கோடி மகா மந்திர சத்திகள் பிருகுணி, பிரும்மவேதாளி, தாணுமதி, அம்பிகை, ரூபிணி, நந்தினி, ஜ்வாலா என்னும் எழுவருமாவார். சப்த கோடி மகா மந்திரங்கள் நம:, ஸ்வாஹா, ஸ்வதா, வௌஷட் வஷட், பட், ஹூம் என்பனவாம். இவற்றுள் நம: என்பதை இறுதியில் கொண்ட மந்திரங்கள் ஆண்வடிவமானவை. ஸ்வாஹா, ஸ்வதா என்பதை இறுதியிற் கொண்ட மந்திரங்கள் பெண் வடிவமானவை. வௌஷட், வஷட்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பட், ஹூம் என்பதை இறுதியாகக் கொண்ட மந்திரங்கள் அலிவடிவமானவை.

விமலாசனம்

ஞான சத்தி குறைந்து கிரியா சத்தி மிகுந்திருக்கும்போது தோன்றும் ஈசுவர தத்துவத்துக்கு அதிபர் மகேசுவரர். ஞான சத்தியும் கிரியாசத்தியும் சமமாக இருக்கும்போது தோன்றும் சாதாக்கிய தத்துவத்துக்கு அதிபர் சதாசிவமூர்த்தி, இவரைச் சூழ்ந்து பிரணவர், திரிகலர், ஹரர், சுதர், பத்மர், காரணர், சர்வருத்திரர், பிரஜாபதி, சுசிவர், சிவர் என்னும் அணு சதாசிவர் பதின்மர் உள்ளனர்.

ஈசுவரம் சாதாக்கியமாகிய தத்துவங்கள் பத்மத்தின் அறுபத்து நான்கு கேசர வடிவமானவை. கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டுத் திசைகளிலுமிருக்கும் அறுபத்து நான்கு கேசரங்களில் எட்டுக் கேசரங்களுக்கு ஒருவராக அஷ்ட வித்யேசுவரர்களை அதிட்டிப்பவரும் சிவசத்திகளும் சுத்தவித்யா புவனவாசிகளுமான வாமை, முதலிய எட்டுச் சத்திகளும் இருப்பார்கள். பத்மத்தின் கர்ணிகையில் மனோன்மணி சத்தி இருப்பார். இவருள் வாமை, பிருதிவி தத்துவ ரூபத்துடன் படைப்புத் தொழிலை விருத்தி செய்பவராய்ச் சிவபெருமானது அஷ்டமூர்த்தங்களுள் சர்வருக்குச் சத்தியாய் அராக தத்துவம் வரை வியாபித்திருப்பார். ஜேஷ்டை, அப்பு தத்துவ ரூபத்துடன் காத்தல் தொழிலை விருத்தி செய்பவராய் அனைத்தையும் படைக்கும் பவருக்குச் சத்தியாய்க் காலதத்துவம் வரை வியாபித்திருப்பார். ரௌத்திரி, தேயு தத்துவ ரூபத்துடன் அழித்தல் தொழிலை விருத்தி செய்பவராய் ஆன்மாக்களுக்கு அதிபராகிய பசுபதிக்குச் சத்தியாய்ச் சுத்த வித்யா தத்துவம் வரை வியாபித்திருப்பார். காளி, வாயு தத்துவ ரூபத்துடன் ஐசுவரியம் உடைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வராகிய ஈசானருக்குச் சக்தியாய் ஈசுவர தத்துவம் வரை வியாபித்திருப்பார். கலவிகரணி, ஆகாய தத்துவ ரூபத்துடன் அவயவப் பகுப்பில்லாதவராகிய பீமருக்குச் சத்தியாய்ச் சிவதத்துவம் வரை வியாபித்திருப்பார், கலா என்பது அவயவப் பகுப்பு என்னும் பொருளையும், விகரணி என்பது இல்லாதவர் என்னும் பொருளையும், உடையது. பலவிகரணி, சந்திரரூபத்துடன் உயிர்ப்பயிர்களை வளர்க்கும் மகாதேவருக்குச் சத்தியாய் சிவதத்துவம் வரை வியாபித்திருப்பார். பல—வி—கரணி பலத்தை விசேடமாகத் தருபவர். பலப்ரமதனி, சூரிய ரூபத்துடன் பாசநீக்கம் செய்யும் ருத்திரருக்குச் சத்தியாய் சிவதத்துவம் வரை வியாபித்திருப்பார். பல—ப்ரமதனி, பலத்தை அழிப்பவர். சர்வபூத தமனி, ஆன்மாக்களது புண்ணிய பாவங்களை அடக்கும் உக்கிரருக்குச் சத்தியாய்ச் சிவதத்துவம் வரை வியாபித்திருப்பார். சர்வ—பூத—தமனி எல்லா ஆன்மாக்களுக்கும் வினையடக்கம் செய்பவர்.

மேற்கூறிய சர்வர் முதலிய அஷ்டமூர்த்தங்களுள் பிருதிவிமூர்த்தி வணக்கம் விக்ரகம் முதலியவற்றிலும் அப்புமூர்த்தி வணக்கம் புண்ணிய தீர்த்தம், கலச தீர்த்தம் முதலியவற்றிலும், தேயுமூர்த்தி வணக்கம் அக்னிகார்யம் முதலியவற்றிலும், வாயுமூர்த்தி வணக்கம், பிராணாயாமம் முதலியவற்றிலும், ஆகாயமூர்த்தி வணக்கம், அந்தர் யாக பூஜை முதலியவற்றிலும், சூரிய சந்திரமூர்த்தி வணக்கங்கள் புறப்பூசை முதலியவற்றிலும், ஆன்ம மூர்த்தி வணக்கம் குரு சங்கம வழிபாடு முதலியவற்றிலும் நிகழுவனவாம்.

சிவாசன பத்ம இதழ்க் கேசரங்களின் நுனிகளில் கோடி சந்திரப்பிரகாசம் உள்ள சந்திரமண்டலம் இருக்கும். அதில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கருமேகம் போன்ற ஒளியையுடைய விஷ்ணுமூர்த்தி வீற்றிருப்பார்.

சத்தி தத்துவம் கேசரங்களுக்கு நடுவில் உள்ள பொகுட்டின் வடிவமாகும். எல்லா உயிர்களுக்கும் தொழிற்படும் ஆற்றலை எழுப்புவதாகிய கிரியாசத்தி அதிட்டித்தலால் தோன்றுவது சத்தி தத்துவம், இது நிஷ்களமாய் விந்து வடிவாய் இருக்கும். இத்தத்துவத்தில் நிவிர்த்தி. பிரதிட்டை, வித்தை, சாக்தி, சாந்தீயதீதை ஆகிய புவனங்கள் உள்ளன.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலிய உலக ஆசைகளிலிருந்து உயிர்களை நிவிர்த்தி செய்வது நிவிர்த்தி கலை, நிவிர்த்தி பெற்ற உயிர்கள் மீண்டும் பிரபஞ்சத்தை நோக்காதபடி செய்வது பிரதிட்டாகலை. உயிர்களுக்கு இயல்பாக அமையும் அநுமான ஞானம் ஆகம ஞானங்களுக்கு மேற்பட்டு அநுபூதி ஞானத்தை உண்டாக்குவது வித்யாகலை. அநுபூதி ஞானம் பெற்ற உயிர்களை விருப்பு—வெறுப்பு ஆகிய துன்பங்களிலிருந்து விடுதலை பெறச் செய்து சாந்தியைத் தருவது சாந்திகலை. அந்தச் சாந்தியையும் ஒழிய வைப்பது சாந்தியதீதகலை. இக்கலைகள் அனைத்தும் சத்தி வடிவானவை.

பொகுட்டின் நுனியில் பேரொளியையுடைய அக்னி மண்டலம் இருக்கும், இதில் ருத்திரமூர்த்தி எழுந்தருளியிருப்பார்.

எல்லா உயிர்களுக்கும் அறிவை எழுப்புவதாகிய ஞான சத்தி அதிட்டித்தலால் தோன்றுவது சிவதத்துவம். இது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பொகுட்டினுள் இருக்கும் விந்தை வடிவமானது. இதில் இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்வ காமினி என்னும் அபரநாத கலாபுவனங்கள் ஐந்தும், வியாபினி, வ்யோம ரூபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் பரநாத பேத புவனங்கள் ஐந்தும் உள்ளன. வியாபினி சத்தி வியாபகருக்குக் காரணமாகிய ஆதிசத்தி ஆவார். வ்யோம ரூபசத்தி வ்யோம ரூபருக்குக் காரணமாய் இச்சா சத்தியாய் இருப்பார். அநந்தா சக்தி அநந்தருக்குக் காரணமாய் ஞான சத்தியாய் விளங்குவார். அநாதா சத்தி அநாதருக்குக் காரணமாய்க் கிரியா சத்தியாய் நிற்பார். மேலே உள்ள சமனையாகிய பரையும் உன்மனையாகிய பரமும் கூடி உயிர் களைத் திருவுள்ளத்தடைத்தபோது அநாசிருதர் தோன் றினர், இவர் பரையை அதிட்டித்தலால் பரன் என்னும் பெயரைப் பெற்றுத் தாம் ஒருவரை ஆசரியாதபடியால் அநாசிருதராய் விளங்குவார்.

பத்மத்தின் பீஜ வடிவங்களாக இருப்பவை ஐம்பத் தொரு எழுத்துக்கள், உயிரெழுத்துக்களில் குற்றெழுக்கள் ஏழும். தத்துவ பீஜம் என்றும், நெட்டெழுத்துக்கள் ஐந்தும். மூர்த்தி பீஜம் என்றும் சொல்லப்பெறும். அகரம் முதல் மூன்றெழுத்துக்கள் ஆகாய தத்துவ அட்சரங்கள். ஈகாரம் முதல் மூன்றெழுத்துக்கள் வாயு தத்துவ அட்சரங் கள். ருகாரம் முதல் நான்கு எழுத்துக்கள் தேயு தத்துவ அட்சரங்கள். ஏகாரம் முதல் மூன்று எழுத்துக்கள் அப்பு தத்துவ அட்சரங்கள். ஔகாரம் முதல் மூன்று எழுத்துக்கள் பிருதிவி தத்துவ அட்சரங்கள். பத்ம பீஜத்தின் நடுவில் உள்ள இரண்டு வித்துக்களும் ஹகார க்ஷகார வடிவாய்ச் சிவதத்துவத்திலிருந்து உயிர்களுக்கு முத்திப் பேற்றை வழங்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வர்ணங்கள் எனப்பெறும் அட்சரங்களுக்குரிய உருவம், நிறம், அதிதேவர். பயன் ஆகியவை வருமாறு :-

வர்ணம்	உருவம்	நிறம்	அதிதேவர்	பயன்
அ	ஆண்	சிவப்பு	எல்லாத் தேவரும்	வசீகரம்
ஆ	பெண்	வெள்ளை	பராசக்தி	ஆகர்ஷணம்
இ	ஆண்	பச்சை	விஷ்ணு	காப்பு
ஈ	பெண்	பொன்	மாயாசக்தி	வசீகரம்
உ	ஆண்	கருமை	வாஸ்து	ராஜவசியம்
ஊ	பெண்	பச்சை	பூதேவி	ஜனவசியம்
ரு	அலி	பொன்	பிரமன்	கிரகபீடை நிவர்த்தி
ரூ	அலி	கருமை	வியாழன்	சுரநிவர்த்தி
லு	அலி	வெள்ளை	அஸ்வினி தேவர்	சுரநிவர்த்தி
லூ	அலி	செம்மை	,,	,,
ஏ	ஆண்	பொன்	வீரபத்திரர்	சர்வசித்தி
ஐ	பெண்	வெள்ளை	சரஸ்வதி	ஞானம்
ஓ	ஆண்	ஜோதி	ஈசுவரர்	இஷ்டசித்தி
ஔ	பெண்	வெள்ளை	ஆதிசக்தி	சர்வசித்தி
அம்	ஆண்	சிவப்பு	மகேசுவரர்	சுகம்
அ:	பெண்	சிவப்பு	காலாக்கினி ருத்ரர்	பாசநீக்கம்
க	ஆண்	பொன்	பிரமன்	படைப்பு
க (2)	பெண்	வெள்ளை	கங்கை	பாவநீக்கம்
க (3)	ஆண்	சிவப்பு	விநாயகர்	விக்கினநீக்கம்
க (4)	பெண்	வெள்ளை	பைரவர்	பகைஅழிவு
ங	அலி	கருமை	காலர்	வெற்றி
ச	ஆண்	பயோதரம்	சண்ட ருத்திரர்	அசுரநிவர்த்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ச (2)	பெண்	கரும் பொன்மை	பத்ரகாளி	வெற்றி
ச (3)	ஆண்	சிவப்பு	இந்திரன்	,,
ச (4)	பெண்	பசுஞ் செம்மை	அர்த்த நாரீசர்	,,
ஞ	அலி	பொன்	கோடி ருத்திரர்	போக நீக்கம்
ட	ஆண்	சிவப்பு	ப்ருங்கி	சுகம்
ட(2)	பெண்	வெள்ளை	சந்திரன்	அபம்ருத்யு நீக்கம்
ட(3)	ஆண்	பொன்	ஏகருத்திரர்	காலதோஷ நிவர்த்தி
ட(4)	பெண்	நீலம்	யமன்	அபம்ருத்யு நீக்கம்
ண	அலி	சிவப்பு	நந்தி	பொருட்பேறு
த	ஆண்	வெள்ளை	வாஸ்து	வெற்றி
த(2)	பெண்	குந்தம்	தரும தேவதை	,,
த(3)	அலி	பச்சை	துர்க்கை	பொருட்பேறு
த(4)	பெண்	பொன்	குபேரன்	,,
ந	அலி	வெள்ளை	சாவித்திரி	பாபநாசம்
ப	ஆண்	,,	ஆகாயம்	விருஷ்டி
ப(2)	பெண்	சிவப்பு	பசுபதி	பாபநாசம்
ப(3)	ஆண்	பொன்	திரிமூர்த்தி	சர்வசித்தி
ப(4)	பெண்	சிவப்பு	சுக்கிரன்	,,
ம	அலி	பசுமை	மன்மதன்	வெற்றி
ய	அலி	கருமை	வாயு	உச்சாடனம்
ர	,,	சிவப்பு	அக்கினி	மாரணம்
ல	,,	பொன்	பிருதிவி	தம்பனசித்தி
வ	,,	வெள்ளை	வருணன்	ரோக நிவர்த்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ச	பெண்	வெள்ளை	லக்ஷ்மி	செல்வம்
ஷ	ஆண்	சிவப்பு	சூரியர்	சர்வசித்தி
ஸ	பெண்	சிவப்பு	சக்தி	காப்பு
ஹ	அலி	பளிங்கு	சிவம்	அஷ்டமா சித்தி
க்ஷ	ஆண்	வெள்ளை	வித்யா தத்துவம்	போக மோட்சம்

கர்ணிகையின் நடுவில் ஓங்கார வடிவத்துடன் வெண்மையாகிய சக்திமண்டலம் இருக்கும். இதில் ஈசுவரர் எழுந்தருளியிருப்பார்.

இங்ஙனம் ஆதார சத்திக்கு மேல் சிவாசனத்தைப் பிருதிவி தத்துவம் முதல் நாத தத்துவம் வரை வியாபித்திருப்பதாகச் சிந்தித்துச் செய்யும் ஆசன பூசையில் எல்லாத் தேவர்களும் பூசிக்கப்பெறுகிறுர்கள் என்பதும் சிவபூசையில் இடம்பெருது தேவர்கள் எவரும் இருப்பதில்லை என்பதும் உணரத்தக்கனவாம்.

சிவமூர்த்தி

சிவபெருமான் உயிர்களுக்கு அருள்வழங்குவதற்காக நாதபிந்துக்கள், சாதாக்கியம், ஈசுவரம் ஆகிய தத்துவங்களில் முறையே நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் ஆகிய மூவகைத் திருமேனிகளுடன் எழுந்தருளியிருப்பார். நாத பிந்து தத்துவங்களில் சிவம் சக்தியென தனித்தனியாக இருக்கும் நிஷ்களமூர்த்தி சாதாக்கிய தத்துவத்தில் ஐந்து நிலையிலும், ஈசுவர தத்துவத்தில் இருபத்தைந்து, அறுபத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நான்கு, அனந்த கோடி என்னும் எண்ணிக்கைகளிலும் விளங்குவார்.

நிஷ்கள சிவம் எல்லாவற்றிற்கும் மேலானதாய் உயிர்களின் மலஇருளை ஒழிக்கும் பேரொளிப் பிழம்பாய் உயிர்களுக்கெல்லாம் உயிராய், அமலமாய், குணங்களும் குறிகளும் இல்லாததாய், ஒன்ருய், நிலைபேறுடையதாய், சச்சிதானந்த சொருபமாய் எங்கும் நிறைந்ததாய், அநுக்ரக கர்த்தாவாகிய சதாசிவ மூர்த்திக்கு மேலானதாய்ப் பராசக்திக்குக் காரணமாய் இருக்கும். நிஷ்கள சத்தி, நிஷ்கள சிவத்தின் ஆயிரத்தில் ஒருகூருக தோன்றுவது. பராசத்தியின் ஆயிரத்தில் ஒருகூருய் உயிர்களைப் பெத்த முத்திகளில் வியாபித்துக் கொண்டிருப்பது ஆதிசத்தி அதில் ஆயிரத்தில் ஒருகூருய் இச்சாசக்தியும், அதில் ஆயிரத்தில் ஒருகூருய் ஞானசத்தியும், அதில் ஆயிரத்தில் ஒரு கூறுய் கிரியா சத்தியும் தோன்றிச் சிவபெருமானுக்குப் பஞ்ச கிருத்தியத்துக்குத் துணையாக இருக்கும். இந்தச் சத்திகளிலிருந்து ஞானிகள் யோகிகள், கிரியையாளர்களின் தியானம், பூசையாதியவற்றிற்காகச் சாதாக்கியங்கள் தோன்றின.

அருவத் திருமேனி கொண்டிருக்கும் சுத்தசிவம் உருவம்—பெயர்களையுடையவராய்ச் சாதாக்கியத்தில் வருவார். சாதாக்த்யத்தை அடுந்த ஈசுவர தத்துவத்தில் சகளமாகிய உருவத்திருமேனி மூர்த்திக்ள் சந்திர சேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாண சுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுவரர், கிராதர். கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர் கஜமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணமூர்த்தி, லிங்கோத்பவர் என இருபத்தைந்து என்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இவற்றின் மேல் சிவபராக்ரம மூர்த்திகள் அறுபத்துநான்கு என்றும், இவற்றின் மேல் அறுபான்மும்மை நாயன்மார் முதலிய திருத்தொண்டர்களுக்கு அருள்புரிவதற்காக எடுத்துக்கொண்டு வந்தவைகளும், இனி அவ்வாறு அருள்புரிவதற்கு எடுத்துக்கொண்டு வரும் திருவுருவங்களும் அனந்த கோடி என்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

சாதாக்கியம் என்பது "எப்போதும் புகழப்படுவது" என்னும் பொருளையுடையது. சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் எனச் சாதாக்கியங்கள் ஐந்தாகும். சாந்தியதீதையாகிய பராசக்தியின் அம்சமாய்ச் சிவசாதாக்கியமும், சாந்தியாகிய ஆதி சத்தியின் அம்சமாய் அமூர்த்தி சாதாக்கியமும், வித்தையாகிய இச்சா சத்தியின் அம்சமாய் மூர்த்தி சாதாக்கியமும், பிரதிட்டையாகிய ஞான சக்தியின் அம்சமாய்க் கர்த்திரு சாதாக்கியமும், நிவிர்த்தியாகிய கிரியா சக்தியின் அம்சமாய்க் கன்ம சாதாக்கியமும் தோன்றின. இவ்வைந்து சாதாக்கியங்களிலும் முறையே சதாசிவர், ஈசர், பிரமீசர், ஈசுவரர், ஈசானர் என்னும் திருநாமங்களுடன் சிவபெருமான் எழுந்தருளியிருப்பார். சாதாக்கிய தத்துவங்களில் மூர்த்திகள் கூடியபோது பிரபாவம் என்று சொல்லப்படும் ஈசானம் முதலியவை தோன்றின. சிவ சாதாக்கியத்தில் சதாசிவர் கூடியபோது ஈசானமும், அமூர்த்தி சாதாக்கியத்தில் ஈசர் கூடியபோது சத்யோஜதமும், மூர்த்தி சாதாக்கியத்தில் பிரமீசர் கூடியபோது வாமதேவமும். கர்த்திரு சாதாக்கியத்தில் ஈசுவரர் கூடியபோது அகோரமும், கன்ம சாதாக்கியத்தில் ஈசானர் கூடியபோது தத்புருஷமும் தோன்றுவனவாம்.

சிவ சாதாக்கியம் மிக மிக நுட்பமானதாய் அருவமாய் எங்கும் நிறைந்ததாய்ப், பேரொளிப் பிழம்பாய் தியான கோசரமாய் இருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அமூர்த்தி சாதாக்கியம் கலைகளுக்கு அப்பாற்பட்டதாய், தூணையொத்த லிங்க வடிவம் கொண்டு கோடி சூரியப் பிரகாசத்துடன் திவ்யலிங்கம் என்று குறிக்கப்பெற்று அமைந் திருக்கும்.

மூர்த்தி சாதாக்கியம் தீ வண்ணத்துடன் திவ்யமான லிங்க ஆகிருதியாய் ஒருமுகம், மூன்று கண்கள், மான் மழு அபயவரதம் கொண்ட கைகள் உடையதாய் லிங்கமூர்த்தி என்று குறிக்கப்பெற்று அமைந்திருக்கும்.

கர்த்திரு சாதாக்கியம் ஸ்படிக ஒளியுடன் நான்கு முகம் பன்னிரண்டு கண்கள், வலக்கைகளில் சூலம், மழு, வாள் அபயமும். இடக்கைகளில் பாசம், மணி, பாம்பு, வரதம் கொண்டு ஞானலிங்கமென்று பெயர் பெற்றிருக்கும்.

கன்ம சாதாக்கியம் நாதமயமாகிய லிங்கமும், விந்து மயமாகிய பீடமும் கூடியதாய் இருப்பது.

சிவசாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியத்தையும் அது மூர்த்தி சதாக்கியத்தையும்அது கர்த்திரு சதாக்கியத்தையும் பற்றிவர, அந்நான்கு சாதாக்கியங்களும் இறுதியாகக் கன்ம சாதாக்கியத்தைப் பற்றுவதால் இக்கன்ம சாதாக்கியத்தில் எல்லாச் சாதாக்கியங்களும் அடங்கியிருக்கும். கன்ம சாதாக்கிய மூர்த்தியாகிய ஈசானர் பீடலிங்க வடிவத்தில் இருந்தாலும், தியான பூசைகளின் பொருட்டு ஐந்து முகம் பத்துக்கரங்கள் ஆகியவற்றைக் கொண்டு எழுந்தருளுவார்

லிங்கம் என்பது, ''சித்திரித்தல்'' என்னும் பொருளை யுடையது. ஊழிக் காலத்தில் அனைத்தும் ஒடுங்குதலும், படைப்புக் காலத்தில் ஒடுங்கியதுபோல மீளத் தோன்று தலும் லிங்கத்திலிருந்து நிகழுபவை. ஞான சக்தியாகிய சிவலிங்கத்தின் கீழுள்ள ஆவுடையார் கிரியாசக்தியாகும். சிவலிங்கத்தைச் சுற்றி உயிர்களின் பந்த பாசங்களை ஒழிப் பதற்காகப் பராசக்தி இடையீடின்றிச் சுழன்று அசைந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கொண்டிருக்கிறது. இந்த உண்மையை உணர்த்துவதே லிங்கத்தைச் சுற்றி இருக்கும் ஆவுடையார். ஆவுடையாரின் ஒரு பக்கத்தில் கீழ்நோக்கி அமைந்திருக்கும் கோமுகி, உயிர்களை நோக்கும் குறிப்பில் அமைந்தது. கோ—பசு, முகி—நோக்குவது.

சிவலிங்கம் பிரம விஷ்ணு ருத்ரபாகங்களைக் கொண்டு அலி பெண் ஆண் வடிவங்களுடன் உயர்திணை அஃறிணை ஆகிய எல்லாப் பொருள்களும் தன்னிடத்தில் தோன்றி ஒடுங்குவதை உணர்த்திக் கொண்டும் இருக்கின்றது.

தண்ட பங்கி நியாசம்

சிவமூர்த்தியைச் சிவசாதாக்கிய ஒளிருபமாக ஈசானத்திலும், அமூர்த்தி சாதாக்கிய தண்டாகாரமாக மேற்கிலும், மூர்த்தி சாதாக்கியப் பிரியாமலிருக்கும் அவயவங்களை உடையதாக வடக்கிலும், கர்த்திரு சாதாக்கியச் சிவதத்துவ வியாபகமாகத் தெற்கிலும், கன்ம சாதாக்கியப் பரவிந்து ருபமாகக் கிழக்கிலும் தியானிக்க வேண்டும்.

முண்ட பங்கி நியாசம்

சுத்த மாயை அசுத்த மாயையென்னும் இரண்டும் உலகத்துக்கு முதற்காரணமாயிருப்பவை. சுத்த மாயையில் சிவசத்தி கூடியிருக்கும். மந்திரங்கள் அனைத்தும் சுத்த மாயையில் தோன்றிப் பயன் வழங்கும் பொருட்டுச் சிவ சத்தியால் அதிட்டிக்கப் பெறுபவை. சிவபூஜையாதியவற்றால் சிவபெருமானை வழிபடுபவர்களுக்குப் போக மோக்ஷங்களை அம்மந்திரங்கள் கொடுக்கும். அதனால் சிவபெருமானுக்குத் திருமேனியாக மந்திரங்கள் விளங்குகின்றன. மந்திரங்களுள் ஈசானம் முதலிய பஞ்சப் பிரம மந்திரங்கள் எல்லா மந்திரங்களுக்கும் மூலமாயிருப்பதாலும் அநாதியில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நிகழ்ந்த முதற்படைப்புக் காலத்திலேயே தோன்றியதாலும் அவை சிவபெருமானது திருமேனியென்று சிறப்பாகச் சொல்லப்பெறும்.

ஐசுவரிய குணமும் பேரருளும் மேலான இடமும் உடைமையால் ஈசானம் மூர்த்தா எனப்பெற்றது. உயிர் உடம்புகளை அதிட்டித்து நின்று அருள் நோக்கத்தால் ஞானம் வழங்கி ஆட்கொள்வது பற்றித் தத்புருஷம் வக்த்ரம் எனப்பெற்றது. கோரமாகிய மலத்தைப் பரிபாகப்படுத்து வதால் அகோரம் 'ஹ்ருதயம்' எனப்பெற்றது. உயிர் களுக்கு அவைகள் செய்த வினைக்கேற்பத் தநு கரண புவன போகங்களைக் கொடுத்து நுகர்விப்பதால் வாமதேவம் 'குஹ்யம்' எனப்பெற்றது. எல்லா உயிர்களுக்கும் உடம்பு களைக் கொடுக்கின்ற படியால் சத்யோஜாதம் 'மூர்த்தி' எனப்பெறும். பஞ்சப் பிரம மந்திரங்களைச் சிவபெருமா னது ஐந்து சிரசுகளிலும் நியசிப்பதால் சிரசுகள் மந்திர உருவத்தை அடைகின்றன.

வக்த்ர பங்கி நியாசம்

சிவபெருமானது வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனும், நெற்றிக்கண் அக்னியும் ஆகும். சூரிய சந்திர அக்னிகளை அதிட்டித்துத் தொழிற்படுத்துபவர் சிவபெரு மான். ஆகவநீயம், காருகபத்யம், தாக்ஷிணக்கினி என்னும் வைநஸுவராக்கினிகள் மூன்றும் பால, யௌவன விருத்த மாகிய சிவாக்கினிகள் மூன்றும் சிவபெருமானிடத்தில் பொருந்தியவை என்பதை அவரது முக்கண்கள் உணர்த் தும். அவரது ஐந்து முகங்களிலும் மும்மூன்று நேத்திரங் களை நியசிப்பதால் நேத்திரங்கள் மந்திர உருவத்தையடை கின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கலா பங்கி நியாசம்

பஞ்சப் பிரம மந்திரங்களின் பகுதிகளாயிருப்பவை முப்பத்தெட்டுக் கலாசக்திகள். அவை சிவபெருமானது திருமேனி உறுப்புகளாயிருத்தல் பற்றி அவ்வவ் உறுப்புகள் அவ்வச் சத்தி மந்திரங்களால் நியசிக்கப்பெறுகின்றன.

அத்துவ நியாசம்

அத்துவா என்பது 'வழி' என்னும் பொருளையுடையது. மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என அத்துவாக்கள் ஆறாகும். இவற்றுள் மந்திரம், பதம், வர்ணம் என்னும் மூன்றும் சொற்கூறு. புவனம், தத்துவம் கலை என்னும் மூன்றும் பொருட்கூறு. மந்திரங்களின் எண்ணிக்கை பதினொன்று. பதங்களின் எண்ணிக்கை எண்பத்தொன்று. வர்ணங்களின் எண்ணிக்கை ஐம்பத்தொன்று புவனங்கள் இருநூற்று இருபத்து நான்கு. தத்துவங்கள் முப்பத்தாறு கலைகள் ஐந்து, மந்திரங்கள் பதங்களினலும் பதங்கள் வர்ணங்களாலும் வியாபிக்கப்பெறும். வர்ணங்களைப் புவனங்களும் புவனங்களைத் தத்துவங்களும், தத்துவங்களைக் கலைகளும் வியாபிக்கும். கலைகள் சிவசத்தியால் வியாபிக்கப்படுபவை. சிவசத்தி சிவத்தில் அடங்குவது.

உயிர்களது கன்மச் சேர்க்கைக்கு ஆதாரமாயிருக்கும் அத்துவாக்கள் ஆறையும் அதிட்டித்து நின்று, கன்மம சேர்ந்த முறையிலேயே சிவபெருமான் அதனை ஒழித்தருளுவார், கன்ம நீக்கத்துக்கு அடிப்படையாக நிகழுவது அத்துவ சுத்தி. தீக்ஷையால் அத்துவசுத்தி பண்ணி மலத்தை ஒழித்துச் சிவம் பிரகாசிக்க வைப்பவர் அவரே. ஒரு மலமுடைய விஞ்ஞான கலருக்கு அறிவுக்கறிவாகி உள்நின்றுஉணர்த்துவதாகிய நிராதாரதீக்ஷையாலும், இருமலமுடைய பிரளயாகலருக்கு உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து முன்னின்று உணர்த்துவதாகிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நிராதார தீக்ஷையாலும், மலநீக்கம் செய்து முத்திப் பேற்றைச் சிவபெருமான் வழங்கியருளுவார். மும்மல முடைய சகலருக்கு அச் சகல வர்க்கத்தவர் போன்ற ஆசிரியரை அதிட்டித்து நின்று ஞானவதி கிரியாவதி ஆகிய ஆதார தீக்ஷைகளைச் செய்து ஆட்கொள்ளுவார். அத்து வாக்கள் ஆறும், சிவபெருமானுல் அதிட்டிக்கப் பெறுவன வாதலின் அவரது திருமேனியில் அத்துவ நியாசம் செய்யப் பெறுகின்றது.

சிவாகம நியாசம்

சிவபெருமானுடைய திருமேனி ஞான சொரூபமானது ஞானங்களில் மேலானது சிவஞானம். அச் சிவஞானத்தை உணர்த்துவன சிவாகமங்கள். அதனுல் அவரது திருமேனி யில் சிவாகம நியாசம் செய்யப்பெறும்.

அந்தர் பகிர் மாத்ருகா நியாசங்கள்

ஞான சத்தியின் அதிட்டானத்தால் சுத்த மாயையி லிருந்து நாதம் தோன்றியது. நாதத்தில் அட்சர விந்துவும் அதில் இச்சாசத்தியின் அதிட்டானத்தால் அம்பிகைஎன்னும் விந்து கலா சத்தியும், அதிலிருந்து குண்டலினி வடிவாகிய வாமை — தண்டாகாரமாகிய சேட்டை— கலைக்கொம்பு வடிவாகிய ரௌத்திரி என்னும் மூன்று சத்திகளும் அவற்றி லிருந்து ஜயை. விஜயை அசிதை, பராசிதை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை ரோசிகை மோசிகை வ்யோமரூபை, அநந்தை, அநாதை அனுசிருதை, ஆகிய சத்திகளும், இச்சக்திகளில் ஐம்பத்தொரு அட்சரங் களும்தோன்றின. அட்சரங்களுக்கு விந்து முதற்காரணமும், சிவசக்தி துணைக் காரணமும், சிவம் நிமித்த காரணமுமாய் இருக்கும். அட்சரங்களாகிய் காரியங்கள் சிவமாகிய கார

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ணத்தோடு கூடியிருப்பனவாதலின் சிவபெருமானது திரு மேனியில் மாத்ருகா நியாசம் செய்யப்பெறுகின்றது. உலகத்துக்குத் தாயாகி மாதிருகை என்னும் பெயருடன் விளங்கும் ஞானசத்தி சிவபெருமானது திருமேனியென்பதை இந்த நியாசம் உணர்த்தும்.

ஸ்ரீ கண்ட நியாசம்

மாதிருகாட்சரங்கள் அவையவற்றை அதிட்டிக்கும் தேவர்களுடனும், அவையவற்றின் சத்திகள் சகிதமாகவும் நியசிக்கப் பெறுவது ஸ்ரீ கண்ட நியாசம்.

தத்துவ தத்துவேசுவர நியாசம்

பிருதிவி தத்துவம் முதல் சிவதத்துவம் வரை உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் அசித்துக்களே ஆகும். அசித்துக்கள் சித்துகளின் கூட்டுறவால் அன்றித் தொழிற்பட மாட்டா. தத்துவங்களை அதிட்டித்துத் தொழிற்படுத்தும் எல்லாத் தேவர்களையும் தத்துவாதீதராகிய சிவபெருமான் அதிட்டித்து நிற்பார். அதனால் தத்துவ தத்துவேசுவரர்கள் சிவபெருமானது திருமேனியில் நியசிக்கப்பெறுகிறார்கள்.

மூர்த்தி மூர்த்தீசுவர நியாசம்

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எண்வகை மூர்த்தங்களில் எழுந்தருளியிருந்து சிவபெருமான் உயிர்களுக்கு அருள் புரிவார். இவ் வெண்வகை மூர்த்தங்களும் சிவபெருமானது திருமேனிகளாக அமைவது கொண்டு இவற்றை அஷ்ட மூர்த்தங்கள் என்று குறிப்பார்கள். சிவபெருமான் பிருதிவியில் 'சர்வர்' என்றும், அப்புவில் 'பவர்' என்றும் தேயுவில் 'பசுபதி'

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

என்றும் வாயுவில் 'ஈசானர்' என்றும் ஆகாயத்தில் 'பீமர்' என்றும், சூரியனில் 'ருத்திரர்' என்றும் சந்திரனில் 'மகாதேவர்' என்றும், ஆன்மாவில் 'உக்கிரர்' என்றும் திருநாமம் கொண்டு எழுந்தருளியிருப்பார். இவ்வஷ்ட மூர்த்தங்களைத் திருமேனியில் நியசிப்பதே மூர்த்தி மூர்த்தீசுவர நியாசமாகும்.

பஞ்சாட்சர கோளக நியாசங்கள்

ஸ்ரீ பஞ்சாட்சரமும், சம்ஹிதா மந்திரங்களும் சேர்ந்து சிவபெருமானுக்குரிய மந்திரத் திருமேனியாக இருக்கும். இந்த மந்திரங்களை பஞ்சாட்சர – கோளக நியாசங்களில் அவரது திருமேனி அவயவங்களில் நியாசஞ் செய்தல் வேண்டும்.

சதாசிவ மூர்த்தி தியானம்

சதாசிவ மூர்த்தியினது திருமேனி ஒளியுருவமானது ஆயினும் அவர் சாதகர்களது தியானம், பூசை ஆகியவற்றின் பொருட்டுத் தடத்தமாகிய உருவத்தைக் கொள்ளுவார். அங்ஙனம் அவர் கொள்ளும் திருவுருவத்தை முறையாகச் சிந்தித்து முதலில் தியானித்துக் கொள்வது இன்றியமையாதது.

நால்வகையாகச் சொல்லப்பெறுகின்ற அங்கபேதங்களுள் சிரசு, முகம், இருதயம் ஆகியவை அங்கங்கள் என்றும், கண், காது, மூக்கு வாய், கழுத்து, தோள், மார்பு, நாபி, வயிறு, குய்யம், கை, கால் ஆகியவை பிரத்தியங்கங்கள் என்றும்,சத்தி, அபயம், சூலம், கட்வாங்கம், உடுக்கை, வரதம் மாதுளம்பழம், ஜபமாலை, நீலோற்பலம் ஆகியவை சாங்கங்கள் என்றும் வஸ்திரம், ஆபரணம், பூணூல், மாலை ஆகியவை உபாங்கங்கள் என்றும் சொல்லப் பெறுவனவாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன் சதாசிவன் ஆகிய ஐந்து மூர்த்திகளையும் நிலைக்களங்களாகக் கொண்டு ஐந்தொழில் செய்யும் உண்மையைச் சிவபெருமானது ஐந்து திருமுகங்களும் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. அளவுபடாது மேலோங்கியிருக்கும் பெருநிலையை அவரது சிகை உணர்த்தும். முத்தான்மாக்களுக்கு மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் திருவருட்சத்தி அவரது இருதயமாயிருக்கும். அவரது பேராற்றலை உணர்த்துவது கையிலுள்ள சத்தி. துன்பங்களுக்கு அஞ்ச வேண்டாமென்று உயிர்களுக்கு ஆறுதல் செய்வது அபயம், முத்தொழில் கருத்தர், மும்மலங்களைக் களைபவர், முதலானவற்றை உணர்த்துவது சூலம், கட்வாங்கமாகிய மழு பராசத்தி வடிவமாயிருந்து சத்திக்கு மேலானது சிவம் என்பதை அறிவிக்கின்றது. அனைத்தையும் படைப்பவர் அவர் என்பதை உடுக்கை காட்டும். உயிர்களது தகுதிகளுக்குஏற்பப் போக மோட்சங்களை வழங்குவது வரதம் மாதுளம் பழம் சுத்த மாயையைத் தொழிற்படுத்துபவர் என்பதை உணர்த்தும். பாம்பு அவரது கம்பீரத்தைத் தெரிவிக்கும் எல்லா உயிர்களுக்கும் யோகசித்தி, ஞானமுக்தி ஆகியவற்றை அவர் வழங்குவது ஜபமாலையால் அறியப் பெறும். நீலோற்பலம் உயிர்களின் உள்ளங்களில் தங்கியிருந்து தொழிற்படுத்துபவர் என்பதை விளக்கும்.

சிவபெருமானது திரிசூலம் அவரது இச்சா, ஞானக் கிரியா சத்திகளாயிருந்து சுத்த தத்துவங்களாகிய நாதம், விந்து, சாதாக்கியம் ஈசுவரம் சுத்த வித்தை ஆகியவற்றில் தொழிற்படும் போது மழுவாகவும், உலக காரணமாகிய மகாமாயையில் தொழிற்படும் போது மாதுளம் பழமாகவும் அசுத்த மாயா தத்துவத்தில் தொழிற்படும் போது உடுக்கையாகவும், கலை முதலிய தத்துவங்களில் தொழிற்படும் போது வாளாகவும், மனத்தத்துவத்தில் தொழிற்படும் போது நீலோற்பலமாகவும், இந்திரியங்களில் தொழிற்படும் போது அக்ஷமாலையாகவும், துஷ்டர்களைச் சங்காரம் செய்யும் போது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சத்தி ஆயுதமாகவும், உயிர்களுக்கு போகத்தை வழங்கும் போது வரதமாகவும், மோக்ஷத்தை வழங்கும் போது அபய மாகவும் நிற்கும்.

சிவபெருமானது சடைமுடியில் உள்ள சந்திரன் அவரது சர்வக்ஞத்துவத்தை உணர்த்தும் கொன்றை தத்து வாதீத உண்மையையும், கங்கை பேராற்றலையும் அறிவிக்கும். வேத சிவாகமங்களில் முடிக்கப் பெற்ற உண்மைப் பொருள் அவர் என்பதையும், அவரை அறியும் சிவஞானத்தை உயிர்களுக்கு வழங்குபவர் அவரே என்பதையும் தெரிவிப்பது பூணூல் அவரது சிகை சிவஞானக் குறிப்பைக் காட்டும். இங்ஙனமுள்ள சிவபெருமானது நால்வகை அங்கங்களும் அவர் பயன் கருதி அமைந்தவை அல்ல. உயிர்கள் பதி உண்மையை அறிந்து வழிபட்டுப் பேரின்ப பேற்றை பெற வேண்டுமென்னும் பெருங் கருணையினாலேயே அவர் இவற்றைக் கொண்டருளினர். சதாசிவ மூர்த்தியினது சத்தி மனோன்மணி சத்தி என்று சொல்லப் பெறும். 'சத்தி' ஆற்றலும் 'சத்தன்' அதனை உடையவனும் ஆதலால் பெண்வடிவமாகிய சத்தியும், ஆண் வடிவமாகிய சத்தனும், நெருப்பிற் சூடு போலப் பிரிப்பின்றி இருந்தே அருட்செயல்களைச் செய்வார்கள்.

ஆவாகனம் முதலியன

சிவலிங்கத் திருமேனியில் பரமசிவனை ஆவாகனம் செய்யும் போது மூலாதார ஸ்தானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற பிராசாத சத்தி மயமாகப் பூசகன் தன்னைப் பாவித்துக் கொள்ள வேண்டும். ''பிரசாதம்'', பதினாறு கலைகளாகிய பகுப்புக்களை உடையது. அவை மேதா, ரசம், விஷம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதி, நாதம், நாதாந்தம் சத்தி, வியாபினி, வ்யோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உந்மனை என்பனவாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உடம்பின் நடு இடமான மூலாதாரம் தொடங்கி உச்சியான பிரமந்திரம் வரை ஒரு நாளம் இருக்கிறது. அதன் மேல் சிகை இருக்கும். மூலாதாரத்திலிருக்கும் நான்கு இதழ்களுள்ள பத்மத்தில் பிராஸாத மந்திரம் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. மூலாதாரம் தொடங்கி சுவாதிட்டானங் கடந்து மணிபூரகம்வரை சூக்குமமாயும் மின்னல்ஒளியுடனும் 'ஹ' என்னும் பீஜம் இருக்கும். மணிபூரகமாகிய நாபிக்கு மேல் ஹ்ருதயம் வரை பிருதிவி தத்துவம் முதல் பிரகிருதி தத்துவம் வரையுள்ள இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களு டனும் நிவிர்த்திகலையுடனும் கூடிபிரமனால் அதிட்டிக்கபடு கின்ற அகாரமாகிய மேதாகலையிருக்கும். அதற்குமேல்கழுத்து வரை பதினாறு இதழ்கள் உள்ள பத்மத்தை வியாபிப்பதாய்ச் சந்திர சூரியர்களின் ஒளியுடையதாய்ப் புருடன் முதல் காலம் ஈறாகவுள்ள ஆறு தத்துவங்களுடன் பிரதிட்டா கலையுடனும் கூடி விஷ்ணுவால்அதிட்டிக்கப்படுகின்ற உகாரமாகிய ரசகலை இருக்கும். அதற்கு மேல் நாக்கின் அடிவரை நான்கு இதழ் களுள்ள பத்மத்தை வியாபிப்பதாய் மின்னொளி உடையதாய் மாயா தத்துவத்துடனும் வித்யா தலையுடனும் கூடி உருத்திர ரால் அதிட்டிக்கப்படுகிற மகாரமாகிய விஷகலை இருக்கும்.

அதற்கு மேல் புருவநடுவில் இரண்டு இதழ்களுள்ள பத்மத்தை வியாபிப்பதாய், விளக்கொளி உடையதாய்ச்சுத்த வித்தை, ஈசுவரம் ஆகிய தத்துவங்களுடனும் சாந்திகலையுட னும் கூடி மகேசுவரரால் அதிட்டிக்கப்படுகின்ற வட்டப் புள்ளியாகிய விந்துக்கலை இருக்கும், அதற்குமேல் நெற்றியின் நடுவில் மேல்நோக்கிய நுனிகளையுடையஅரைச்சந்திரகலையும் அதற்கு மேல் நெற்றியின் மேற்பகுதியில் முக்கோண வடிவ மும், புகை நிறமும் கொண்ட நிரோதிக்கலையும், அதற்குமேல் சிரசில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு விந்துக்கள் கூடியதும் இரத்தின வர்ணங் கொண்டதும் ஆகிய கலப்பைவடிவமுள்ள நாதகலையும், அதற்குமேல் பிரமரந்திரத்தில் வலப்பக்க விந்து வுடன் கூடிய மின்னொளியுள்ள கலப்பைவடிவமான நாதாந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கலையும் இருக்கும். அர்த்த சந்திரன் முதல் நாதாந்தம்வரை யுள்ள நான்கு கலைகளும் சாதாக்கியம் — சத்தி தத்துவங்களுடனும் சாந்தியதீத கலையுடனும் கூடிச் சதாசிவ மூர்த்தியால் அதிட்டிக்க பெறுவனவாயிருக்கும். அதற்கு மேல் நடுவிந்துவுடன் கூடிய ஒரு புறக் கலப்பை வடிவமான சத்தி கலையும், அதற்கு மேல் இருபுற விந்துவுடன் கூடிய சூல வடிவமுள்ள வியாபினிக் கலையும் ஆகத சிவனால் அதிட்டிக்கப்பட்டிருக்கும்.

அதற்கு மேல் துவாத சாந்தம் வரை நூறு கோடி சூரியப் பிரகாசம் உடையனவாய்ப் பரமசிவனால் அதிட்டிக்கப் படுகின்ற நான்கு விந்துவடிவமுள்ள வ்யோமரூபினி, அநந்தை அநாதை, அநாசிருதை என்னும் நான்கு கலைகளும், அதற்கு மேல் அநந்தகோடி சூரியப் பிரகாசமுடையனவாய் அநாகத சிவனால் அதிட்டிக்கப்படுகின்ற இரண்டு விந்து, இரண்டு தண்ட வடிவமான சமனா கலையும், விருத்த வடிவமான உந்மனா கலையும் இருக்கும். சத்தி கலை முதல் உந்மனா கலை வரையுள்ள எட்டுக்கலைகளும் சிவதத்துவத்துடன் கூடியவை.

மூலாதாரம் முதல் துவாத சாந்தம் வரை உள்ள பதினாறு கலைகளையும் அவையவற்றிற்குரிய இடம் வடிவம், நிறம், தத்துவ வ்யாப்தம், காரணேசுவரர்களுடன் தியானித்து மேலேறிச் சென்று பரமாகாசமாகிய நதியிலிருந்து உண்டானதாய்க் கோடி சந்திரக் குளிர்ச்சி, பேரொளி, பிரணவக் கர்ணிகை, பஞ்சாட்சர விந்து, பரமானந்தத் தேன், அமைந்ததும் ஆயிரம் இதழ்களுடன் சித்சத்தி ரூபமாயிருக்கும் தாமரை மலரின் நடுவில் இருப்பவராய்ப் பேரானந்தப் பெருங்கடலாயிருக்கும் பரமசிவனைத் தியானிக்க வேண்டும்.

ஆவாகனம் என்பது சிவபெருமானைச் சதாசிவ தேகத்தில் சேர்ப்பதாகும், அவர் கொள்ளும் வடிவம் ஞானமயமானது. அது வித்யாதேகம் எனப்படும். எங்கும் நிறைந்திருக்கிற சிவபெருமானுக்கு ஆவாகனம் எதற்கு ? என்றால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

எல்லாவற்றையும் கடந்திருத்தல், எல்லாவற்றிலும் கலந்திருத்தல் என்னும் இரண்டு நிலைகள் அவருக்கு உளவாதலின் கடந்த நிலையிலிருந்து வந்து கலந்த நிலையிலேயே இருக்க வேண்டுதல் ஆவாகனம் எனப்பட்டு அது இன்றியமையாததாகிறது. விறகில் அடங்கிருக்கும் நெருப்பு கடைதலினுல் வெளிப்படுதல் போல எங்கும் நிறைந்துள்ள சிவபெருமான் பாவனு ரூபமான கிரியையால் சிவலிங்கத் திருமேனியில் வெளிப்பட்டு அருள்புரிவார். சிவப்பிரகாசமாகிய திருவருளினுல் சிவ பரிபூரணத்தை அறிந்து அதில் அழுந்துவதே ஆவாகனத்தின் குறிப்பாகும்.

ஸ்தாபனம் என்பது அடியேனுக்கு அருள் செய்யும் பொருட்டு இச்சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளியிருத்தல் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் பாவனையை உடையது. திருவருளால் சிவத்தை அறிந்து அதில் அழுந்திய உயிர் அதிலேயே நிலை பேறுறுதல் ஸ்தாபனமாகும்.

சந்நிதானம் என்பது சிவபெருமானைத் தனக்கு எதிர்முகமாக்கிக்கொள்ளுவது. இது உயிரறிவு சிவபரிபூரணத்திலும், சிவபரிபூரணம் உயிரறிவிலும் பிரிப்பின்றி ஆண்டானடிமைத் திறத்துடன் நிற்பதைக் குறிப்பதாகும்.

சந்நிரோதனம் என்பது இறைவனைச் சிக்கெனப் பிடித்துக்கொள்ளுவது. இது உயிரறிவு ஒருபோதும் நீங்காமல் சிவத்தில் நிலைநிற்றலைக் குறிப்பதாகும். அசுத்த சத்திகள் வராமலிருக்கத் திக்பந்தனம் அவகுண்டனமும், சுத்த சத்திகள் நிலைபெற்றிருக்க அமிர்தீகரணமும் சிவலிங்கத் திருமேனியில் செய்யப் பெறுகின்றன.

பாத்திய ஆசமன அர்ககியம் முதலியன

பாத்தியம் என்பது திருவடிகளை விளக்கும் நீர். ஆசமனம் என்பது பருகக் கொடுக்கும் நீர். அர்க்கியம் என்பது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சிரசில் தெளிக்கும் நீர். திருவடிகள் இரண்டுக்கும் இரண்டு முறை பாத்தியமும், சிவபெருமான் திருமுகங்கள் ஐந்தாதலின் ஐந்தென்னும் எண்ணிக்கையில் ஆசமன அர்க்கியங்களும் கொடுக்க வேண்டும். சிவபெருமானுக்குக் கொடுக்கும் பாத்தியஆசமன அர்க்கியங்கள் ஆன்மசுத்தியை வழங்குவனவாகும்.

பஞ்சகவ்ய சேகரம்

பஞ்ச கவ்யம் என்னும் சொல் ப-ச-க-வ்யம் எனப் பிரிந்து, ப என்பது பாவ நீக்கத்தையும் ச என்பது ஆன்ம சுத்தியையும், க என்பது பிறவி நீக்கத்தையும். வ்யம் என்பது முத்திப்பேற்றையும் குறித்துக் கொண்டிருக்கின்றன. ''பசுவினிடத்திலுள்ள ஐந்து'' என்பது பஞ்ச கவ்யத்தின் பொதுப் பொருள். மலங்களை ஒழித்து ஆன்மாவைப் பரிசுத்தனுக்கிச் சிவத்தில் சேர்ப்பது'' என்பது அதன் சிறப்புப் பொருள். பஞ்ச கவ்ய சேகரமில்லாமல் செய்யும் கிரியைகளில் தெய்வங்கள் சாந்நித்யமாவதில்லை.

சிவ லோகத்தில் சிவ சந்நிதானத்தில் இடப தேவரின் அருகில் இருக்கும் கபிலை நிறமுள்ள நந்தை, கருமை நிறமுள்ள பத்திரை, புகை நிறமுள்ள சுசீலை, வெண்மை நிறமுள்ள சுரபி, செம்மை நிறமுள்ள சுமனை, என்னும் பசுக்களை ஆன்ம உய்தியின் பொருட்டுப் பூவுலகத்தில் தோன்றும்படி சிவபெருமான் கட்டளையிட்டருளினுர். அவைகளிலிருந்து பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பொருள்கள் தோன்றின. சுக்கிரனை அதிபனுகக் கொண்ட பால் பகை நீக்கத்தையும், சந்திரனை அதிபனுகக் கொண்ட தயிர் புத்திரப் பேற்றையும், உருத்திரனை அதிபனுகக் கொண்ட நெய் மோக்ஷத்தையும், கங்கையை அதிதேவதையாகக் கொண்ட கோசலம் செல்வத்தையும், சூரியனை அதிபனுகக் கொண்ட கோமயம் நோய் நீக்கத்தையும் தருவன

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வாம். கோமயத்திலிருந்து இச்சா ஞானக்கிரியா சக்திகளின் வடிவமான மூன்று இதழ்களையுடைய வில்வம் தோன்றிச் சிவபூசைக்கு இன்றியமையாததாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அபிஷேகம்

மந்திரப் பூர்வமாக வடித்தெடுத்த தண்ணீர் கங்கா ஜலத்துக்கு ஒப்பானதாகையால் தண்ணீரை வடித்தெடுத்து அதில் வாசனைத் திரவியங்களையும் மலர்களையும் சேர்த்து திருவருளாகிய சிவஞானமே அந்த நீரெனப் பாவித்து அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகம் மலசுத்தியை வழங்குவதோடு திருவருட் பெருக்கையும் சேர்க்கும்.

பூசை வேளையில் அடிக்கும் மணியில் தேவர்கள் வசிப்பதால் மணியை நாபித்தானத்திற்கு மேல் பிடித்துக் கொள்ள வேண்டும். மணியொலியைக்கேட்டு அசுரர் முதலிய தீயோர் அகலுவர் தேவர் முதலிய நல்லோர் மகிழ்வர்.

எள்ளைச் சுத்தம் செய்து ஆட்டிய நல்லெண்ணெயே அபிஷேகத்திற்குரியது. படிக லிங்கத்திற்கு எண்ணெய் அபிஷேகம் உரியதன்று. பசு நெய் அபிஷேகம் செய்யலாம். படிக லிங்கத்திலும், உலோகஜ லிங்கங்களிலும் நல்லெண்ணையை கூர்ச்சத்தால் புரோக்ஷிக்கலாம். ம்ருத்யு லிங்கத்திற்கும் சித்ர லிங்கத்திற்கும் கண்ணுடியில் அபிஷேகம் செய்ய வேண்டும்.

விஷ்ணுவை அதிபராகக் கொண்ட அரிசியா அபிஷேகம், தான்யாதிகளுக்குத் தலைவராதலையும், மலநீக்கத்தையும் செய்யும். சந்திரனை அதிபராகக் கொண்ட மஞ்சட்காப்பு சம்பத்தையும், அரச வசியத்தையும் உண்டாக்கும். இலக்குமியை அதிதேவதையாகக் கொண்ட நெல்லி முள்ளிக் காப்பு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

செல்வத்தையும், நோய் நீக்கத்தையும் தரும். விதிப்படிச் சேகரிக்கப்பட்ட பஞ்சகவ்ய அபிஷேகம் ஆன்ம சுத்தியை வழங்கும்.

ரசபஞ்சாமிர்தம், பலபஞ்சாமிர்தம் எனப் பஞ்சாமிர்தம் இரண்டு வகைப்படும். பால், தயிர், நெய், தேன், சர்க்கரை இளநீர்த் தண்ணீர், ஆகியவற்றைப் பஞ்சகவ்யம் பூசிப்பது போல் பூசித்து அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த ரசபஞ்சாமிர்தத்துடன் வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளையும் சேர்த்துக் கொள்ளுவது பலபஞ்சாமிர்தம் எனப்படும். பஞ்சாமிர்த அபிஷேகம் பஞ்ச பாதக நீக்கத்தை வழங்குவது ரசபஞ்சாமிர்தத்தில் முக்கனிகளுடன் தேங்காய்த் துருவல் கருப்பஞ்சாறு சேர்ப்பதும் உண்டு.

அபிஷேகத்தில் பால் வாழ்நாள் வளர்ச்சியையும், தயிர் சந்தான வளர்ச்சியையும் நெய் மோக்ஷத்தையும், தேன் இசை வண்மையையும், கருப்பஞ்சாறு சுகத்தையும், சர்க்கரை பகை நீக்கத்தையும், பழச் சாறுகள் எல்லா வெற்றிகளையும், இளநீர் நன்மகப் பேற்றையும், அன்னம் அபம்ருத்யு நீக்கத்தையும், விபூதி மல நீக்கத்தையும், சந்தனம், பன்னீர் சிவ சாயுச்சியத்தையும் வழங்கும். தேவதாருக் கட்டைச் சந்தனம் சிவலோக வாழ்வையும் வில்வக் கட்டை சந்தனம் ஐஸ்வர்யத்தையும், கொன்றைக் கட்டைச் சந்தனம் ஆயுள் வளர்ச்சியையும் தரும். ஏக தாரை, சஹஸ்ர தாரை சங்கம், ச்ருங்கங்களின் அபிஷேகங்கள் இம்மை, மறுமைப் பேறுகள் எல்லாவற்றையும் வழங்குவனவாம்.

யவம் நெல் பயறு வெண் கடுகு முதலிய தானியங்கள் சேர்ந்த பீஜோதகமும், நவரத்னங்கள் சேர்ந்த ரத்நோதகமும், தங்கம், வெள்ளி, தாமரம் சேர்ந்த லோகோதகமும் பச்சைக் கற்பூரம், குங்குமப் பூ, கஸ்தூரி, கோரோசனை, ஏலங்கிராம்பு, விளாமிச்சை சேர்ந்த கந்தோதகமும் சண்பகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முதலிய புஷ்பங்கள் சேர்ந்த புஷ்போதகமும் அபிஷேகத்திற் குரியன.

அபிஷேகத்தின் முடிவில் சிவலிங்கத்தைப் பயபக்தியுடன் திருவொற்றாடையால் மெதுவாக ஒற்றி ஈரத்தைத் துடைக்க வேண்டும்.

அலங்காரம் தூப தீபம்

சிவலிங்கத்தை, வஸ்திரம் முதலியவற்றால் அலங்கரிப்ப தால் தேக காந்தியும், அழகும் உண்டாகும். சிவபெரு மானுக்கு வெண்மை நிறமானதும், மிருதுவானதுமாகிய பட்டு வஸ்த்திரத்தைச் சாத்துபவர்கள் சிவலோகத்தை அடைவார்கள். இது திரோதான சத்தி நீங்குதல் என்னும் பாவனையில் செய்யப் பெறுவது, சுவாமிக்கு விபூதி சாத்து வதால் மலமாசுகள் நீங்கும். திருவருட் சத்திமயமாகிய சந்தனத்தை வாசனைப் பொருள்களுடன் சுவாமிக்குச் சாத்துபவர்கள் பிரபஞ்ச வைராக்யமுற்றுச் சிவ லோகத்தை அடைவார்கள். ஆன்மபோதம் நீங்கிச் சிவ போதம் பதியும்நிலையில் மனம், மொழி, மெய்களால் ஈட்டிய வினைகள் நீங்குவதற்குத் தத்துவத்திரயப்புஷ்பாஞ்சலி செய்யப் பெறுகின்றது.

அகிற்பொடி ஒரு பங்கு, குங்கிலியப் பொடி இரண்டு பங்கு, சந்தனப் பொடி மூன்று பங்குடன் பச்சைக் கற்பூரமும் தேனும் கூட்டிச் சேர்ப்பது உத்தம தூபப் பொடி. இது, சாத்வீகமானது. விலாமிச்சை வேர்ப் பொடி ஒரு பங்கு, குங்கிலியம் இரண்டு பங்கு, சந்தனப்பொடி மூன்று பங்குடன் நெய்யும், தேனும் கூட்டிச் சேர்ப்பது மத்திம தூபப் பொடி. இது இராஸதமானது. குங்கிலியமும் நெய்யும் கூட்டுவது அதம தூபப் பொடி. இது தாமஸமானது. தூபக் காலின் முகத்தில் அக்கினி தேவனும், தண்டத்தில் ஈசுவரனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பாதத்தில் பிரமனும் அதிபர்களாயிருப்பார்கள். கிரியாசத்தி, ரூபமாகிய தூபம் ஆணவ மலசத்தியாகிய அறியாமையை அகற்றும்.

கபிலைப் பசுவின் நெய்யால் நிரப்பப் பெற்றும், தாமரை அல்லது வெள்ளெருக்கில் இருபத்தொரு இழை கொண்ட கற்பூரப் பொடி சேர்த்த திரி இடப்பட்டும், நான்கு அங்குல உயரச் சுடர் எரிய அமைந்த தீபம் சாத்வீக உத்தம தீபம். மற்ற பசுக்களின் நெய்யால் நிரப்பப் பெற்றும். பதினாறு பருத்தி இழை கொண்ட திரி இடப் பெற்றும் மூன்றங்குல உயரச் சுடர் எரிய அமைந்த தீபம் இராசத மத்திம தீபம், நல்லெண்ணெயால் நிரப்பப் பெற்றும், பதினன்கு அல்லது ஏழு இழைகள் கொண்ட திரி இடப் பெற்றும், இரண்டங்குல உயரச்சுடர் எரிய அமைந்த தீபம் தாமத அதம தீபம். மரக் கொட்டைகளிலிருந்து எடுக்கப் பெற்ற நெய்யும், எருமை நெய்யும் கந்தைத் துணிகளும் தீபத்துக்கு விலக்கப்பட்டன வாகும். சித்சத்திக்கு இருப்பிடமாய் ஞான விளக்கமாயிருக்கும் தீபம் மெய்ந்நெறி ஞானத்தை வழங்குவது.

மனோன்மணி பூஜை

விந்து சத்தியின் அம்சமாக உமையும், அவரது அம்சமாக அம்பிகையும், அவரது அம்சமாகக் கணும்பிகையும், அவரது அம்சமாக ஈசுவரியும், அவரது அம்சமாக மனோன்மணியும் தோன்றி அருள் புரிவார்கள். பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் செய்து சத்திநிபாதத்தைக் கூட்டிச் சிவத்தோடு சேர்க்கின்றவர் சதாசிவ மூர்த்தியின் சத்தியாகிய மனோன்மணி சத்தியாவார்.

லயாங்க பூஜை

சிவபெருமானது திருமேனியிலுள்ள அங்கம், பிரத்யங்கம் சாங்கம், உபாங்கம், ஆகிய நான்கும் லயாங்கத்தில் பூசிக்கப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பெறுகின்றன.

ஆவரண பூஜை

சிவபெருமானது முதல் ஆவரணத்தில் பஞ்சப் பிரம தேவர்களும், அங்கத் தேவர்களும் உள்ளனர். பஞ்சப்பிரம தேவர்கள் வினைநீக்கத்தையும், அங்கதேவர்கள் ஷட்குண நிறைவையும் தருவார்கள். ஷட்குணங்கள் சர்வக்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுதந்திரதை, அலுப்தசத்தி, அநந்த சத்தி, என்பனவாம். இவற்றில் சர்வக்ஞதை என்பது எல்லா வற்றையும் ஒருங்கே அறியும் முற்றறிவு. திருப்தி என்பது அளவு கடந்த இன்பமாகிய வரம்பிலின்பம். அநாதி போதம் என்பது தனக்கு மேல் ஒருவர் இருந்து அவரால் நீக்கப் பெறுதல் இன்றி இயல்பாகவே பாசத்திலிருந்து நீங்குதல். சுதந்திரதை என்பது பிறர் வசப்படாமையாகிய தன்வசம், அலுப்த சத்தி என்பது நிறைந்த வல்லபமாகிய குறைவிலா ஆற்றல். அநந்த சத்தி என்பது, எல்லா உயிர்களுக்கும் அருளுகின்ற பேரருளுடைமை, இவை ஆறும் சிவபெருமா னுக்குரிய சுத்த குணங்கள்.

இரண்டாவது ஆவரணத்தில் அநந்தர் முதலான அஷ்ட வித்யேசுவரர்களும், மூன்றாவது ஆவரணத்தில் நந்திதேவர் முதலிய கண முதல்வர் எண்மரும், நான்காவது ஆவரணத் தில் இந்திரன் முதலிய எட்டுத் திக்குப்பாலகர்களும் கீழிடம் மேலிடங்களின் காப்பாளர்களாகிய பிரம விஷ்ணுக்களும் ஐந்தாவது ஆவரணத்தில் இவர்களது பத்து ஆயுதங்களும், பூசிக்கப்பெறுகின்றன.

நைவேத்யம் :

சிவதீட்சை பெற்றவர்களாய் ஸ்நானம் செய்து தோய்த் துலர்ந்த வஸ்திரம் தரித்து விபூதி ருத்ராட்ச தாரணத் துடன் விதிப்படி நித்திய அனுஷ்டானம் செய்பவர்களாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இருப்பவர்களே நைவேத்யத்திற்குரிய அன்னம், பக்ஷ்யம் முதலியவற்றைப் பாகம் செய்தற்குத் தகுதியானவர்கள், நிவேதன அன்னத்தில் நெய் சேர்க்கப்பெறல் வேண்டும். சிவபெருமானது ஐந்து திருமுகங்களிலும் தனித்தனியாகவோ அல்லது மற்ற நான்கு திருமுகங்களின் சேர்க்கை அமைந்த தத்புருஷ முகத்திலோ நிவேதனம் பண்ணலாம். சிவசாதாக்கியம் முதல் கர்த்திரு சாதாக்கியம் வரையுள்ள நான்கு சாதாக்கியங்களும் ஒன்றுகூடியிருப்பது கன்ம சாதாக்கியமாகிய தத்புருஷ முகத்திலாதலால் அந்த முகத்தில் பண்ணும நிவேதனம் மற்ற நான்கு முகங்களுக்கும் பொருந்தும், மன அமைதி உண்டாதற் பொருட்டு ஆன்ம போதத்தை இறைவனிடம் ஒப்புவிப்பது நைவேத்யத்தின் குறிப்பு.

தீபாராதனை

ஏக முக தீபம் சிவஞானத்தையும், ஐந்து கலைகளின் வடிவான ஐந்து அடுக்குகள், மூன்றுதத்துவங்களின் வடிவான மூன்று அடுக்குகள் கொண்ட புஷ்ப தீபம் ஆன்ம சுத்தியையும் நாக தீபம் நன்மகப் பேற்றையும், இடபதீபம் பசுவிருத்தியையும், சூலதீபம் வெற்றியையும், புருஷாமிருக தீபம் சகல சித்தியையும், சிம்ம தீபம் அரச வசீகரத்தையும், தேவேந்திர கஜதீபம் போகத்தையும், கூர்ம தீபம் வலிமையையும், லதா தீபம் அறிவு வளர்ச்சியையும், மகர தீபம் கண்ணொளியையும் நட்சத்திரதீபம் நோய் நீக்கத்தையும், ரத தீபம் செல்வாக்கையும் வழங்குவனவாம். கும்ப தீபமும் அதைச் சார்ந்த ஐந்து தீபங்களும் பாச நீக்கம் செய்பவை. கண்ணாடிக்குச் சிவமும் அதன் ஒளிக்குச் சத்தியும் அதிபர்கள். அவ்வாராதனம் சிவஞானத்தை நல்கும், குடைக்கு அதிபர் சூரியன், அவ்வாராதனம் ஆணை வலிமையை அளிக்கும். சாமரத்துக்கு அதிபர் வாயு, அவ்வாராதனம் மல நிவாரணஞ் செய்யும். கொடிக்கும் அதிபர்வாயுவே. அவ்வாராதனம் ஆயுள்வளர்ச்சி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

யைத் தரும். விசிறிக்கு அதிபர் சூரியன் இவ்வாராதனம் சுக போகத்தை வழங்கும்.

பவித்திர தானம்

உயிர்கள் செய்த நல்வினை, தீவினைகள் பயனைத் தரும் மூன்று வாயில்களின் வழியாக நிகழும், ஒன்று, அநுபவிக்கப் பெறும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாமலிருப்பது. இது ஆதி தைவிகம் எனப்படும். இரண்டு பிருதிவி முதலிய பஞ்சபூதங்களில் ஒன்றன் வழியாகவருவது. இது ஆதி பௌதிகம் எனப்படும். மூன்று, உயிர்கள் மூலமாக அமைவது, இது ஆதி ஆன்மிகம் எனப்படும். இங்ஙனம் வரும் மூவகை இன்னல்களையும் பவித்திர தானத்தால் தடுத்துக் கொள்ளலாம்.

ஆராத்ரிகம்

கற்பூரம் வெண்மை நிறமுடையதாய் நெருப்புப் பற்றிய போது, அந் நெருப்பின் வடிவத்தை அடைந்து பின்னர் ஒரு பற்றுமில்லாமல் முழுவதும் கரைந்து ஆகாயத்துடன் கலந்து, அதனுடன் இரண்டற்ற நிலையை அடையும். அது போல ஆன்மா வெண்மையான சாத்துவிக குணமுடையதாய் ஞானக்கினி பற்றியபோது பசுத்தன்மை நீங்கிச்சிவத்தன்மை பெற்றுத்தேகநீக்கத்தில் பற்றறுதியுற்றுச்சிவத்துடன் கலந்து அதனுடன் இரண்டற்றநிலையில்பேரானந்தப் பெருவாழ்வை பெறுதல் என்னுங் குறிப்பில் கற்பூர ஆராத்ரிகம் செய்யப் பெறுகிறது.

பவாதி நாம அர்ச்சனை

சிவபெருமானை அஷ்டமூர்த்தி தியானத்துடனும், மந்திர பூர்வமாக நியாசம் செய்யப்பட்ட அவரது திருநாமத் துடனும் அருச்சிப்பதால் போக மோக்ஷங்கள் சித்திக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஜெப சமர்ப்பணம்

ஆன்ம குணங்கள் அனைத்தும் நீங்கிச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெறும் பொருட்டுச் செய்யப்படுவது ஜெப சமர்ப்பணம். ஜெப மாலைக்குரிய ருத்ராட்சம் நெல்லிக்கனி அளவுடையது. உத்தமம் என்றும், இலந்தைப்பழ அளவு உடையது மத்திமம், என்றும், இவற்றிற் சிறியவை அதமம் என்றும் நூல்கள் கூறுகின்றன. ருத்ராட்சங்களில் முகமில்லா தவையும் ஒரு முகம், மூன்று முதல் பதினொரு முகம் வரை உள்ளவையும் ஜெபமாலைக்கு உரியன. மணிகளைத் தங்கம், வெள்ளி, தாமிரங்களினால் கட்டியோ அல்லது அவற்றாலாகிய கொடிகளில் வில்லைகள் சேர்த்து ஒரு மணியை மற்றொரு மணி தீண்டாமல் கோர்த்தோ முகத்துடன் முகமும், அடியுடன் அடியும் பொருந்த நூற்றி எட்டு, ஐம்பத்து நான்கு, இருபத்தேழு ஆகிய எண்ணிக்கைகள் ஒன்றில் மேரு எனப்படும் நாயகமணியுடன் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஜெபம்செய்யும் முறை வாசிகம் உபாஞ்சு, மானதம் என மூன்று வகைப்படும். வாசிகம் பிறர் காது கேட்க மந்திரங்களை உச்சரிப்பது உபாஞ்சு ஒலி வெளிப்படாது நாவசைவு மட்டும் பொருந்த உச்சரிப்பது, மானதம், நாவும் அசையாமல், மனதால் சிந்திப்பது. வாசிகத்தை விட உபாஞ்சும், உபாஞ்சைவிட மானதமும் ஒன்றுக்கொன்று நூறு மடங்குக்கு மேற்பட்ட பயனை வழங்கும். முத்தியில் விருப்பமுள்ளவர்கள் மேருவிலிருந்து தொடங்கி மணிகளை மேல் நோக்கில் செலுத்துவதும், உலக போகத்தில் விருப்பமுள்ளவர்கள் மேருவிலிருந்து தொடங்கி கீழ் நோக்கில்செலுத்துவதும் முறை. மணிகளைச் செலுத்தும் போது மேருவைக் கடக்காமல் மாலையை மறித்துத் திருப்பிக்கொள்ள வேண்டும். ஜெபமாலையை வாசிக ஜெபத்தில் வலதுகைச் சுட்டுவிரலிலும், உபாஞ்சு ஜெபத்தில் நடு விரலிலும், மானத ஜெபத்தில் மோதிர விரலிலும் தாங்கி மணிகளைச் செலுத்துதல் வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஸ்ரீ பஞ்சாட்சரம் அநாதியாயும் எல்லா மந்திரங்களுக்கும் மேலானதாயும சிவபெருமானுடைய திருமேனி—திருநாமங்களாயும் சிவம், சத்தி, ஆன்மா, திரோதான சத்தி, ஆணவ மலம் ஆகியவற்றைக் குறிப்பதாயும் உயிர்களின் ஆணவ மலத்தை நீக்கித் திரோதான சத்தியைக் கடந்து திருவருளில் திளைப்பித்துச் சிவத்தில் சேர்ப்பதாயும் இருப்பது.

குரு வித்யா பீட பூஜை

சிவபெருமான் மும்மலச் சேர்க்கையுடைய சகலவர்க்கத்தினராகிய மனிதர்களில் பக்குவர்களை அவர் போன்ற மனித வடிவங்கொண்ட ஆசாரியர்களை அதிட்டித்து நின்றே ஆட்கொள்ளுவார். ஊரும் பேரும் உருவுமில்லாத சிவபெருமான் நமக்காக ஊரும்பேரும்உருவுமுடையஆசாரியரை அதிட்டித்து நிற்பாராதலின் ஞானசாரியரைச் சிவமாகக் கண்டு பூசித்தல் வேண்டும்.

நாம் உய்திபெறுவதற்குரிய தவங்களாகிய சரியை கிரியை யோகங்களையும் அவற்றுலமையும் ஞானத்தையும் தெளிவுபடுத்துவனவாகிய சிவபெருமான் அருளிச்செய்த சிவாகமங்களும், அறிவாற் சிவமேயாகிய அருளாசிரியர்கள் அருளிச்செய்த திருமுறைகளும் பூசித்தற்குரியன.

பிரதக்ஷிண நமஸ்காரம

பிரதக்ஷிணம் என்பது பிர-த-க்ஷிணம் எனப் பிரிந்து கன்ம நீக்கம் — மல நீக்கம், திருவருட்பேறு என்னும் பொருளில் இருப்பது. நமஸ்காரம் என்பது உயிர் சிவத்துடன் சேர்ந்து இரண்டற இருக்கும் பாவனையில் அமைந்தது. ஆண்களுக்குரிய அஷ்டாங்க நமஸ்காரம் தலை, கை இரண்டு, காது இரண்டு, மோவாய், தோள் இரண்டு என்னும் எட்டு உறுப்புகளும் நிலத்தில் படியும்படி செய்வது. பெண்களுக்குரிய பஞ்சாங்க நமஸ்காரம் தலை, கைஇரண்டு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முழங்கால் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் படியும்படி செய்வது. இருவருக்குமுரிய திரயாங்க நமஸ்காரம் கைகளைத் தலையில் கூப்புவது.

இரண்டாங் காலமாதிய பூசை

காலை உச்சி மாலை இரவு ஆகிய நான்கு காலங்களிலும் ஆன்மார்த்த சிவபூசை செய்தல் வேண்டும். ஒவ்வொரு கால பூசையையும் விதிப்படி விரிவாகச் செய்ய இயலாத பொழுது காலைப் பூசையை மட்டும் விதிப்படி விரிவாகச் செய்து மற்ற மூன்று கால பூசைகளையும் ஆசன மூர்த்தி மூலம் பஞ்சப்பிரம மந்திரங்களால் ஒரு காலத்துக்கொரு முறையாக அஷ்ட புஷ்பம் சாத்தி நிறைவு செய்யலாம்.

அக்கினி காரியம்

அக்கினி காரியமென்பது சிவபெருமானைச் சிவாக்கினியில் வழிபடுவதாகும் குண்டத்தில் மந்திர பூர்வமாகச் சுத்திகளைச் செய்வது குண்ட சமஸ்காரம் எனப்படும். குண்டம் கலா சக்திகளின்மயமானதாதலால் அதில் நிவிர்த்தி முதலிய கலைகள் நியசிக்கப்பெறுகின்றன. குண்டத்தில் அமையும் சிவாக்கினியாகிய குழந்தையை வாகீசுவரி என்னும் பெயருடன் சிவசத்தியும், வாகிசுவரர் என்னும் பெயருடன் சிவ பெருமானும் பெற்றுத் தருவார்கள். சிவ வேள்வியின் அக்கினி மற்றையோரது வேள்விகளில் அமையும் பூதாக்கினி அன்று. பூதாக்னியுடன் ஆசாரியரது வைந்தவாக்கினியும், சிவாக்கினியும் மந்திரபூர்வமாகக் கூட்டப்பெற்றுச் சிவ வேள்வியில் பூசிக்கப்படும். குண்டத்தைப் போல ஸ்ருக் ஸ்ருவகளும் நெய்யும் விதிப்படி இவ்வேள்வியில் சுத்திசெய் யப்பெறும். சிவ வேள்வியில் செய்யபெறும் அர்ச்சனை ஹோமம் பூர்ணுகுதி முதலியன செந்தீவண்ணராகிய சிவ பெருமானது பேரருளை வழங்குவனவாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஆன்ம நிவேதனமும் கன்ம சமர்ப்பணமும்

உயிர்களுக்கு எப்போதும் சுதந்தரம் என்பது கிடையாது. அவைகள் எந்த வேளையிலும் சிவ வசப்பட்டே இருக்கும். இதைத் தெளிவாக உணர்ந்து செய்யும் செயல்களைச் சிவபெருமான் செய்வித்தாலன்றிச் செய்ய முடியாது என்பதால் சிவபூசைச் செயலையும் சிவபெருமானுக்கே ஆக்குவது ஆன்ம நிவேதனமும் கன்ம சமர்ப்பணமும் ஆகும்.

சிவ பூசைப் பூர்த்தி

பூசிக்கப்பெற்ற சிவபெருமானும் பரிவார தேவர்களும் பூசிக்குமுன் பூசகனது இருதயத்திலிருந்து மந்திரபூர்வமாகப் புறத்தே எழுந்தருளினர்களாதலின் மீண்டும் அவர்களை ஹ்ருதயத்தில் ஒடுக்கிக்கொள்வது, சிவபூசைப் பூர்த்தியாக நிகழும்.

சண்டேசுவர பூசை

சிவ பூசைப் பயன் சித்தித்தற் பொருட்டுச் செய்யப் பெறுவது சண்டேசுவர பூசை.

கபில பூசை

சிவபெருமான் உயிர்களிடத்து வைத்த பெருங்கருணையினால் உயிர்களின் உய்தி கருதி முதற்படைப்புக் காலத்திலேயே நிலவுலகிற்குச் செல்வமாகத் தந்தருளியது பசு. பசுவைப் பூசிப்பது இம்மை மறுமை நலங்களைப் பெறச் செய்யும்.

போசன விதி

போசனம் பண்ணும் பொழுது ஆசாரியர் கிழக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

முகமாகவும், நிருவாண தீட்சிதர் வடக்கு முகமாகவும், சமய விசேட தீட்சிதர்கள் மேற்கு முகமாகவும் இருத்தல் வேண்டும். தெற்கு நோக்கி இருத்தல் கூடாது. போசனம் முடிந்த பிறகு இல்லறத்தார் தாம்பூலமும், பிரமசாரி முதலியோர் ஏலங்கிராம்பும் புசித்தல் வேண்டும்.

பூசைக்குரிய பத்திர புஷ்பங்கள்

வெள்ளெருக்கு, அலரி, வில்வம், வெண்டாமரை, செந்தாமரை, கொக்கு மந்தாரை, ஊமத்தை, தும்பை, நாயுருவி, அத்தி, கொன்றை, சங்கு, கண்டங்கத்திரி, மிளகு, நொச்சி. நீலோற்பலம், செங்கழுநீர், புன்னை, மந்தாரம், நந்தியாவர்த்தம், மகிழ், மருதோன்றி, பலாக, பாதிரி, சண்பகம், மாதுளை, கடம்பு, நாகலிங்கி, மல்லிகை, முல்லை, பிச்சி, வெட்சி ஆகிய மலர்கள், பூசைக்குரியனவாம்.

வில்வம், துளசி, அறுகு, நாயுருவி, நந்தியாவர்த்தம் வன்னி, விஷ்ணு கிரந்தி, நாவல், இலந்தை, மா, புரசு, ஊமத்தை, தும்பை, நொச்சி, மகிழ், கொன்றை, பன்னீர், ஆகியவற்றின்பத்திரங்களைப்பூசைக்குவைத்துக்கொள்ளலாம்

ஆன்மார்த்த பூசைக்கு அவரவர் தோட்டங்களில் பயிர் செய்யப் பெற்றுக் கிடைக்கும் பத்திர புஷ்பங்கள் உத்தமமானவை. பிறர் தோட்டத்திலிருந்து கிடைப்பவையும், மற்றவர்களிடமிருந்து கேட்டு வாங்கியவையும் ஒன்றுக்கொன்று தாழ்ந்தனவாகும். திருக்கோயில் நந்தவனத்துப் பத்திர புஷபங்கள் ஆன்மார்த்த பூசைக்கு ஆகா. பூசைக்கு உரிய புஷ்பங்கள் கிடைக்காத போது நெற் பொரி, அட்சதை ஆகியவற்றைக் கொண்டு பூசை செய்யலாம்.

திருச்சிற்றம்பலம் !

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

சிவமயம்

ஸ்ரீ மீனுக்ஷி சொக்கலிங்கம் துணை

சொற்பொருள் விளக்கம்

பூசகர் இருப்பிடம்

அஸ்திர மயம் — மந்திரக் காவல் அமைந்த இடம்
தத்துவாதீதர் — தத்துவங்களைக் கடந்தவர்

குரு வணக்கம்

சகலவர்க்கத்து உயிர் — ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களும் கூடியது.

பிராணயாமம்

மூலாதாரம் — முதுகுத் தண்டின் அடியிடம்
சுவாதிட்டானம் — குறி
மணிபூரகம் — தொப்பூழ்
அநாகதம் — மார்பு
விசுத்தி — நாக்கின் அடி
ஆக்ஞை — புருவ நடு
பிரமரந்திரம்—தலை உச்சி
துவாத சாந்தம்—உச்சிக்கு மேல் பன்னிரண்டங்குல முடிவு.

சூரிய சகளீகரணம்

சகளீகரணம்—சுவாமி எழுந்தருளும் இடத்தை அமைத்துக் கொள்ளுதல்
கர நியாசம்—கைகளில் சுவாமியை எழுந்தருளுவித்தல்
சரம்—அசையும் பொருள்
அசரம்—அசையாப் பொருள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அஷ்டமூர்த்தங்கள்— மண், நீர், நெருப்பு, காற்று வெளி சூரியன், சந்திரன், ஆன்மா.

அங்க நியாசம் — உடம்பில் சுவாமியை எழுந்தருளுவித்தல்.

தரிசனார்க்கியம்

அஷ்டதள பத்மம்—எட்டு இதழ்த் தாமரை மலர்

சிவ சூரிய அர்க்கியம்

புரோக்ஷித்தல்—நீர் தெளித்தல்

அபிமந்திரணம்—மந்திர ஆற்றலை நிறுவுதல்

திக்பந்தனம்—திசைகளைக் கட்டுதல்

அவகுண்டனம்—மந்திர ஆற்றலைப் பாதுகாத்தல்.

ஆசன பூஜை

கர்ணிகை—பொகுட்டு (தாமரைப்பூவின் நடுவிலிருப்பது)

சர்வாபரண பூஷிதம்—எல்லா அணிகலன்களும் அணிந்திருப்பது.

சிவசூரிய பூஜை

நியாசம் — சிவசூரிய மூர்த்தியைத் திவ்ய முத்திரையால் நிறுவுதல்.

ஆவாகனம்—வெளிப்பட்டு அருளவேண்டுதல்

ஸ்தாபனம்—நிலைநிற்கும்படி வேண்டுதல்

சந்நிதானம்—நேர்முகமாக்கிக் கொள்ளுதல்

சந்நிரோதனம்—சிக்கெனப் பிடித்துக் கொள்ளுதல்

ஏகத்வம்—ஒருமை

பாத்யம்—திருவடி விளக்கும் நீர்

ஆசமனம் – பருகும் நீர்

அர்க்கியம் – சிரசில் தெளிக்கும் நீர்

லயாங்கம்—சேர்ந்திருக்கும் உறுப்புக்கள்.

ஆத்ம சமர்ப்பணம்—உயிரை ஒப்புவித்தல்.

ஆராத்ரிகம்—கற்பூர தீபம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஆன்ம ஐக்கியம்—உயிரின் கலப்பு.
அகங்காரம்—யான் என்னும் செருக்கு.
மமகாரம்—எனதென்னும் செருக்கு.

தேஜச் சண்ட பூஜை

அணுக்கர்—நெருங்கியிருப்பவர்.
நிர்மால்யம்—சுவாமி நிவேதனத்தில் ஆறில் ஒரு கூறு.

சிவ சகளீகரணம்

ஞானதேகம்—சிவ சக்தி வடிவமானது.

சாமான்யார்க்கியம்

சப்தகோடி மகா மந்திரங்கள்—நம:, ஸ்வதா. ஸ்வாஹா, வஷட், வௌஷட், பட், ஹூம்.

நம: — நமஸ்கரித்தல்	இவை பொதுப் பொருள்கள்.
ஸ்வதா — கொடுத்தல்	
ஸ்வாஹா — அழைத்தல்	
வஷட் — விடுதல்	
வௌஷட் — அசைவில்லாமலிருத்தல்	
பட் — படுத்தல்	
ஹூம் — கட்டல்	

துவார பூஜை

கபாலம் — தலை ஓடு.
பரசு — மழு.
மந்திர திருஷ்டி — மந்திரம் ஓதிப் பார்த்தல்.
சந்திர சூடனம் — திருமுடியில் பிறைத்திங்களை அணிந்திருத்தல்.
கட்கம் — வாள்.
கேடயம் — தற்காப்புப் பலகை.
பாசம் — பாசக்கயிறு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வச்சிரம் — வேல், கலப்பை.

பூசா கிருகப் பிரவேசம்

சத்தி — வேலாயுதம்.
தண்டு — தண்டாயுதம்,
சிருக்கு — நெய்த்துடுப்பு.
வாஸ்து அதிபதி — பூமிக்குத் தலைவர்.

அபிஷேக ஜலம் சேகரித்தல்

தாடனம் — தட்டுதல்.
அப்யுட்சணம் — மூடுதல்.

பூதசுத்தி

பரம வ்யோம ரூபம் — உயர்ந்த பரவெளி வடிவம்.
குண்டலினி சத்தி — மூலாதார சத்தி.
ஆத்ம பீஜம் — உயிருக்குரிய வித்தெழுத்து.
புரியட்டக தேகம் — சுவை. ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளும் மனம் புத்தி அகங்காரமும் கூடியது.
நின்மலம் — மலமற்றது.
ஞானக்கிரியா சத்தி — அறிவு செயல்களின் ஆற்றல்
பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் — நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி.
கந்தம், ரசம், ரூபம், பரிசம், சப்தம் — நாற்றம், சுவை, ஒளி, ஊறு ஓசை.
வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் — வாய், கால், கை, குதம், குறி.
சுரோத்திரம், துவக்கு, சட்சு, ஜிஹ்வை, ஆக்ராணம் — செவி, தோல், கண், நாக்கு, மூக்கு.
பார்த்திவ பீஜம் — பிருதிவிக்குரிய வித்தெழுத்து.
காரணேசுவரர் — இயக்கும் கருத்தர்.
அதிதேவதை — தலைமைத் தெய்வம்.
வியாபகம் — நிறைவு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அப்பு பீஜம் — நீருக்குரிய வித்தெழுத்து.
வன்னி பீஜம்—நெருப்புக்குரிய வித்தெழுத்து.
வாயு பீஜம்—காற்றுக்குரிய ,,
ஆகாய பீஜம்—வெளிக்குரிய ,,
பூதாகாயம்—பஞ்சபூதங்களில் ஒன்ருன வெளி.
பரமாகாயம்—அனைத்தும் அடங்கும் பரவெளி.
பரிணமம்—மாற்று வடிவம்.
குடிலா சத்தி—சுத்த மாயா சத்தி.
அதிட்டானம்—தொழிற்பாட்டுக்காகத் தங்குமிடம்,
சிவ சாம்யம்—சிவனேடு ஒப்பு.

ஸ்தான சுத்தி

தாளத்திரயம்—மூன்று முறை கை தட்டுதல்.
அமிர்தி கரணம்—அமுதமயமாக்குதல்.
மாயா காரியங்கள்—மாயையிலிருந்து தோன்றுபவை.
சத்தி காரியங்கள்—திருவருட் செயல்கள்.

அந்தர்யாகம்

கேசரம்—பூந்தாது.
பீஜம்—வித்து.
மானசீகம்—மனத்தால் செய்வது.
அண்டம்—உலகம்.
பிண்டம்—உடம்பு.
நீராஞ்சனம்—கற்பூரங் காட்டுதல்.
பாச ஞானம்—உலகத்தை அறியும் அறிவு.
பசு ஞானம்—தன்னை அறியும் அறிவு.

அகத்து அக்கினி காரியம்

மேகலை—அடுக்கு.

சிவ ஹஸ்த பாவனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

திவ்ய திருஷ்டி—தூய்மையான பார்வை.

விசேடார்க்கியம்

உத்யாபனம்—ஒடுக்கம்.

ஆத்ம பூஜை

சிவோகம் பாவனை—தன்னைச் சிவமாகப் பாவிப்பது.

மந்திர சுத்தி

அண்ணம்—நாக்குக்கு மேலும் கீழும் உள்ளது.
குறில்—ஒரு மாத்திரை கொண்டது.
நெடில்—இரண்டு மாத்திரை கொண்டது.
அளபெடை—உரிய மாத்திரைகளின் இரண்டு மடங்கு கொண்டது.

லிங்க சுத்தி

பஞ்ச பாசம்—ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி.
ஆணவம்—அநாதியே உயிரைப் பற்றிய மூலமலம்.
கன்மம்—நல்வினை தீவினைக்கு மூலமானது.
மாயை—உடம்பு, உட்கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள் களைத் தோற்றுவிப்பது.
மாயேயம்—முப்பத்தாறு தத்துவங்களும், அவற்றின்விளைவு களும்.
திரோதாயி—உயிர்களைக் கன்ம நுகர்ச்சியில் ஈடுபடுத்துவது.

சிவாசன பூஜை

ஆதார சிலை—தாங்கும் பீடம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கோணதிசை—மூலைத்திக்கு
அதச் சதனம்—கீழ் விரிப்பு
உத்தரச் சதனம்—மேல் விரிப்பு
யோசனை—நூறு மைல் அளவு
மலபரி பாகம்—ஆணவ மலப் பக்குவம்
தீவிர தரம்—மிகுந்த பக்குவம்
தீவிரம்—பக்குவம்
மந்தம்—குறைந்த பக்குவம்
மந்த தரம்—மிகக் குறைந்த பக்குவம்
பிரேரணை—செய்விப்பது
அபர நாதம்—பின்னே தோன்றிய ஒலி
பர நாதம்—ஆதியில் தோன்றிய மேலான ஒலி

சிவமூர்த்தி பூஜை

நிர்மலர்—மலமற்றவர்
கட்வாங்கம்—யோக தண்டம், மழு.
சாமுத்ரிகா லட்சணம்—தேகத்தின் முழு அழகு
நிஷ்களம்—அருவம்
சகள நிஷ்களம்—அருவுருவம்
சகளம்—உருவம்
அநுக்கிரக கர்த்தா—அருளை வழங்குபவர்
பெத்தம்—போகம்
முத்தி—மோட்சம்
வியாபித்தல்—உள்ளும் புறமுமாக நிறைதல்
பஞ்ச கிருத்திய சங்கற்பம்—ஐந்தொழிற்குறிப்பு
ஞானிகள்—சிவயோக சித்தி பெற்றோர்
யோகிகள்—யோக சாதகர்
கிரியையாளர்—வழிபாடு—பூசை புரிபவர்
தியான கோசரம்—தியானத்துக்கு வருவது
ஆகிருதி—வடிவம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தண்ட பங்கி நியாசம்

பங்கி—பகுப்பு
தண்டாகாரம்—தண்ட வடிவம்

முண்ட பங்கி நியாசம்

மூர்த்தா—சிரசு
வக்த்ரம்—முகம்
தனு—உடம்பு
கரணம்—அந்தக் கரணங்கள் (மனம், புத்தி, அகங்காரம் சித்தம்.)
புவனம்—உலகம்
போகம்—அநுபவப் பொருள்
குஹ்யம்—ரகசியம்
மூர்த்தி—வடிவம்

வக்த்ர பங்கி நியாசம்

வைநசுவராக்கினி—வைதிக வேள்விக்குரிய நெருப்பு

கலா பங்கி நியாசம்

ஜோதி ஸ்தம்பம்—ஒளி பொருந்திய தூண்
துவசம்—கொடி

அத்துவ நியாசம்

மாதிருகா சத்தி—அகில லோக மாதா
வர்ணம்—எழுத்து
ஞானவதி—கிரியைகளை அகத்தில் செய்வது
கிரியாவதி—கிரியைகளைப் புறத்தில் செய்வது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அந்தர் - பகிர் - மாதிருகா நியாசங்கள்

நிமித்த காரணர்—செய்யும் கருத்தா
அக்ஷர விந்து—அழிவில்லாத புள்ளி
கலைக் கொம்பு—மான் கொம்பு
முதற் காரணம்—காரியத்துக்கு மூலமாயிருப்பது
துணைக் காரணம்—காரியத்துக்குக் கருவியாய் உதவுவது

சதாசிவ மூர்த்தி தியானம்

நாக யக்ஞோப வீதம்—பாம்புப் பூணூல்
தடத்தம்—பொது நிலை
அங்கம்—பிரதான அவயவம்
பிரத்யங்கம்—மற்ற அவயவங்கள்
சாங்கம்—அவயவங்களுடன் சேர்ந்திருப்பது
உபாங்கம்—அவயவங்களுக்கு உதவியாயிருப்பது
சுத்தான்மா—பேரின்பம் நுகரும் உயிர்
சர்வக்ஞத்துவம்—முற்றுணர்வு
தத்துவாதீதம்—தத்துவங்களைக் கடந்து நிற்பது.

ஆவாகனம் முதலியன

அகளம்—பற்றுக்கோடின்மை.
சகளம்—பற்றுக்கோடுண்மை.
பிராசாத சத்தி—ஞான சத்தி
நாளம்—தண்டு
வியாப்தம்—கலந்திருத்தல்

பஞ்ச கவ்ய சேகரம்

கோஷ்டம்—அறை
குசோதகம்—தர்ப்பை நுனி படிந்த நீர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அபிஷேகம்

கூர்ச்சம்—தர்ப்பையால் செய்யப்படுவது
பஞ்ச பாதகம்—கொலே, களவு, கள், காமம், பொய்.
அபமிருத்யு—காலமல்லாத காலத்தில் நேரும் உயிர்ப்பிரிவு
தேக காந்தி—உடம்பின் கவர்ச்சித் தோற்றம்
பிரபஞ்ச வைராக்கியம்—உலகப் பற்று நீக்கம்
போதம்—தேர்ந்த தெளிவு
தத்துவத்திரயம்—ஆன்ம வித்தியா சிவதத்துவங்கள்

மனோன்மணி பூஜை

அம்சம்—கூறு
மல பரிபாகம்--ஆணவ மலம் நீங்கும் பக்குவம்
சத்திநிபாதம்—திருவருட் சத்தி பதிதல்

ஆவரண பூஜை

சர்ப்ப கங்கணம்--சர்ப்பவளேயல்

தூப தீப நைவேத்யம்

பானீயம்—பருகும் நீர்
முகவாசம்—தாம்பூலக் குளிகை

தீபாராதனே

லதா தீபம்—கொடி வடிவான தீபம்

அக்கினி காரியம்

ரக்ஷை—காப்பு
வஜ்ரீகரணம்—வலுப்படுத்துதல்
சதுஷ்பதம்—நான்கு பிரிவுகள்
கிரகித்தல்—வாங்குதல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஜாடராக்கினி—உதர நெருப்பு
பைந்தவாக்கினி—உயிருக்கு ஒளிதரும் நெருப்பு
சௌசம்—சுத்தி
கர்ப்பாதானம்—சூல் கொடுத்தல்
பும்சவனம்
சீமந்தம் } சூல் கொண்டவளுக்குச் செய்யும் சடங்குகள்
ஜாத கன்மம்—ஜாதகம் எழுதுதல்
சூதகம்—தீட்டு
ஏகீகரணம்—ஒன்றுபடுத்துதல்
தீபனம்—ஒளி
தசாம்சம்—பத்தில் ஒரு பங்கு
அந்தர் பலி—உள்ளே இடும்பலி
பகிர் பலி—புறத்தே இடும் பலி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

சிவமயம்

ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை

முத்திரை விளக்கம்

1. சிகா முத்திரை

இரண்டு கைகளின் நடுவிரல்கள் மூன்றையும் உள்ளங் கைகளில் பொருந்த மடக்கிக் கொண்டு கட்டை விரல்களை யும் சுண்டு விரல்களையும் நீட்டிப் பிடிப்பது.

2. அங்கநியாச மகா முத்திரை

விரல்களை நீட்டிய இரண்டு கைகளினாலும் பாதம் முதல் சிரசு வரை தடவுவது போல் காட்டுவது.

3. பதாகை

ஐந்து விரல்களையும் (வலதுகை) சேர்த்து நீட்டிப் பிடிப்பது.

கையைக் கவிழ்த்துப் பிடிப்பது கவிழ்ந்த பதாகை நிமிர்த்திப் பிடிப்பது நிமிர்ந்த பதாகை.

4. தேனு முத்திரை

இரண்டு கைகளையும் சேர்த்து விரல்களைக் கோர்த்து வலதுகைச் சுண்டுவிரல் நுனியும் மோதிரவிரல் நுனியும் முறையே இடதுகை மோதிரவிரல் சுண்டுவிரல் நுனிகளையும் வலதுகை நடுவிரல் நுனியும் சுட்டுவிரல் நுனியும் முறையே இடதுகைச் சுட்டுவிரல் நடுவிரல் நுனிகளையும் பொருந்தப் பசுவின் நான்கு மடிக்காம்பு போலப் பிடித்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

5. அங்கநியாச நாராசம்

இரண்டு கைச் சுட்டுவிரல்களையும் நீட்டி மற்ற விரல்களை முஷ்டியாக மடக்கிப் பிடிப்பது.

6. விக்கின நீக்க நாராசம்

வலது கையை இடது விலாப் பக்கத்திலும் இடது கையை வலது விலாப் பக்கத்திலும் வைத்துக்கொண்டு கட்டைவிரல் சுட்டுவிரல்களால் பூவைச் சிதறுவது.

7. விஸ்புரம்

இரண்டு கைகளிலும் விரல்களைச் சேர்த்து சுண்டுவிரல் முதலாக நான்கு விரல்களின் நுனிகளையும் கட்டை விரல்களால் தொடுவது.

8. ஆவாகனம்

இரண்டு கைகளையும் விரித்து நிமிர்த்துச் சேர்த்துக் காட்டுவது.

9. ஸ்தாபனம்

இரண்டு கைகளையும் விரித்துக் கவிழ்த்துச் சேர்த்துக் காட்டுவது.

10. சன்னிதானம்

இரண்டு கைகளையும் முஷ்டியாகச் சேர்த்துப் பிடித்துப் பெருவிரல்கள் இரண்டும் மேல் நோக்கி இருக்கப் பிடிப்பது.

11. சந்நிரோதனம்

சன்னிதான முத்திரையில் மேல் நோக்கிப் பிடித்த கட்டை விரல்களை மடக்கி முஷ்டிக்குள் அடங்கப் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

12. பிம்பம்

இரண்டு கைகளையும் சேர்த்துப் பக்கவாட்டில் நீட்டி நடு விரல்களின் நுனிகள் ஒன்றையொன்று தொடவும். கட்டை விரல்கள் உள்ளங்கைகளைத் தொடவும் பிடிப்பது.

13 சூரிய நியாச மகா முத்திரை

இரண்டு கைகளையும் கூப்பி மோதிர விரல்களின் அடியில் கட்டை விரல்களின் நுனிகள் பொருந்தப் பிடிப்பது.

14. பத்மம்

இரண்டு கைகளையும் விரித்து நிமிர்த்திப் பெருவிரல்களை உள்ளங்கைகளில் மடக்கி மற்ற விரல்களை ஒன்றுடன் ஒன்று சேராமல் தாமரைப்பூவின் எட்டு இதழ்கள் போல வளைத்துப் பிடிப்பது.

15. கோவிடாணம்

வலதுகைச் சுண்டுவிரல் மோதிர விரல்களை மடக்கிப் பெருவிரலால் பிடித்து நடுவிரல் சுட்டுவிரல்களை நீட்டிப் பிடிப்பது.

16 திராசினி

வலதுகைச் சுட்டு விரலை நீட்டி மற்ற விரல்களை முஷ்டியாக மடக்கிப் பிடிப்பது.

17. மிருகி

வலக்கைக் கட்டை விரலின் நுனியில் மோதிரவிரல் நடு விரல்களின் நுனிகள் பொருந்த மற்ற விரல்களை நீட்டிப் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

18. நமஸ்காரம்

இரண்டு கைகளையும் சேர்த்துக் கூப்பி இடக்கைப் பெருவிரல்மேல் வலக்கைப் பெருவிரல் பொருந்தப் பிடிப்பது.

19. உத்பவம்

வலதுகைச் சுட்டுவிரலை மடக்கிச் சுண்டுவிரலை நீட்டி மற்ற விரல்களைச் சிறிது வளைத்துப் பிடிப்பது.

20. மந்திரங்களை எழுப்பும் நாராசம்

வலதுகைச் சுண்டுவிரல் மோதிரவிரல் நடுவிரல்களை நீட்டிக் கட்டைவிரல் சுட்டுவிரல்களால் புஷ்பத்தைத் தெறிப்பது.

21. சாணம்

இடது கையை விரித்து நிமிர்த்தி வலதுகை நடுவிரல் மூன்றினாலும் தொடுதல்.

22. பிரசன்னம்

இரண்டு கைகளையும் கூப்பி. மோதிரவிரல்களின் அடியில் கட்டைவிரல்களின் நுனிகள் பொருந்தப் பிடிப்பது.

23. அதிட்டானம்

இரண்டு கைகளையும் சேர்த்து நிமிர்த்தி கட்டை விரல்களால் உள்ளங்கைகளில் தொடுதல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

24. உஷ்ணீகம்

வலதுகைக் கட்டைவிரல் நுனியைச் சுட்டுவிரல் நுனியால் தொடுவது.

25. சின்முத்திரை

வலதுகைச் சுட்டுவிரல் நுனியைக் கட்டை விரலால் தொடுவது.

26. மோகம்

வலதுகை நடுவிரல் நுனியைக் கட்டை விரல் நுனியால் தொடுவது.

27 திவ்யம்

வலதுகை மோதிரவிரல் நுனியைக் கட்டை விரலால் தொடுவது.

28. ஆக்ரம்

வலதுகைச் சுண்டுவிரல் நுனியைக் கட்டை விரலால் தொடுவது.

29. கடா முத்திரை

இரண்டு கைகளையும் சேர்த்து நிமிர்த்தி நடுவிரல்கள் மூன்றினுலும் உள்ளங்கைகளில் தொடுவது.

30. ஆன்மலீகம்

இரண்டு கைகளின் நடுவிரல் மூன்றையும் சேர்த்து மற்ற விரல்களை நீக்கி ஒன்றையொன்று சுற்றுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

31 ஆக்ர கண்டம்

வலதுகைச் சுண்டுவிரல் கட்டைவிரல் நுனியில் பொருந்த நடுவிரல்கள் மூன்றையும் நீட்டி உயர்ந்திருக்கும் படி பிடிப்பது.

32. சங்கம்

வலதுகைக் கட்டைவிரல் நுனி சுட்டுவிரல் அடியில் பொருந்த மற்ற நான்கு விரல்களையும் நீட்டிப் பிடிப்பது,

33 உஷமுத்திரை

வலதுகை மோதிர விரலால் இடது உள்ளங்கையையும் இடதுகை மோதிர விரலால் வலது உள்ளங் கையையும் தொடுவது,

34. சோடிகா

வலதுகைக் கட்டை விரலின் நடுவில் சுட்டு விரலால் தெறிப்பது.

35. தீட்சணம்

வலதுகைச் சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிப் பிடிப்பது.

36. சங்காரம்

வலக்கைக் கட்டைவிரலை உயர்த்தி மற்ற விரல்களைச் சேர்த்து முஷ்டியாகப் பிடிப்பது.

37. காள கர்ணி

இரண்டு கைகளையும் பக்கவாட்டில் சேர்த்து சுண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

விரல் முதல் நான்கு விரல்களையும் சிறிது வளைத்து கட்டை விரல்களால் மற்ற விரல் அடிகளில் தடவுவது.

38. லிங்கம்

இடதுகைக் கட்டைவிரலை நிமிர்த்தி அதை வலதுகை விரல்களால் வளைத்துப் பிடித்து மற்ற இடதுகை விரல்களை நீட்டுவது.

39. பஞ்சமுகி

இரண்டுகை விரல்களையும் நிமிர்த்தி எதிர்முகமாகச் செருகி சுட்டுவிரல்களின் நுனிகளால் நடுவிரல்களின் நுனிகளையும் கட்டைவிரல்களின் நுனிகளால் சுண்டு விரல்களின் நுனிகளையும் தொட்டு மோதிர விரல்களை நடுவில் நீட்டிப் பிடிப்பது,

40. மனோரதம்

இரண்டு கைகளையும் சேர்த்துச் சுட்டுவிரல்களை நீட்டி மற்ற விரல்களைக் கோத்து மடக்கிப் பிடிப்பது.

41. திரிசூலம்

இரண்டு கைவிரல்களையும் சேர்த்துச் செருகிக் கட்டை விரல் நடுவிரல் சுண்டுவிரல்களை நீட்டிப் பிடிப்பது.

42. மகரம்

இரண்டு கைகளையும் நிமிர்த்தி விரித்து வலதுகைச் சுட்டுவிரலால் இடதுகை மோதிர விரலையும், இடதுகைச் சுட்டு விரலால் வலதுகை மோதிரவிரலையும் தாங்கி கட்டை விரல்களையும் நடுவிரல்களையும் நீட்டிப் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

43. சிருக்கு

இரண்டு கைகளையும் நிமிர்த்தி விரித்து வலதுகைச் சுட்டு விரலால் இடதுகை மோதிர விரலையும் இடதுகைச் சுட்டு விரலால் வலதுகை மோதிர விரலையும் தாங்கிச் சுண்டுவிரல் களை மேலே கொண்டு வந்து கட்டை விரல்களைத் தாங்கும் படி வைப்பது.

44. நிரீட்சணம்

வலதுகைக் கட்டை விரல் மோதிரவிரல் நுனிகளைச் சேர்த்து மற்ற விரல்களை நீட்டிப் பிடிப்பது.

45 புரோட்சணம்

வலதுகை ஐந்து விரல்களையும் கவிழ்த்து நீட்டுவது.

46 தாடனம்

வலது கைச் சுட்டுவிரலால் தட்டுவது.

47 அப்யுட்சணம்

வலதுகை ஐந்து விரல்களையும் கவிழ்த்து நீட்டுவது.

48 தாளத்திரயம்

இடது கையில் வலதுகைச் சுட்டுவிரல் நடுவிரல்களால் மூன்று முறை தட்டுவது.

1. சம்மாரம்

வலக்கை விரல்களைச் சேர்த்துப்பக்கவாட்டில் நீட்டுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

2. சங்கம்

இடது கைக் கட்டை விரலை உயர்த்தி வலதுகை விரல்களால் பிடித்து இடது கையின் மற்ற நான்கு விரல்களையும் உயர்த்துவது.

3 கோகோட்டம்

வலது கைச் சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள்ளங்கையில் பொருந்த வைப்பது.

4 அதோமுகி

வலது கையைக் கவிழ்த்துச் சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிப் பிடிப்பது.

5. சோத்திகம்

வலதுகை ஐந்து விரல்களையும் கவிழ்த்து நீட்டுவது.

6. அதிதீட்சணம்

சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கித் தலை கீழாகப் பிடிப்பது.

7. கோமுகம்

நடுவிரல்கள் மூன்றையும் சிறிது வளைத்து மற்ற விரல்களை நீட்டுவது,

8, கோகர்ணம்

வலது கையை நிமிர்த்தி கட்டை விரலை நடுவிரலடியில் வைத்து மற்ற விரல்களை நீட்டுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

9 நிரோதனம்

வலது கைச் சுண்டுவிரலை நீட்டி மற்ற விரல்களின் நுனிகள் பொருந்தச் சேர்ப்பது.

10. கும்பம்

வலது கையை முஷ்டியாகப் பிடித்து இடது உள்ளங் கையில் வைத்து அதை இட-துகை விரல்களால் பிடிப்பது.

11 பிரசன்னம்

இரண்டு கைகளையும் விரித்துச் சேர்த்துக் கூப்பி மோதிர விரல்களின் அடியில் கட்டை விரல்களின் நுனிகள் பொருந் தப் பிடிப்பது,

12. வராகம்

வலதுகைச் சுண்டுவிரலையும் சுட்டுவிரலையும் நீட்டி நடு விரலை மடக்கிக் கட்டைவிரல் மோதிரவிரல்களால் மூக்கைப் பிடித்தல்.

13. அங்குசம்

வலக்கையை முஷ்டியாகப் பிடித்துச் சுட்டுவிரலை மட்டும் சிறிது வளைத்துப் பிடிப்பது.

14. திருமுத்திரை

பெருவிரல்கள் ஒழிந்த மற்ற விரல்களால் நீரைவிடுவது.

15. ஊர்த்துவமுகி

சுட்டுவிரல் ஒழிந்த மற்ற விரல்களை மடக்கிச் சுட்டு விரலை நீட்டி அதன் வழியாக நீரை விடுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

16. சபா அல்லது சடா

இரு கைகளையும் இணைத்துக் கட்டை விரல்களை மற்ற விரல்களால் பிடிப்பது.

17 பண

இரு கைகளையும் சேர்த்துக் கட்டை விரல்களை மற்ற விரல்களின் அடியில் மடக்கி விரல்களைப் பாம்பின் படம் போல வளைத்துப் பிடிப்பது.

18. துருவம்

வலக்கைச் சுண்டுவிரல் நுனியால் நீரை விடுவது.

19. கண்டி

வலக்கைக் கட்டை விரல் நுனியால் நீரை விடுவது.

20. செகண்டி

வலக்கைக் கட்டைவிரல் சுட்டுவிரல்களுக்கு இடையில் நீரை விடுவது.

21. காளகர்ணி

இரு கைகளையும் பக்கவாட்டில் சேர்த்து நடுவிரல்கள் சுட்டு விரல்களின் அடியில் பொருந்த கட்டை விரல்கள் நீண்டு மற்ற விரல்கள் சிறிது வளைந்திருக்கப் பிடிப்பது.

22. தியாகம்

வலக்கை விரல்களை நுனிகள் பொருந்தக் குவிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

23. பரிகை

இடது சுண்டுவிரல் நாபியைத் தொட வலது கட்டை விரல் மூக்கைத் தொட இடது கட்டை விரலில் வலது சுண்டுவிரல் பொருந்தப் பிடிப்பது.

24 பரிகம்

வலது கையை முஷ்டியாகப் பிடித்துச் சுட்டுவிரலை நீட்டி வலமாகச் சுற்றுவது.

25. சண்முகி

கட்டை விரல்களால் காதுகளையும், சுட்டுவிரல்களால் கண்களையும் மோதிர விரல்களால் மூக்குத் துவாரங்களையும் மறைப்பது.

26. தர்ப்பணம்

இடது கையை நிமிர்த்தி, அதன் மேல் வலக் கையைக் கவிழ்த்து, சுட்டு விரலைச் சுண்டுவிரல் மேலும் சுண்டு விரலைச் சுட்டுவிரல் மேலும் வைத்து நடு விரல்கள் இரண்டையும் உள்ளங் கைகளில் நீட்டுவது.

27. மகரம்

இடது கையையும் வலது கையையும் ஒன்றன் மேல் ஒன்றாகக் கவிழ்த்துக் கட்டை விரல்களைப் பக்கவாட்டில் நீட்டி அசைப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

சிவமயம்

ஸ்ரீ மீனாட்சி சொக்கலிங்கம் துணை

முத்திரை விளக்கப் பாடல்கள்

1. சிகாமுத்திரை

மூன்று நடுவிரல் முட்டியா மடக்கி
மற்றிரு விரலையும் வயங்குற நீட்டி
நெற்றிமேல் புடைப்பது நீள்சிகா முத்திரை

2. அங்க நியாச மகாமுத்திரை

நெடியகை இணைகளை நிமிர்த்தெதிர் முகமுற
அடிமுதல் முடியள வமைத்தல்மா முத்திரை.

3. பதாகை

ஓரித் திடுகரம் உறநிமிர்த் தைவிரல்
பாரித் திணைப்பது பதாகைமுத் திரையே.

4. தேனுமுத்திரை

இருகை கூட்டி இடையிடை கோத்திடும்
விரல்களில் தர்ச்சனி விரல்மத் திமைகளை
ஆர்த்திடக் கனிட்டை அனாமிகை களினால்
சேர்த்துறப் பிடிப்பது தேனுமுத் திரையே.

5. அங்க நியாச நாராசம்

இருகை களையும் இயலுற முட்டியாய்ச்
சுட்டு விரல்கள் ஒட்டிநீண் டிருக்க
நிறுத்துவ தங்க நியாச நாராசம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

6. விக்கின நீக்க நாராசம்

இருகை விலாப்புறத் தியையச் சுட்டில்
செருகிய பெருவிரல் தெறிக்கில்நா ராசம்.

7. விஸ்புரம்

கருதிணைப் பெருவிரல் கனிட்டை முதல்நால்
விரல்நுனி தொடுவது விஸ்புர முத்திரை

8. ஆவாகனம்

இருகை களையும் இணைத்து விரித்து
நிமிர்த்துக் காட்டுதல் நேரா வாகனம்

9. ஸ்தாபனம்

இருகை களையும் இணைத்து விரித்துக்
கவிழ்த்துக் காட்டுதல் காணும் ஸ்தாபனம்

10. சன்னிதானம்

பெருவிரல் உயர்ந்திடப் பிடித்தகை முட்டிகள்
சருவுற இணைத்திடில் சன்னி தானமாம்

11. சன்னிரோதனம்

பெருவிரல் உயர்ந்திடப் பிடித்தகை முட்டிமள்
சருவுற இணைந்திடில் சன்னி ரோதனம்

12 பிம்பம்

பிணித்தகை விரித்துப் பெருவிரல் இணைநடுப்
பணித்திடப் பிடித்துப் பாணியின் நடுவிரல்
விற்புரத் தொடுவது விம்பமுத் திரையே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

13 சூரிய நியாச மகாமுத்திரை

அஞ்சலி தன்னில் அணிவிரல் இரண்டினும்
விஞ்சுமங் குட்டம் மேவில் சூரிய
நியாசமா முத்திரை நேர்படும் அன்றே

14. பத்மம்

பிணித்தகை விரித்துப் பெருவிரல் இணைநடுப்
பணித்திடப் பிடிப்பது பதுமமுத் திரையே.

15 கோவிடாணம்

பிடித்தகைத் தர்ச்சனி பிறங்குமத் திமையினை
விடுத்திடு வதுகோ விடான முத்திரை

16. திராசினி

வலக்கை விரல்களை மடக்கித் தர்ச்சனி
நிமிர்ந்திடப் பிடிப்பது நிகழ்திரா சினியே

17. மிருகீ

கைவிரல் குவித்ததில் கனிட்டை தர்ச் சனியெனும்
மெய்விரல் நீட்டின் மிருகமுத் திரையே

18 நமஸ்காரம்

பெருவிரல் இரண்டும் பிணைந்திட நிமிர்ந்தே
கரமிரண் டுறினமஸ் காரமுத் திரையே

19. உத்பவம்

வலக்கைச் சிறுவிரல் மடங்கத் தர்ச்சனி
நீட்டிமூ விரல்களும் நியதியில் சிறிது
வளையப் பிடிப்பது மன்னுமுத் பவமாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

20. மந்திரங்களை எழுப்பும் நாராசம்

வலக்கை விரித்து மன்னும் தர்ச்சனி
விரலை நீட்டி மேவ வளைத்தவ்
விரலில் கட்டை விரலைச் செருகித்
தெறிப்பது தானே திகழுநா ராசம்.

21. சாணம்

நடுவிரல் மூன்றையும் நன்கு நீட்டி
விரல்கள் இரண்டையும் விலக்குதல் சாணம்

22. பிரசன்னம்

அஞ்சலி தன்னில் அணிவிரல் இரண்டினும்
கட்டை விரலுறல் காண்பிர சன்னம்

23. அதிட்டானம்

உள்ளங் கைகளை உறுகட் டைவிரல்
தொடுவது தானே சொல்அதிட் டானம்

24. உஷ்ணீகம்

கட்டை விரல்நுனி சுட்டு விரல்நுனி
உறுவது தானே உஷ்ணீக முத்திரை

25. சின்முத்திரை

சுட்டு விரல்நுனி கட்டை விரல்நுனி
சேர்வது தானே சின்முத் திரையாம்

26. மோகம்

நடுவிரல் நுனியும் நல்அங் குட்ட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நுனியும் பொருந்துதல் நுவலும் மோகம்

27. திவ்யம்

அணிவிரல் நுனியும் அங்குட்ட நுனியும்
சேர்வது தானே திவ்ய முத்திரை

28. ஆக்ரம்

சுண்டு விரல்நுனி தூயகட் டைவிரல்
நுனியைத் தொடுவது நுன்மை ஆக்கிரம்

29. கடா முத்திரை

கைகள் இணையக் காணடு விரல்கள்
மூன்றும் அகங்கை முன்னுதல் கடாவாம்

30. ஆன்மலீகம்

நடுவிரல் மூன்றையும் நயமுறச் சேர்த்து
ஏனை விரல்கள் இரண்டையும் நீக்கி
ஒருகரத் தால்மற் றொருகரம் சுற்றுதல்
ஆன்ம லீகமென் றறையப் பெறுமே

31 ஆக்ர கண்டம்

கட்டை விரல்நுனி கனிட்டை நுனியுற
நடுவிரல் மூன்றையும் நயந்து நீட்டுதல்
ஆக்கிர கண்டமென் றறையப் படுமே

32. சங்கம்

உள்ளங் கையில் உறுகட் டைவிரல்
தொடுவது தானே சொல்லும் சங்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

33. உஷமுத்திரை

இடமோ திரவிரல் இயல்வல அகங்கை
தொடுவது தானே தோன்றும் உஷவாம்

34. சோடிகா

பிடித்தகைத் தர்ச்சனி பெருவிர லின்னடுத்
துடித்திடத் தெறிப்பது சோடிகா முத்திரை

35. தீட்சணம்

தர்ச்சனி நீட்டிச் சாரும் பிறவிரல்
சேர்த்து மடக்குதல் தீட்சண முத்திரை

36. சங்காரம்

வலக்கை முட்டியில் வளமுறும் கட்டை
விரலை உயர்த்துதல் மேவுசங் காரம்

37. காள கர்ணி

உறுமிரு கைவிரல் உள்ளுறக் குவித்துச்
சிறுவிரல் முதலாச் செறிந்தநால் விரலினும்
துன்றிரு பெருவிரல் தொட்டுற நிமிர்ந்திடில்
கைநிகழ் காள கர்ணிமுத் திரையே

38. லிங்கம்

அடுத்திடும் இடக்கையில் அங்குட் டைத்தப்
பிடித்திடு வலக்கைப் பெருவிரல் நிமிர்த்து
அசைவற இடக்கையில் அங்குலி களைவளைத்
திசைவுறப் பிடித்திடில் இலிங்கமுத் திரையே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

39. பஞ்சமுகி

தன்னினுள் கோத்தகைத் தர்ச்சனி பெருவிரல்
மன்னிய நடுவிரல் மணிச்சிறு விரல்களை
ஆங்குறப் பிடித்தபின் அணிவிரல் இணைநடுப்
பாங்குற நிமிர்ப்பது பஞ்ச முகமே

40. மனோரதம்

இருகையங் குலிகளை எதிர்முகத் துள்ளுறச்
செருகிய பின்னிணைச் செங்கைகள் கூட்டி
நீட்டுதர்ச் சனிகள் நிமிர்ந்துறப் பெருவிரல்
மூட்டிடில் மனோரத முத்திரை ஆகும்

41. திரிசூலம்

பெருகரம் கோத்தபின் பெருவிரல் நடுவிரல்
சிறுவிரல் நீட்டுதல் திரிசூல மாமே

42. மகரம்

திரிசூ லந்தனில் செறிந்ததர்ச் சனியினை
மருவனு மிகையுற வளைத்திடில் மகரம்

43. சிருக்கு

காண்டகு மகரக் கனிட்டையுள் வளைத்ததைத்
தீண்டிடில் பெருவிரல் சிருக்குமுத் திரையே

44. நிரீட்சணம்

பெருவிரல் அணிவிரல் பிடித்ததன் நடுவால்
பரனது நோக்காய்ப் பார்த்தல் நிரீட்சணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

45 புரோட்சணம்

கவிழ்ந்த பதாகை காணும் புரோட்சணம்

46. தாடனம்

தர்ச்சனி விரலால் தட்டுதல் தாடனம்

47 அப்யுட்சணம்

அதோமுகப் பதாகை அப்யுட் சணமாம்.

48 தாளத்திரயம்

இலங்குற மும்முறை இடக்கையில் வலக்கைத்
தர்ச்சனி நடுவிரல் தட்டுதல் தாளம்.

●

1. சம்மாரம்

பக்க வாட்டில் பதாகைசம் மாரம்.

2. சங்கம்

இடக்கைப் பெருவிரல் இயலுற உயர்த்தி
வலக்கை விரல்களால் மாண்புறப் பிடித்து
இடக்கைநால் விரலையும் ஏற உயர்த்துதல்
சங்கமுத் திரையெனச் சாற்றப் பெறுமே.

3. கோகோட்டம்

வலக்கைத் தர்ச்சனி வயங்கும் நடுவிரல்
கூடி அகங்கை குலவல்கோ கோட்டம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

4 அதோமுகி

வலக்கைத் தர்ச்சனி வளமுற நீட்டி
மற்ற விரல்களை மடக்கிப் பிடிப்பது
அதோமுகி முத்திரை ஆகும் அன்றே.

5. சோத்திகம்

பதாகை நிமிர்தல் பயிலும் சோத்திகம்.

6. அதிதீட்சணம்

தர்ச்சனி நீட்டிச் சாரும் பிறவிரல்
மடக்குதல் கீழ்முகத்து மன்னதி தீட்சணம்.

7 கோமுகம்

கனிட்டையங் குட்டம் கனிவுற நீட்டி
மற்ற விரல்களை வளைப்பது கோமுகம்.

8. கோகர்ணம்

வலக்கை நிமிர்த்து மன்னுமங் குட்டம்
நடுவிரல் அடிதொடல் நயந்தகோ கர்ணம்

9. நிரோதனம்

வலக்கைச் சிறுவிரல் வயங்குற நீட்டி
மற்ற விரல்நுனி மன்னுதல் நிரோதனம்.

10. கும்பம்

வலக்கை முட்டியா வைத்ததை இடது
உள்ளங் கைவைத் துற்ற விரல்களால்
பிடிப்பது கும்பமாப் பேசப் பெறுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

11 பிரசன்னம்

அஞ்சலி தன்னில் அனிவிரல் இரண்டினும்
கட்டை விரலுறல் காண்பிர சன்னம்.

12. வராகம்

வலக்கைச் சிறுவிரல் துலக்கும் தர்ச்சனி
நீட்டி நடுவிரல் நேர்பெற மடக்கிக்
கட்டை விரலால் காணஞ மிகையால்
மூக்கைப் பிடித்தல் முன்னும் வராகம்.

13. அங்குசம்

வலக்கை முட்டியில் மன்னுதர்ச் சனியை
நீட்டி வளைப்பது நேரங் குசமாம்.

14. திருமுத்திரை

கட்டை விரல்களைக் கவினுற நீக்கி
மற்ற விரல்வழி வாரியை விடுவது.

15. ஊர்த்துவமுகி

தர்ச்சனி நீக்கி தகும்பிற விரல்களை
மடக்கித் தர்ச்சனி வழிநீர் விடுவது

16. சபா அல்லது சடா

இருகை இணைத்து இயலுறும் கட்டை
விரல்களை மற்ற விரல்களால் பிடிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

17 பஞ

இருகை இணைத்து இயலுறும் கட்டை
விரல்களை மற்ற விரல்களின் அடியில்
மடக்கி அராப்படம் மன்னப் பிடிப்பது.

18. துருவம்

வலக்கைச் சிறுவிரல் வழிநீர் விடுவது.

19. கண்டி

வலக்கையங் குட்ட வழிநீர் விடுவது.

20. செகண்டி

வலக்கையங் குட்டம் வயங்கும் தர்ச்சனி
இடையில்நீர் விடுவது இயலும் செகண்டி.

21. காளகர்ணி

பகரிரு கரங்களைப் பக்க வாட்டில்
சேர்த்து நடுவிரல் திகழும் தர்ச்சனி
அடியில் பொருந்த அங்குட்டம் நீண்டு
மற்ற விரல்கள் விளைந்து பொருந்தக்
காண்பது காள கர்ணி முத்திரை.

22. தியாகம்

அருந்தல் அளித்தல் ஆகுதி ஓம்பல்
திருந்திய விரல்குவி தியாகமுத் திரையே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

23. பரிகை

கைவலம் முதலிடக் கனிட்டைமூக் குந்தி
எய்தவப் பெருவிரல் எதிர்தொடல் பரிகை.

24. பரிகம்

தகைவற முட்டியில் தர்ச்சனி நிமிர்த்துப்
பகர்வலம் சுற்றுதல் பரிகமுத் திரையே.

25. சண்முகி

ஆக்கினை முதல்நடு அணிவிரல் செவிகண்
மூக்கினை அழுத்தல்சண் முகமுத் திரையே.

26. தர்ப்பணம்

இடக்கைநிமிர்த்துவைத் தியலுறும் வலக்கையை
அதன்மேல் கவிழ்த்துவைத் தான தர்ச்சனி
சிறுவிரல் மேலும் சிறுவிரல் தர்ச்சனி
மேலும் வைத்து வியன்நடு விரல்கள்
அகங்கையில் அமைத்தல் ஆன தர்ப்பணம்.

27 மகரம்

இடக்கை கவிழ்ந்துற இயலுறும் வலக்கை
மேலுறக் கட்டை விரல்களை அசைப்பது
மகரமுத் திரையெனப் பகருவ தாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சுண்டுவிரல்—சிறுவிரல், கனிட்டை.

மோதிரவிரல்—அணிவிரல். அனாமிகை.

நடுவிரல்—பெருவிரல், மத்திமை.

சுட்டுவிரல்—தர்ச்சனி

கட்டைவிரல்—அங்குட்டம்

அங்குலி—விரல்கள்.

அகங்கை—உள்ளங்கை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

உ
சிவமயம்
ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கம் துணை

உருவப்பட விளக்கப் பாடல்கள்

1. அஷ்ட தள பத்மம் (சூரிய பூஜை)

நாற்கோண ரேகை நன்கனம் கீறித்
திசைதொறும் வாயில் சீர்பெற அமைத்து
எட்டிதழ் நுனிகள் எண்கோணம் நோக்கும்
தாமரை அமைவது சௌரபூ சைக்கே.

2. தண்டி

செம்மை நிறமும் சேர்பெரு வயிறும்
தொங்கும் சிகையும் தோமறும் வலக்கரத்
தெழுது கோலும் இடது கரத்தில்
அஞ்சன வள்ளமும் ஆர்பவர் தண்டி

3. பிங்களர்

செம்மை நிறமும் திகழ்வலக் கரத்தின்
தர்ச்சனி நீட்டி அச்சுறுத் துதலும்
இடக்கையில் தண்டமும் ஏற்பவர் பிங்களர்.

4. கணபதி

செந்தா மரையில் திகழ்பது மாசனத்
தமர்ந்து பாசம் அங்குசம் தந்தம்
மாம்பழம் செந்நிறம் மன்னுவர் கணபதி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

5. குரு

சடாமகு டத்துடன் சார்தரு முந்நூல்
யோக பட்டம் உயர்சின் முத்திரை
கொண்டுசெந் நிறத்துடன் குரவர் விளங்குவார்.

6. தீப்தை முதலிய சத்திகள்

சர்வா பரண பூஷிதர் தாமரை
சாமரக் கையர் தளிர்நிற மாதர்
தீப்தை முதலாச் செப்புமெண் சத்திகள்

7. சிவசூரியன்

வெண்டா மரைமலர் மேலமர் வட்ட
மண்டல நடுவில் மாதுளம் பூநிறம்
கொண்டு தண்டுகள் கூடிய தாமரை
மலர்கள் இரண்டு வாகுவில் பொருந்தச்
சேர்த்த கரத்தினர் சிவசூ ரியரே.

8. சூரிய அங்க தேவர்கள்

செந்நிறம் பேரெழில் செந்தா மரைமலர்
அபயக் கரத்தினர் அங்க தேவரே.

9. சூரிய அஸ்திர தேவர்

கண்டவர் அஞ்சும் கருநிறம் முகத்துடன்
கோரப் பல்லும் கொண்டவர் அஸ்திரர்.

10. சந்திரன் முதலிய கிரகங்கள்

இந்துமுல் லைப்பூ இனிய செவ்வாய்
பவளம் புந்தி பகரும் தங்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

